
கழக வெளியீடு—௨௧௧

# குமரிக் கண்டம்

அல்லது

# கடல் கொண்ட தென்னாடு




பதிவு
செய்தது

விலை
ரூ. 1–4–0

கழக வெளியீடு—உகக

# குமரிக் கண்டம்

அல்லது

# கடல் கொண்ட தென்னாடு

❋

திரு K. அப்பாத்துரைப் பிள்ளை, எம். ஏ.,
அவர்கள் எழுதியது.

❋

: திருநெல்வேலி, தென்னிந்திய :
: சைவசித்தாந்த :
நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி : : சென்னை

விக்கிரம—பங்குனி

*(Copy-right)*

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
:: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., ::
TIRUNELVELI & MADRAS.

MARCH 1941

The Jupiter Press, Madras.

# பதிப்புரை

இலங்கையிலுள்ள ஒரு மலை முகட்டில், நடுப்பகல் வேளையில் நின்று இந்துமாக் கடலுள் நோக்கினால், கடலினடிப்பகுதியில் பொற்கலச மொன்று காணப்படுமென்றும், அஃது இராமாயண காலத்தில் இலங்கையின் மன்னனாயிருந்த இராவணேஸ்வரனின் அரண்மனைக் கலசம் என்றும் பலர் கூறக் கேள்வி. இக் கூற்று உண்மையே யாக; பொய்யே யாக! இந்துமாக் கடலுள் ஒரு பரந்த நிலப்பகுதி அழுந்தியுள்ளது என்பதை இது குறிக்கும் என்று கொள்வதனாலெய்தும் இழுக்கொன்று மில்லை. கடல்க ளெல்லாவற்றுள்ளும் இந்துமாக் கடல் ஆழம் மிகுந்த தென்பதும், பரந்ததொரு நிலப்பகுதி அக் கடலுள் ஆழ்ந்த காலத்தேதான், உலகில் மிகவும் உயரமானதாகக் கருதப்படுகின்ற இந்திய வடவெல்லையாகிய இமயமலை மேலெழுந்த தென்பதும் மேற் கருத்துக்கு அரண் அளிப்பனவாகும்.

இனி, தமிழ்ப் பெருங் காப்பியங்க ளைந்தனுள் ஒன்றாகிய **சிலப்பதிகாரத்தில்** வரும் வேனிற் காதையின் முதல் வரியாகிய "நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்" என்பதற்கு உரை யெழுதிய **அடியார்க்கு நல்லார்**, "தொடியோள்-பெண்பாற் பெயராற் குமரி யென்பதாயிற்று; ஆகவே, தென்பாற் கண்ணதோர் ஆற்றிற்குப் பெயராம்; ஆனால், நெடியோன் குன்றமும் தொடியோள் நதியு மென்னாது பௌவமு மென்றது என்னையெனின்" என்ற வினாவை எழுப்பிக்கொண்டு, அதன் விடையாகப் பின்வருமாறு விளக்கியுள்ளார்:

"முதலூழி இறுதிக்கண் தென் மதுரையகத்துத் தலைச் சங்கத்து......நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் முது

குருகும் களரியாவிரையு முள்ளிட்டவற்றைப் புனைந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு இரீயினார் காய்சினவழுதி முதற் கடுங்கோனீறாயுள்ளார் எண்பத்தொன்பதின்மர்; அவருட் கவியரங் கேறினார் எழுவர் பாண்டியருள் ஒருவன் சயமாகீர்த்தியனாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீயினான். அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத் திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னும் ஆற்றிற்கும், குமரி யென்னும் ஆற்றிற்கு மிடையே எழுநூற்றுக் காவத ஆறும், இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ் தெங்க நாடும், ஏழ் மதுரை நாடும், ஏழ் முன்பாலை நாடும், ஏழ் பின் பாலை நாடும், ஏழ் குன்ற நாடும், ஏழ் குணகாரை நாடும், ஏழ் குறும்பனை நாடு மென்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும், குமரி கொல்ல முதலிய பன்மலை நாடும், காடும் நதியும் பதியும் தடநீர்க் குமரி வட பெருங் கோட்டின் காறும் கடல்கொண் டொழிதலாற் குமரியாகிய பௌவ மென்றா ரென்றுணர்க. இஃது என்னை பெறுமாறெனின், "வடிவே லெறிந்த வான்பகை பொறாது பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள" என்பதனானும், கணக்காயனார் மகனார் நக்கீரனா ருரைத்த இறையனார் பொருளுரையானும், உரையாசிரியராகிய இளம் பூரண வடிகள் முகவுரையானும், பிறவாற்றானும் பெறுதும்."

இதனால், பரந்ததொரு நிலப்பகுதி இன்றைய குமரி முனைக்குத் தென்பால் முன்னர் இருந்துவந்த தென்பதும், அது பின்னர்க் கடல்கோட் பட்ட தென்பதும், இவ் வரலாற் றுண்மைகள் ஏறக்குறைய கி. பி. ஆயிரம் ஆண்டுகள்வரை யில் தமிழ் நாட்டாரிடையே பரவி வழங்கிவந்தன என்பதும் இலக்கிய வாயிலாக நிறுவப்படும். "செங்கோன் றரைச் செலவு" என்று சில ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த சிறு

நூலும் இதனை வலியுறுத்துவதாகக் கொள்ளக் கிடக்கின்றது. கடல் கோட் பட்ட இந் நிலப் பகுதியே இந் நிலவுலகத்தில் முதன்முதலாக உயிர்கள் தோன்றிய தொன்னிலப் பகுதியாக இருத்தல்வேண்டு மென்று ஆராய்ச்சியாளர் பலர் கருதுகின்றனர். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தின் முன்தோன்றி மூத்த பழங்குடி என்ற கல்லாடர் கருத்தும் இந் நிலப் பகுதியை ஒருவாறு குறிக்கும் போலும்! குறளுரையாசிரியர் பரிமேலழகர், "தென்புலத்தார்" என்பதற்குப் "பிதிரர்" என்று பொருளுரைத்து, "பிதிராவார் படைப்புக் காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி. அவர்க்கிடம் தென்றிசையாதலின் தென் புலத்தாரென்றார்" என்று விரித்துரைத்தது இந் நிலப்பகுதியில் வாழ்ந்த மக்களையோ என்பது ஆராயத்தக்கது.

அளப்பரிய பெருமையையும், தொன்மைச் சிறப்பையும் அளிக்கவல்ல இவ் வரலாற் றுண்மைகளைத் தமிழ்நாட்டாரிற் பெரும்பாலோர் இன்னும் அறியாதிருப்பதும், அறிந்த ஒரு சிலருள்ளும் ஒரு பகுதியினர் நம்பாதிருப்பதும் தமிழ் நாடு செய்த தவக்குறையேயாம். இவ் வரலாற்றினால் எய்தும் பெருமைக்குரிய தமிழ்மக்களே இவ்வாறு புறக்கணித்தால், சிறப்பிப்பார் வேறு யாரோ?

பெரிதும் வருந்தத்தக்க இப் புறக்கணிப்பு ஒருபுற மிருக்க, மேனாட்டாராய்ச்சியாளர்கள் இத்துறையில் துணிந்து இறங்கிப் பல இடுக்கண்களையும் இடர்ப்பாடுகளை யும் பொருட்படுத்தாமல், அரிதில் முயன்று பெரும் பாடு பட்டு ஆராய்ந்து தேர்ந்து, கடல்வாய்ப்பட்ட தென்னிலப் பகுதியைப் பற்றிய பல உண்மைகளை ஆங்கில நூல்கள் வாயிலாய் எழுதி வெளியிட்டுள்ளார்கள். தென்னிந்தியாவின் தென்பகுதியை யடுத்து, "இலெமூரியா" என்று பரந்து பட்ட ஒரு நிலப்பகுதி இருந்த தென்பதும், அதன் மக்கள்

நாகரிகம் முதிர்ந்தவ ரென்பதும், அவர்கள் நாகரிகமும் தமிழர் நாகரிகமும் பலபுடை ஒத்தன வென்பதும், பிறவும்* அவர்கள் ஆராய்ச்சியிற் போந்த உண்மைகள். சிறந்த இவ் வாங்கில நூல்கள் வெளிவந்து ஆண்டுகள் பலவாகியும், தமிழ் மக்கள் அவை தமிழிலில்லாக் குறையால் படித்து உண்மை யுணரும் வாய்ப்பின்றி யுள்ளனர் என்ற பெருங்குறையை அறிந்து அதனை ஒருவாறு நீக்கக் கருதியே **குமரிக்கண்டம்** என்ற பெயருடன் இந் நூலைத் தமிழில் வெளியிடுகிறோம். தம் தொன்மையும், பெருமையும், தனிச் சிறப்பும் அறியாமல் துயில்கொள்ளுந் தமிழரைத் தட்டி எழுப்ப வரும் இந் நூலைத் தமிழ் நாட்டார் ஏற்றுப் போற்றி ஊக்கம் அளிப்பாராக.

இந்நூலை எளிய தமிழில் பல தலைப்புகளில் விளங்க எழுதியுதவிய **இதன் ஆசிரியரவர்களுக்கும்**, அச்சிடுங்கால், அச்சுப்படிகளைப் பிழை பார்த்துத் திருத்தியும் ஆங்காங்கு வேண்டுங் குறிப்புக்களை உதவியும் செம்மை செய்து கொடுத்த **தருமபுர ஆதீன வித்துவான் காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை** B. A., அவர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

சென்னை,
17-3-41. **சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

---

* "சிவன் கோயில் (Shiva's Temple) என்று வழங்கப் படுகிற ஒரு திட்டு அமெரிக்கக் கானடாவில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது நூறுயிரம் ஆண்டுகட்கு முற்பட்டுள்ளதென ஆராய்ச்சியாளராற் கணக்கிடப்படுகிறது. இதில் பல புதுமையான விலங்கினங்களும் புற்பூண்டுகளும் காணப்படுகின்றன வெனவும் சொல்லுகிறார்கள். அமெரிக்கப் பல் பொருட்காட்சிச் சாலையார் இத் திட்டிற் புகுந்து ஆராய முயன்று வருகின்றனர். சிவன் கோயில் எனும் பெயர் ஆங்குள்ளமையால் தமிழர் நாகரிகம் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே அமெரிக்கா வரையிற் பரவி யிருந்ததென்பது புலப்படுகிறது.

செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு கரு - பரல் உ
பக்கம் - அஅ.

# பொருளடக்கம்


க. குமரிநாடு பற்றிய தமிழ்நூற் குறிப்புக்கள் ... 1

உ. மொழிநூல் முடிவு ... 9

௩. தென் இந்தியாவின் பழைமைக்கான சான்றுகள் 13

ச. குமரிக் கண்டம் (இலெமூரியா) என்ற ஒன்றிருந்ததா? ... 19

ரு. ஞாலநூல் காலப் பகுதிகள் ... 39

சு. உலக மாறுதல்களும் இலெமூரியாக் கண்டமும் ... 46

எ. இலெமூரியாவின் இயற்கை இயல்புகள் ... 58

அ. இலெமூரிய மக்களது நாகரிகம் ... 65

கூ. தற்கால நாகரிகமும் இலெமூரியரும் ... 85

ω. இலெமூரியாவும் தமிழ் நாடும் ... 92

# படங்கள்


1. இலெமூரியா (பண்டைய நிலை) ... ... 8
2. இலெமூரியா (குறுகிய நிலை) ... ... 56
3. இலெமூரியாவில் வாழ்ந்த உயிரினங்கள் ... 61
4. ப்ளையோஸாரஸ் .... ... 63
5. இலெமூரிய சமயக் குறிகள் ... ... 82
6. இலெமூரிய எழுத்துக்கள் ... ... 82
7. ஷாஸ்தா மலை .... ... 83
8. ஷாஸ்தா ... ... 84

# குமரிக் கண்டம்

## அல்லது

# கடல்கொண்ட தென்னாடு

---

### க. குமரிநாடுபற்றிய தமிழ்நூற் குறிப்புக்கள்

இன்றைய தமிழ்நாடு **திருவேங்கடம்**முதல் **கன்னியாகுமரி** வரை பரந்து கிடக்கின்றது. இதில் இன்றைய அரசியற் பிரிவுமுறைப்படி ஏறக் குறையப் பத்துக் கோட்டங்கள் (ஜில்லாக்கள்) அடங்கியுள்ளன. ஆனல், முன் நாட்களில் தமிழ்நாட்டின் பரப்பு இதனினும் பன்மடங்கு மிகுதியாக இருந்ததென்று கொள்ளச் சான்றுகள் பல உள்ளன.

மிகப் பழைய இலக்கணங்களிலும் நூல்களிலும் உரைகளிலும் குமரிமுனைக்குத் தெற்கே நெடுந் தொலை நிலமாயிருந்தது என்றும், அந் நிலப்பகுதி பல்லூழிக் காலம் தமிழ்நாட்டின் ஒரு கூறுயிருந்து பின் படிப்படியாகக் கடலுள் மூழ்கிவிட்டதென்றும் ஆசிரியர்கள் உரைக்கின்றனர்.

இப் பரப்பிலிருந்த நாடுகள், அரசுகள், மலைகள், ஆறுகள் ஆகியவற்றைப்பற்றிய குறிப்புக்களும், விவரங்களும் **சிலப்பதிகாரம்**, **புறநானூறு** முதலிய பழைய நூல்களில் காணப்படுகின்றன. ஆங்கிருந்த மலைகளுள் **குமரிமலை** ஒன்று என்றும், ஆறுகளுள்

**குமரி, பஃறுளி** இவை தலைமையானவை என்றும் தெரிகின்றன.

இந் நாடு தமிழகத்தின் ஒரு பகுதிமட்டுமன்று; தமிழரினம், தமிழ் நாகரிகம் என்பவற்றின் தாயகம் என்றே கூறவேண்டும். ஏனெனில், தமிழைத் தொன்றுதொட்டு வளர்த்த சங்கங்கள் மூன்றனுள், தலைச் சங்கம் நடைபெற்ற **தென்மதுரை**யும் இடைச் சங்கம் நடைபெற்ற **கவாடபுர**மும் இக் குமரிப் பகுதியிலேயே இருந்தன.

எனவே, தலைச்சங்க காலமாகிய முதல் ஊழியிலும் இடைச்சங்க காலமாகிய இரண்டாம் மூன்றும் ஊழிகளிலும் இக் குமரிப் பகுதியிலேயே தமிழர் ஆட்சியும் நாகரிகமும் மொழிவளர்ச்சியும் ஏற்பட்டன என்பதும், தெற்கிலிருந்து கடல் முன்னேறி வரவர அவர்கள் வடக்கு நோக்கிப் பரந்து சென்றனர் என்பதும் விளங்குகின்றன.

தமிழ்நூல்களில் மூன்று கடல்கோள்களைப் பற்றித் தெளிவான குறிப்புக்கள் காணப்படுகின்றன.

முதல் கடல்கோளால் பஃறுளியாறும் குமரிக் கோடும் கடலில் கொள்ளப்பட்டன. பஃறுளி யாற்றின் கரையிலிருந்த தென்மதுரையே பாணடியன் தலைநகரும், தலைச்சங்க மிருந்த இடமும் ஆகும். இக் கடல்கோள் நிகழ்ந்த காலத்திருந்த பாண்டியனே நெடியோன் என்று **புறநானூ**ற்றிலும், நிலந்தரு திருவிற் பாண்டியன் என்று **தொல்காப்பியப் பாயிரச்** செய்யுளிலும் குறிக்கப்பட்டவனுவன்.

கடல்கோளின் பின்னர் இவன் வடக்கே போய்க் கவாடபுரத்தைத் தலைநகராக்கிக் கொண்டான். இங்கேதான் இடைச்சங்கம் நடைபெற்றது.

தலைச்சங்க நாட்களில், பஃறுளியாற்றிற்கும் குமரி யாற்றிற்கும் இடைப்பட்ட பகுதி அளவிலும் சிறப்பிலும் பாண்டி நாட்டின் மிகச்சிறந்த பாகமாயிருந்திருக்க வேண்டும். அது 49 நாடுகளாக வகுக்கப்பட்டிருந்ததென்றும், இரண்டு ஆறுகட்கு மிடையே 700 காவத அளவு அகன்று கிடந்ததென்றும் அறிகிறோம்.

இரண்டாவது கடல்கோளால கவாடபுரம் கடல் கொள்ளப்பட்டது. அதன்பின் சிலகாலம் **மணவூர்** பாண்டியனை தலைநகராக இருந்தது. பின் மூன்றும் முறைக் கடல்கோளால் அம் மணவூரும், குமரி யாறும் அழியவே, பாண்டியன் மதுரைவந்து அங்கே கடைச்சங்கத்தை நிறுவினான்.

சிலப்பதிகாரத்தில் மாடலன் குமரி யாற்றில் நீராடியதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் கதை முடிந்ததன்பின் எழுதப்பெற்ற பாயிரத்தில் தொடியோள் பௌவ மெனக் குமரி கடலாகக் கூறப்பட்டுள்ளது. இவ்விரு காலப்பகுதிகளுக்கிடையே, அதாவது கோவலனிறந்து சில நாட்களுக்குப் பின்னுகக் குமரியாறு கடல் கொள்ளப்பட்டுக் குமரிக் கடலாயிற்று என்பர் **பேராசிரியர்.**

குமரியாறு கடலுள் அமிழ்ந்த காலத்தை ஒட்டியே **மணிமேகலையுட்** கூறப்பட்டபடி காவிரிப்பூம் பட்டினம் கடல் வயமானது. வங்காளக் குடாவில் உள்ள சில பெரிய தீவுகளும் இதனுடன் அழிந்திருக்க வேண்டும். "நாகநன் னாட்டு நானூ றியோசனை வியன்பா தலத்து வீழ்ந்துகே டெய்தும்" என்றது காண்க.

இதனோடு, மேற்குத் தொடர்ச்சிமலை இன்று கடலிருக்கும் இடத்திலும் தொடர்ந்து கிடந்ததென்றும்,

ஆண்டு அதற்கு **மகேந்திரம்** என்பது பெயர் என்றும் வடநூல்கள் கூறுகின்றன. இராமாயணமும் அனுமான் கடல் தாண்டியது மகேந்திர மலையி லிருந்தே யென்றும், அது பொதிகைக்கும் கவாட புரத்திற்கும் தெறகில் இருந்ததென்றும் விவரித் துரைக்கின்றது.

முருகன் சிவன் முதலிய தமிழ்த் தெய்வங்கள் மகேந்திர மலையில் உறைந்தனர் என்றே தமிழர் முத லில் கொண்டனர். கடல்கோளின்பின் அவர்களது இடம் அன்றைய தமிழ்நாட்டின் வடக்கில் இருந்த மேலைத்தொடர் என்று கொள்ளப்பட்டு, வடமலை ஆயிற்று. நாளடைவில் வடமலை என்பதே மேரு என்றும் கயிலை என்றும் கருதப்பட்டது. **சிவதரு மோத்தரததில்** குறிப்பிட்டுள்ள உன்னதத் தென் மயேந்திரம் இதுவே என்க. **திருவாசகத்தில்,**

> மன்னு மாமலை மகேந்திர மதனில்
> சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்

என்று இதனையே **மணிவாசகப் பெருந்தகையார்** ஆக மங்களருளிய இடமாகக் குறிப்பிடுகின்றனர்.

தமிழ்நாட்டின் தென்கரை மட்டுமன்று, அதன் கீழ்க்கரையும் இலங்கையுங் கூடப் பல சிறு கடல் கோள்களுக்கு உட்பட்டன என்று தோன்றுகின்றது. வடமொழி வானநூலார் தமது உலக நடுவரை[1]யை இலங்கையில் ஏற்படுத்தினர். ஆனால் இன்று அஃது இலங்கைவழிச் செல்லாமல் கடலூடு செல்வதி லிருந்து, அந்த இடம் முன்பு இலங்கையைச் சார்ந் திருந்ததென்று உய்த்துணரக்கிடக்கின்றது.

[1] Meridian.

மேலும் கேள்வியறிவால் தென் இந்தியாவைப் பற்றி எழுதும் **மெகஸ்தெனிஸ்**[1] என்ற கிரேக்க அறிஞர் இலங்கையைத் தாப்பிரபனே[2] என்று கூறுவதுடன் அஃது இந்தியாவினின்று ஓர் ஆறறிஞல் பிரிக்கப்பட்டுள்ளது என்றும் கூறி யிருக்கின்றார். இதிலிருந்து **தாமிரபர்ணி** என்ற பொருநையாறு கடலுள் மூழ்கிய நிலத்தின் வழியாக இலங்கையூடு சென்றிருக்க வேண்டும் என்றேற்படும்.

கந்தபுராணத்தில் சொல்லப்படும் வீரமகேந்திரம் இலங்கையின் தெற்கே பல கடல்கோள்களுக்குத் தப்பிக்கிடந்த ஒரு சிறு தீவேயாகும்.

கிழக்குக்கரையில் காவிரிப்பூம்பட்டினமேயன்றி வேறு பல தீவுகளும் அழிந்தன என்று மேலே கூறினேம். புதுச்சேரிக்குமேற்கே பாகூர்ப்பாறையிலுள்ள கல்வெட்டில் அது கடலிலிருந்து நாலு காதம் மேற்கே இருப்பதாகக் குறிப்புக் காணப்படுகிறது. ஆனல் இன்று அது கடலிலிருந்து ஒருகாதமே விலகியிருப்பதால் கடல் 3 காதம் உட்போந்ததென்பது விளங்கும்.

சீகாழி, தோணிபுரம் என்றழைக்கப்படுவதும், மதுரைவரை ஒருகால் கடல் முன்னேறிவர, பாண்டியன் வேல் எறிந்து அதனை மீண்டும் சுவறச் செய்தான் என்ற திருவிளையாடற் கதையும், கன்னியாகுமரியில் இன்று உள்ள மூன்று கோயில்களுள் ஒன்று கடலுள் மூழ்கி அழிந்துகொண்டிருப்பதாகச் சொல்லப்படுவதும் தமிழ்நாட்டுள் கடல் பலகால் புகுந்து அழிவு செய்த தென்பதைக் காட்டுவனவாகும்.

தலை இடை கடைச் சங்கங்களில் இன்னின்ன புலவர்கள் இருந்தனர், இன்னின்ன நூல்கள் செய்

[1] Megasthanes. [2] Taprabane.

தனர், இன்ன இலக்கணம் கையாளப்பட்டது என்ற விவரங்கள் **இறையனாரகப்பொருளுரையிலும்**, பிற நூல் களிலும் கூறப்படுகின்றன.

கடல்கோள்கள் காரணமாகவும், போற்றுவாரற் றும் அந்நாளைய நூல்களுள் பல இறந்துபட்டன. கடைச்சங்கப் புலவர்கள் காலத்திலும், ஏன், பிந்திய நாட் புலவர்கள் காலத்திலுங்கூட, இவற்றுட் பல நூல்கள் முழுமையாகவோ பகுதியளவிலோ நிலவி யிருந்தன என்பது அவர்கள் குறிப்புக்களாலும் மேற் கோள்களாலும் அறியக்கிடக்கின்றது.

இங்ஙனம் தலைச்சங்க இடைச்சங்க நூல்கள் மிகுதியாக அழிந்துபோக, நமக்கு இன்று மீந்துள்ளது **தொல்காப்பியம்** என்ற இலக்கண நூலொன்றேயாகும். அகத்தியம் முதலியவேறு பலநூல்களுக்கு மேற்கோள் கள் வாயிலாகச் சில சில பாக்களோ அல்லது குறிப்பு வாயிலாகப் பெயர்மட்டிலுமோ கிடைக்கின்றன.

ஆன்றோர் உரையும், முன்னோர் மரபும் இங்ஙனம் தெளிவாகச் சங்கங்களது வரலாற்றையும் குமரிநாட் டின் மெய்ம்மையையும் வலியுறுத்துகின்றன ; ஆயி னும் இக்காலத்தார் சிலர் இவற்றை ஐயுறத்தொடங்கு கின்றனர். இந்நூல்களில் சங்கங்கள் நடைபெற்ற தாகக் கூறும் கால எல்லை ஆயிரக் கணக்காயிருப் பதும், அவை தரும் நூற்பட்டிகையுள் பெரும்பாலன இன்று காணப்பெறாமையுமே இவ் வையப்பாட்டிற் குக் காரணமாவன.

தமிழ நாகரிகத்தின் தொன்மையைக் கணித்தறி வார்க்கு இச் சங்க வாழ்வின் எல்லை அவ்வளவு நம்பத் தகாததன்று. இன்று வட நாட்டில் **ஹரப்பா**[1]

---

[1] Harappa.

**மொஹெஞ்சொ தாரோ**[1] முதலிய இடங்களில் கண்ட கல்வெட்டுக்களால் தமிழர் நாகரிகம் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகட்கு முன்னரேயே இந்திய நாடு முழுமையும் பரவியிருந்தது என்பது புலனுகின்றது.

அதோடு அவற்றைப்பற்றிய குறிப்புக்கள் காலத்தாலும் இடத்தாலும் பிரிக்கப்பட்ட வேறுவேருன பல நூல்களிலும் ஒன்றுக்கொன்று முரணுகாமல் பொருத்தமாகவே கூறப்பட்டிருக்கின்றமையும், தமிழ் நூல்களேயன்றி வ்டநாட்டு நூற் குறிப்புக்களும் பண்டைய கிரேக்க அறிஞர்தங் குறிப்புக்களும் சங்க வரலாற்றைப் பல இடங்களில் வலியுறுத்துகின்றமையும், தற்கால மேனுட்டு ஆராய்ச்சி யுரைகளும், கண்கூடான பல நடைமுறை யறிவுகளும் சேர்ந்து இச்செய்தி வெறும் புனைந்துரையன்று, மரபு வழக்காக வந்த மிகப் பழமையானதொரு செய்தியே என்பதை மெய்ப்பிக்கும்.

வடமொழிச் சான்றுகளுட் சிலவற்றை முன்பே குறிப்பிட்டுள்ளோம். அவற்றுள் மறுக்கக்கூடாத தெளிவான சான்று முதல் கடல்கோள் பற்றியதாகும். அக் கடல்கோளுக்குத் தப்பி நின்று திரும்பத் தமிழ் நாகரிகத்தை நிலைநாட்டிய நிலந்தரு திருவிற் பாண்டியனைத் திராவிட நாட்டரசனுகிய சத்திய விரதனென்றும், அரசமுனி என்றும், மனு என்றும் வடநூல்கள் பலவாருகக் கூறின.

ஊழி வெள்ளத்தி னின்றும் தப்பி அவனது பேழை தங்கிய இடம் பொதிகை மலை ஆகும். இதனையே வடமொழியாளர் மலயமலை என்பர்.


[1] Mohenjo-Daro.

இஃது அன்றையப் பாண்டின் பெரும் பகுதிக்கும் வடக்கே இருந்ததால் வடமலை என்னப்பட்டுப் பின் பெயர் ஒற்றுமையால் மேருவுடன் வைத்தெண்ணப் பட்டது.

இவ் வெள்ளக் கதைகள் பல புராணங்களிலும் காணப்படுபவை, அன்றியும் இராமாயணத்தில் இரண்டாம் ஊழியில் மணிகளாலும் முத்துக்களா லும் நிரம்பப் பெற்றுச் சிறப்புடன் விளங்கிய பாண் டியன் தலைநகரான கவாடபுரத்தைப் பற்றியும், மகா பாரதத்தில் அதன்பின் மூன்றும் ஊழியில் தலைநகரா யிருந்த மணலூரைப் பற்றியும் விவரிக்கப்பட்டிருப் பதுங் காண்க.

இங்ஙனம் இயற்கைச் சான்றுகளும், தென் மொழி வடமொழி மேற்கோள்களும் ஒரே முகமாக நிலைநாட்டும் இவ்வுண்மையை எளிதில் மறுக்கவோ புறக்கணிக்கவோ இயலாது.

பின்வரும் பிரிவுகளில் மேல்நாட் டறிஞர் பல் வேறு ஆராய்ச்சித் துறைகளையும் சீர்தூக்கிப் பார்த்து இதே முடிவை ஏற்கின்றனர் என்பதை எடுத்துக் காட்டுவோம்.




இலெமூரியா [illegible]ண்டைய நிலை)

கு. 8

## உ. மொழிநூல்[1] முடிவு

மனித நாகரிகத்தின் பழமைபற்றிய செய்திகளை ஆராய்ந்து முடிவுகட்டும் வகையில் பல அறிவியற் பகுதிகள் நமக்குப் பயன்படுகின்றன. ஆயினும் முதன்முதலாக அத் துறையில் வழிகாட்டியாய் நின்றது மொழியியல் என்றே கூறவேண்டும்.

உலகிலுள்ள பல மொழிகளையும் பயின்று ஆராய்ந்து அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகள் மூலம் அவற்றைக் கோவைப்படுத்துவது மொழியியலார் போக்கு. அங்ஙனம் செய்தோர் பலரும், உலகில் தென் இந்தியா தொடங்கிப் பல பக்கங்களிலும் நெடுந் தொலை பரந்து கிடக்கும் மொழிக்கோவைகள் பல உள்ளன என்று கண்டனர்.

அவற்றுள் ஒன்று தென் இந்தியா முதல் இங்கிலாந்து நாட்டிலுள்ள வேல்ஸ்வரை ஒரே கோவையாய்க் கிடக்கின்றது. இக் கோவையை அறிஞர் ஆரிய இனம் என்றனர்.

இவ் வாராய்ச்சியை யொட்டிப் பலர் மனித நாகரிகம் அவ் ஆரிய இனத்தார் முதலில் இருந்த இடத்திலிருந்து ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் சென்று பரந்தது எனக் கொண்டனர். ஆரியர் முதலிடமும் இதற்கேற்ப நடு ஆசியா அல்லது தென் உருசியா என்று கொள்ளப்பட்டது.

**பால கங்காதர திலகர்** என்ற வரலாற் றறிஞர், மனிதர் முதலிடம் நடு ஆசியாவு மன்று; தென் உருசியாவு மன்று, வடதுருவப் பகுதியே என்று பல சான்றுகளுடன் காட்டினர்,

1 Philology.

இக் கொள்கை ஆரிய இனத்தைப்பற்றிய வரையில் ஒவ்வுமாயினும், மனித நாகரிகத்தின் தொடக்கத்திற்குப் பயன்படாதாயிற்று. ஏனெனில், ஆரிய இனத்தார் வந்த இடங்கள் பலவற்றுள் அவரி னும் உயர்ந்த நாகரிக முடைய மக்கள் வாழ்ந்து வந் தனர் என்பது தெளிவாகக் காணப்படுகின்றது.

கிரேக்க நாட்டில் முகைனிய[1] நாகரிகமும் ஐகய[2] நாகரிகமும் கி. மு. 3000 ஆண்டுமுதல் மேலோங்கி யிருந்தன. இந்தியாவில் திராவிட நாகரிகத்தின் சிறப்பை வான்மீகியார் இராமாயணமும் இருக்கு வேத உரைகளும் ஏற்கின்றன.

ஆரிய இனக்கோவையே யன்றி வேறு பல கோவைகளும் தென் இந்தியாவரை எட்டுகின்றன என்று மேலே கூறினோம். எனவே, நாகரிகம் தெற்கி லிருந்து வடக்குநோக்கி ஏன் சென்றிருக்கக் கூடாது என்பதும் ஆராயத்தக்க தொன்றாகும்.

மொழியியல் ஆராய்ச்சி இத்தகையதோர் கொள் கையை எழுப்பப் போதியதாயினும் அதன் உண் மையை நிலைநாட்டப் போதிய சான்றுகளை உடைய தன்று. மேலும், மொழிக் கோவைகளது போக்கால் மொழித் தொடர்பு இருக்கிறது என்று மட்டும் சொல்ல முடியுமேயன்றி, அத் தொடர்பின் போக்குத் தெற்கினின்றும் வடக்கு நோக்கியதா, வடக்கு நின்றும் தெற்கு நோக்கியதா என்பதை வரையறுக்கமுடியாது.

இந் நிலையிலேதான் வானநூல்,[3] ஞாலநூல்,[4] நில நூல்,[5] ஆவிமண்டல நூல்[6] முதலிய அறிவியற் பகுதிகள் நமக்குப் பயன்படுகின்றன. இவை யனைத்தும் ஒரே

[1]Mycaenian. [2]Aegean. [3]Astronomy. [4]Geology. [5]Geography. [6]Meteorology.

முகமாக உலகில் மிகப் பழைய பகுதியும், நாகரிகத் தொடக்கம் ஏற்பட்ட இடமும் தென் இந்தியா அல்லது அதற்கும் தெற்கில் இருந்த **இலெமூரியா** ஆகவே இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன.

ஆயினும் உண்மையை நிலைநாட்டும் வகையில் மொழி இயல் ஆராய்ச்சியால் ஏற்படும் துணை கொஞ்ச நஞ்சமன்று. எடுத்துக்காட்டாக இந்தியாவில் ஆரியர் நாகரிகத் தாக்கு மிகவும் குறைவு; திராவிடர் நாகரிகத் தாக்கே பெரும்பான்மை என்பதை, அண்மையில் சிந்துநாட்டில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் காட்டுவதற்கு முன்னமே, தெளிவுபட உணர்த்தியது மொழியியலே.

"கற் காலம்"[1] என்ற தலைப்புக் கொண்ட நூலில் திரு. **பி. டி. சீனிவாச ஐயங்கார்** அவர்கள், 'மொழி ஒப்புமையால் நோக்கத், தென் இந்திய மொழிகள் மட்டுமல்ல, வட இந்திய மொழிகளும், வடமொழியுங் கூடச் சொற்பயன், சொற்றொடர் அமைப்பு முதலிய வகைகளில் ஒன்றுபோலவே இருக்கின்றன. இம்மொழிகளுள் ஏதாவதொன்றினின்றும் இன்னொன்றுக்கு மொழிபெயர்க்க வேணடுமாயின் அகரவரிசையின் துணைகொண்டு மொழிக்கு மொழி மாற்றினால் போதும்' என்று கூறுகிறார்.

இவ் வகையில் வட இந்திய மொழிகள் பிற ஆரிய மொழிகள் போலாமை நோக்க, அவற்றின் அடிப்படைச் சட்டம் வடமொழியோ ஆரியமோ அன்று; பழந் தமிழ் அல்லது திராவிட மூல மொழியே யாகும் என்பது வெள்ளிடைமலை. இன்னும் சற்று நுணுகி நோக்கினால் வட நாட்டார் தம்

[1] Stone Age.

மூலமொழி எனக் கொண்ட வடமொழிதானும் திராவிடத்தாக்கு உடையதே என்பது தெரியவரும்.

மேலும் மொழி இயலின் தந்தை என்று புனைந்து கூறப்படும் பேரறிஞர் **கால்டுவெல்**[1] அவர்கள், திராவிடமொழிகள் சித்திய[2] மொழிகளுடன் இன்றியமையா உறவுடையது என்று கூறுகிறார். அதாவது நான்காம் ஆறும் வேற்றுமை யுருபுகள், உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, எதிர்மறை வினை, தழுவும்சொல் முந்திநிற்றல், எச்சங்களே உரிச்சொல்லாக நிற்றல், வினைத்தொடர்ச்சியினிடமாக எச்சங்களையாளுதல், உயிரிடைப்பட்ட வன்மை திறந்த உயிர்ப்புடைய மென்மை இனமாக மாறி ஒலித்தல், நாவடிமெய்களாகிய ட ண ள உடைமை, சுட்டு, எண், இடப்பெயர் முதலியவை இம் மொழிகளுள் ஒற்றுமை உடையவையாகக் காணப்படும். சித்திய இனம் ஆசியா ஐரோப்பா முழுமையினும் பரந்து கிடப்பதால் திராவிட இனத்தின் தொடர்பும் இவ்விரு கண்டங்களையும் தழுவியுள்ளதென்று பெறப்படுகிறது.

பேரறிஞர் **போப்பையர்**,[3] 'தமிழ், ஐரோப்பிய மேலை நாடுகளில் உள்ள கெல்த்திய[4] தெயுத்தானிய[5] மொழிகளை ஒத்திருக்கின்றது என்கிறார். இவ்விரண்டு இனங்களும் ஆரிய இனத்தின் மிகத் தொலைவுக் கிளைகள் என்பர். இன்னும் ஆப்பிரிக்க, ஆஸ்திரேலிய அமெரிக்க மொழிகளும் வியக்கத்தக்க முறையில் தமிழ்க் குழுவை ஒத்துள்ளன' என்று அறிஞர் கூறுகின்றனர்.

இதனால் தமிழ்க்குழு உலக முழுமையும் உறவுடையது என்பது பெறப்படுகிறது.

---

[1] Dr. Caldwell. [2] Scythian. [3] Dr. U. Pope. [4] Celts. [5] Teutons.

## ௬. தென் இந்தியாவின் பழமைக்கான சான்றுகள்.

**நில நூல்களை**[1] மேற்போக்காகப் பார்ப்பவர்களுக்குக்கூடச் செடிகொடி வகைகளிலும், உயிர் வகைகளிலும செழித்து, மனிதநாகரிகப் பழமை வகையிலும் மிகச் சிறந்து விளங்குவது நடுக்கோட்டுப்பகுதியே[2] என்பது விளங்கும். இதுவே உயிர் வகைகள் பெருகுதற்கேற்ற தட்ப வெப்ப நிலைகளைச் சிறப்புவகையிற பெறறுள்ளது. இப் பகுதிக்கு வடக்கிலும் தெற்கிலும் செல்லச் செலல உயிர்வளர்ச்சிக்குப் பலவகைச் செயற்கைத் துணைகள் வேண்டியிருப்பது தெரியவரும். உயிர்த்திரளின் வகை மிகுதிக்கும், செழித்த வளர்ச்சிக்கும், அழகமைப்பிற்கும், எண்ணிக்கைப் பெருக்கிறகும் நடுக்கோட்டுப் பகுதியே தலைசிறந்து நிற்கின்றது.

ஸ்விஸ் நாட்டு[3] அறிஞர் ஒருவர் நினைவூட்டுகிறபடி, உலகில் மிக வடக்கில் உள்ள நாடுகளில் மரங்கள் ஐந்தடி உயரந்தானும் வளர்வது அரிது. துருவங்களண்டைப் பாசிகள் கூட மிக அருமையாகவே காணப்படுகின்றன. ஆனால் நம் தென் இந்தியாபோன்ற நடுக்கோட்டுப்பகுதியிலோ நூறு, நூற்றிருபது அடி உயரமுள்ள மூங்கில்கூடப் 'புல்' எனப்படுகிறது. "புறக்காழனவே புல்லென மொழிப" என்னும் **தொல்காப்பிய** உரை காண்க. மற்றும் ஆல மரம் நமக்கு ஒரு மரமே; குளிர்ந்த வடநாட்டினர் அஃது ஒரு காடு எனக் கணிப்பராம்.

எனவே, உயிர் வகைகளின் பிறப்பிடம் தென் பகுதியா யிருப்பதே பொருத்த முடையது. நடு

---

[1] Geography. [2] Equatorial regions. [3] Switzerland.

ஆசியா, தென் உருசியா, வடதுருவம் இவை ஒரோ காலத்து உறைவிடங்களா யிருந்திருத்தல் கூடுமே யன்றி முதலிடங்களாக இருந்திருக்க முடியா.

மேலும் உலகின் தட்ப வெப்ப நிலைகளைப் பார்த்தாலும் மனிதர் தோற்றம் முதலில் ஏற்பட்டது தென் இந்தியாவிலேயோ அலலது அதன் அருகிலேயோதான் என்பது போதரும்.

நிலநூல் கூறுகின்றபடி இம் மண்ணுலகம் ஞாயிறோடு ஞாயிறாய் அதன் பாரிய ஒளிப்பிழம்பின் ஒருபகுதியாய் இருந்தது. ஞாயிறு தன்னைத்தானே சுற்றும் விரைவினால் அதனினின்றும் சிதறி வீழ்ந்த திவலைகளே கோள்களும் துணைக்கோள்களும் ஆகும். நமது மண் உலகமாகிய கோளும் அத்தகைய ஒரு பிழம்புத் திவலையேயாம்.

முதலில் இதுவும் ஞாயிற்றைப் போன்ற ஆவிப் பிழம்பாகவே இருந்து படிப்படியாகக் கொதித்துருகி நிற்கும் குழம்பாகவும், அதன்பின் ஞாயிற்றைச் சுற்றும் விரைவினாலும் தன்னைத் தானே சுற்றும் விரைவினாலும் மேன்மேலுங் குளிர்ந்து திண்மையான மேல் தோட்டினை உடையதாகவும் மாறி வந்தது.

இங்ஙனம் மாறுவதில் நாம் உற்று நோக்கத்தக்க உண்மை ஒன்றுண்டு. ஒரு பம்பரம் சுழலும் பொழுது அதில் அசையாத பகுதிகள், நடுஅச்சு பம்பரத்தைத் துளைக்கும் இடமான உச்சியும் அடிப் பகுதியுமே யாகும். பம்பரத்தின் நடு வட்டமே மிக விரைவாகச் சுழலும். இது போலவே உலகிலும், வட தென் துருவப் பகுதிகள் பெரும்பாலும் அசையாமல் தம்மைத் தாமே சுழலும். நடுக்கோட்டுப் பகுதியே மிக விரைவாகச் சுழலும் இடமாம்.

இக் காரணத்தால் மேல்தோடு குளிரும்போது பிற பகுதிகளைவிட இந் நடுக்கோட்டுப் பகுதியே முன் கூட்டிக் குளிர்ச்சி அடைந்திருக்க வேண்டும். கொதிக்கின்ற பிழம்பில் உயிர் வகைகள் இருக்க முடியாதல்லவா? எனவே, முதன்முதல் குளிர்ந்து நேரிய தட்பவெப்ப நிலைகளை உடைய இப் பகுதியிலேயே உயிர் வாழ்க்கை தொடங்கி இருத்தல் வேண்டும் என்று உய்த்துணர்வதில் தவறென்ன?

இனித் தென இந்திய மண் இயல்புபற்றி **ஞால நூலார்**[1] கூறுவதைப் பார்ப்போம். இவர்களது ஆராய்ச்சியின்படி, தென் இந்தியா இலங்கை இவை பெரும்பாலும் கருங்கற் பாங்காகவே இருக்கின்றன. இவற்றின் பாறைகள் நெருப்பு வண்ணப்பாறை[2] என்ற வகையைச் சேர்ந்தவை. இதுவே முதலில் கொதிக்கிற நெருப்புக் குழம்பாயிருந்து பின் இறுகிய பாறையாகும்; எனவே இதில் எத்தகைய உயிர் வகையும் இருப்பதற்கு இடமில்லை.

இதிலிருந்து உயிர் இனங்கள் தோன்றுவதற்கு முன்னைய காலந்தொட்டே, தென் இந்தியா நிலப் பகுதியாக இருந்தது தெளிவாகின்றது.

இதற்கு நேர்மாறாக வட இந்தியா, இமாலயம், பிற ஆசியப் பகுதிகள் இவற்றின் மண் இயல்பையும் பாறை இயல்பையும் பார்த்தால் அவை மிகவும் பிற்பட்டவை என்பது தெளிவாக விளங்குகிறது.

வட இந்தியப் பகுதிகளின் நிலத்தில் எவ்வளவு ஆழந்தோண்டினும் கருங்கல் பாங்கான நிலம் காண்பரிது. ஏனெனில், அப் பகுதி முழுமையும் உண்மை

[1] Geologists. [2] Igneous rocks.

யில் பல்லாயிர ஆண்டுகளாகச் சிந்து கங்கை ஆறுகள் அடித்துக் கொணர்ந்த வண்டல்களால் ஏற்பட்டதே யாகும் என்க. இதனினும் சற்றுப் பழமையான இமாலயமோ எனில் உலக வரலாற்றின் மிகப் பிந்திய நாள்வரையிற் கடலுள் அமிழ்ந்தே இருந்தது. அதில் இன்றும் காணப்படும் கடற் சிப்பிகளும், நண்டு முதலிய கடலுயிர்களின் எலும்புக் கூடுகளும் சுவடுகளும் இவ்வுண்மைக்குச் சான்று பகர்வனவாம்.

மேலும், இவ் விடங்களின் நில அடுக்குகளில் செடிகொடிவகை உயிர்வகைகளின் சுவடுகள் காணப்படுகின்றன. அவையும் மிகப் பழைய உயிர்வகைகளாக இல்லை. இவற்றிற்கு மாறாகத் தென் இந்தியப் பாறைகளின் அடிப்பகுதிகளில் உயிர்வகைக்கே இடமில்லாத கருங்கல் அல்லது நெருப்பு வண்ணக் கல்லே காணப்படுகிறதென்று முன் கூறினோம். அதன் மேற்பகுதிகளில் மிகப் பழைய செடி கொடி வகைகள், உயிர் வகைகள் வளர்ச்சி முறைப்படி காணப்படுகின்றன.

மேலும், திருநெல்வேலிக் கோட்டத்தைச் சேர்ந்த ஆதிச்சநல்லூர் முதலிய இடங்களில் மிகப் பழமையான மனித எலும்புக் கூடுகளும், தலை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றை நுணுகி ஆராய்ந்த அறிஞர், இவையே உலகின் மற்றெந்தப் பகுதிகளில் எடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளையும் விடப் பழமை வாய்ந்தவை என்றும், பெரும்பாலும் இவையே மனிதத் தோற்றத்தின் தொடக்கக் காலத்தைச் சார்ந்தவையா யிருக்கக் கூடுமென்றும் அறிவிக்கின்றனர்.

நில இயல, [1]நிலத்தோற்ற இயல், [2]ஞால இயல், [3]ஆவி மண்டல நிலை இயல் இவற்றின் துணை கொண்டும் உய்த்துணர்வு கொணடும் மிகப் பழமை யான காலத்தின் உலகப் படத்தை அறிஞர்கள் பலர் வரைந்து காட்டியுள்ளனர். அதில் சென்ற 150,000 அல்லது 200,000 ஆண்டுகளாக தென் இந்தியா, நிலப்பகுதியாக இருந்து வந்திருப்பதாகக் காட்டப்பட் டுள்ளது.

இன்னும் தமிழ்நாட்டின பழமையைக் காட்ட வரலாற்றுச் சான்றுகளும் பல உள. ஆரியர் வட இந்தியா வந்தது கி.மு. 1500 என்றும், 2000 என்றும், 3000 என்றும் பலவாறுக வரலாற்றறிஞர் உரைக் கின்றனர். எப்படியும் திராவிடர் நாகரிகம் இதனினும் பழமையானதாதலின், இது வரலாற்றுக் காலத்திற்கு அப்பாற்பட்டதென்பதற்கு ஐயமில்லை. அதோடு ஆரியரின் மிகப் பழமையான நூலாகிய இருக்கு வேதம் அவர்கள் இந்தியாவிற்கு வந்தபின், ஏற்பட்ட தாதலால் அதற்கும் திராவிட நாகரிகம் முற்பட்ட தென்பது சொல்லாமே அமையும்.

வரலாறறறிஞர் பலர் இருக்கு வேதமே உலகின் முதல் இலக்கியம் என்று கருதுகின்றனர். இவர் களுக்குத் தமிழிலக்கியத்தைப்பற்றிய அறிவும், ஆராய்ச்சியும் இருந்திருக்க இடமில்லை. தமிழ்நாட் டாரின் நானகு ஊழிகளும் வட நாட்டார் பாகுபாடா கிய 4 யுகங்களும் ஒன்றே என்று கீழே காட்டு கிறேம். அதன்படி தமிழின் தலை இடை-ச் சங்கங்கள் முதல்மூன்று ஊழிகளுக்குட்பட்டவை. வேதங்களோ பாரதகாலமாகிய மூன்றும ஊழி இறுதியை ஒட்டி

[1]Cosmology. [2]Geology. [3]Meteorology.

அப் பாரதக் கதையை எழுதிய வேதவியாசரால் ஏற்பட்டவை.

இதனைத் தொல்காப்பியம் நச்சினார்க்கினியர் உரையாலும் காணலாம். "நான்மறை" என்னும் சொற்றொடர்க்குப் பொருள் கூறுமிடத்து அவர் "நான்கு கூறுமாய் மறைந்த பொருளுமுடைமையால் நான்மறை என்றார்; அவை தைத்திரியமும் பௌடிகமும் தலவகாரமும் சாமவேதமும் ஆம். இனி இருக்கும் யசுவும் சாமமும் அதர்வணமும் என்பாரும் உளர். அது பொருந்தாது. இவர் (தொல்காப்பியர்) இந் நூல் செய்தபின்னர், வேத வியாதர் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தாராதலின்" என்று கூறுகிறார். இதனால் தமிழின் பழைய நூலாகிய தொல்காப்பியம் இருக்குமுதலிய வேதநூல்களுக்கு முந்திய தென்பது பெறப்படும்.

ஆரிய நாகரிகத்தினும் தமிழ் நாகரிகம் பன்னூறு மடங்கு பழமை யுடையது என்பதைச் சேர சோழ பாண்டியராகிய மூவேந்தரது தொடக்கற்ற பழம் பெருமையே காட்டும். திருக்குறளில் பழங்குடி என்னும் தொடரை விளக்குகையில் **பரிமேலழகர்,** "சேரசோழ பாண்டிய ரென்றாற்போலப் படைப்புக் காலந் தொட்டு மேம்பட்ட குடி" என்று கூறுவது காண்க.

கி. மு. 1000 ஆண்டுக்கு முன்னதாகக் கூறப்படும் பாரதப் போரில் உதியஞ்சேரலாதன் என்னும் சேர மன்னன் இருபடைக்கும் சோறு வழங்கியதாகப் புறப்பாடல் ஒன்று கூறுகின்றது. இங்ஙனம் பெருஞ்சோறு வழங்கிய காரணத்தால் இவன் **பெருஞ் சோற்றுதியன் சேரலாதன்** என அழைக்கப்பட்டான்.

இவனைப் பாடிய புலவரான **முரஞ்சியூர் முடிநாகராய**ரும் இவன் காலத்தவராதலின் பாரதகாலந்தொட்டே தமிழிற் சிறந்த பாக்கள் இருந்தமை மறுக்க முடியாத உண்மையாகின்றது.

பாரதக் கதையில் பாண்டியனது தலைநகர் மணலூர் என்று கூறப்படுவதனால் அஃது இடைச்சங்கத்தினும் பிந்தியது என்றும், வால்மீகியாரின் இராமாயணத்தில் கவாடபுரமே தலைநகராகக் கூறப்படுதலால் அஃது இடைச்சங்ககாலத்தில் இருந்ததென்றும், தலைச்சங்கம் இராமாயணத்திற்கும், மாபாரதத்திற்கும் மிகப் பழமையானது என்றும் ஏற்படுகின்றன.

தவிர, சூரவாதித்தன், சிபி, முசுகுந்தன், தூங்கெயிலெறிந்த தொடித்தொட் செம்பியன் முதலிய சோழமன்னர், வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டவர். இராமாயண பாரத காலங்களிலும், சிலப்பதிகார காலத்திலுங்கூட இவர்கள் மிகத் தொன்மையான புராணத் தலைவராகவே கருதப்பட்டனர். சோழரின் பழமையிதுவாயின் அவரினும் பழமையான பாண்டியரைப் பற்றிக் கூறவேண்டுவதில்லை.

---

## ௫. குமரிக்கண்டம் (இலெமூரியா) என்ற ஒன்றிருந்ததா?

இதுகாறும் தென் இந்தியா உலகின் மிகப் பழமையான நிலப்பகுதி என்றும், மிகப் பழமையான செடிகொடி வகைகளும், உயிர் வகைகளும், மனித நாகரிகமும் இதில் இருந்திருக்கின்றன என்றும் காட்டினோம்.

இனி, இத் தென்னாட்டிற்கும் தெற்கில் **குமரிக் கண்டம்** என்றோ **இலெமூரியாக் கண்டம்** என்றோ, ஒரு நிலப்பரப்பு இருந்திருக்க வேண்டும் என்ற முடிபுக்கு அறிஞர்கள் எப்படி வந்தார்கள் என்பதைத் தெளிவு படுத்துவதுடன், அந் நிலப்பரப்புடன் தமிழ்நாட்டுக்கு என்ன தொடர்பு என்பதையும் விளக்குவோம்.

உயிர்த்தோற்றம், மனிதத் தோற்றம் இவற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்தவர்கள் செடிகொடி வகைகள் உயிர்கள் இவற்றின் செழித்த வளர்ச்சியும், பெருக்கமும், அளவும் உலக நடுக்கோட்டுப் பகுதியிலேயே தலைசிறந்து விளங்கின என்று காட்டினர் என்பதாக மேலே கூறினோம்.

அங்ஙனம் நடுக்கோட்டுப் பகுதிக்கு அண்மையிலோ, அல்லது நடுக்கோட்டுப் பகுதியிலோ இருக்கும் இக்கால நிலப்பகுதிகள் **ஆப்பிரிக்கா, தென்இந்தியா, இலங்கை, மலாய் நாடு, கிழக்கிந்தியத் தீவுகள், தென் அமெரிக்கா** என்பவையே. இந் நிலப்பரப்புக்கள் இன்றும் செடிகொடி வகைகள், உயர்மரங்க ளடர்ந்த காடுகள், உயிர் வகைகள் முதலியன செறிந்து விளங்குகின்றன.

இவற்றுள் தென் அமெரிக்கா அண்மையிலேயே மேல் நாட்டினரது குடியேற்ற நாடாகியது. அதற்கு முன் பழமையான பெருவிய[1], மய[2] நாகரிகங்கள் தென் அமெரிக்கா, நடு அமெரிக்காப் பகுதிகளில் செழித்தோங்கியிருந்தன. இந் நாகரிகங்கள் அப் பகுதிகளிலேயே ஏற்பட்டவையல்ல; இலெமூரிய நாகரிகத்தின் கிளையாகிய அத்லாந்திய நாகரிகத்தை ஒட்டி ஏற்பட்டவையே.

---

[1] Peruvian. [2] Mayan.

ஏனைய பகுதிகளுள், இந்தியாவின் மண் செடி கொடி உயிர் இனங்கள் பெரிதும் ஆப்பிரிக்கா இனங்களை ஒத்திருக்கின்றன; அதுவேபோன்று கிழக்கிந்தியத் தீவுகள், மலாய், பஸிபிக் தீவுகள் இவை ஒருசார் ஆஸ்திரேலிய இனங்களையும், ஒருசார் வட அமெரிக்காவிலுள்ள காலிபோர்னிய இனங்களையும் ஒத்திருக்கின்றமை காணலாம்.

ஆப்பிரிக்காப் பக்கமிருக்கும் மடகாஸ்கர்[1] தீவு நில இயல்படி ஆப்பிரிக்காவுடன் வைத்தெண்ணப் படினும், உயிர்வகை செடிகொடி வகைச் சார்பில் முற்றிலும் ஆப்பிரிக்காவையும் ஒவ்வாது ஆசியாவையும் ஒவ்வாது இரண்டிற்கும் இடைப்பட்டதொரு நிலையிலிருப்பது குறிப்பிடத் தக்கது.

சில காலங்களுக்குமுன் ஸர் ஜான மரே[2] என்பவர் இந்துமாக்கடல் ஆராய்ச்சிக்கு என இருபதினாயிரம் பொன் முதலீடு வைத்துச் சென்றனர். அதன் பயனாக நிறுவப்பெற்ற ஆராய்சசிக் கழகத்தார், சிந்து ஆறும் அவ் ஆற்றின் பளளததாககும், அதன் அருகிலுள்ள [3]**ஆரவல்லி மலை**களும் கடலுள் பெருந்தொலை [4]**சொக்கோத்ரா** வரை நீண்டு கிடந்ததற்கான குறிகள் அத்தீவில் உள்ளன என்று கூறுகின்றனர். குறிப்பாக ஆரவல்லி மலையின் தொடர்ச்சியும், ஸிந்து ஓடிய பள்ளத்தாக்கும் அதிற காணப்படுகின்றனவாம்.

ஆப்பிரிக்காவில் போபோர்ட்[5] குழுவைச் சார்ந்த செடி வகை உயிர் வகைகள் இந்தியாவில் உள்ள பஞ்செத்துக்கள்,[6] கத்தினிகள்[7] என்பவற்றையும், ஆப்

---

[1] Madagascar. [2] Sir John Murray. [3] Aravalli Hills. [4] Sokotra. [5] Beaufort. [6] Panchets. [7] Kathnis.

பிரிக்காவிலுள்ள உவிட்டனெஜ்[1] குழுவைச் சேர்ந்தவை இந்தியாவிலுள்ள இராஜ்மகால்[2] செடிகளையும் பெரிதும் ஒத்திருக்கின்றன.

**ஜுராஸ்ஸிக்**[3] உயிர்க் குறிகளுள் கச்சைச் சார்ந்தவை பெரிதும் ஆப்பிரிக்க உருப்படிகள் போன்றே இருக்கின்றன என்று பேரறிஞர் **ஸ்டோலீஸ்கா**[4] உரைக்கின்றார். இவருடன் ஒத்துழைத்தவரான திரு. கிரீஸ்பக்[5] ஆப்பிரிக்காவில் **உம்தபுனி** ஆற்றின் கரையிற் கண்ட முப்பத்தைந்து செடிவகைக் குறிகளுள் இருபத்திரண்டு இந்திய வகைகளை ஒத்திருக்கின்றன என்கிறார்.

கடைசியிற் குறிப்பிட்ட இனங்களின் ஒற்றுமை இலெமூரியாக் கண்டத்தின் மெய்ம்மையை நாட்டும் வகையில் மிகவும் மதித்தற்குரிய சான்று ஆகும். ஏனெனில் அச் செடி வகைகள் உப்பு மண்ணிலோ உப்பு நீரிலோ வளர்பவை அல்ல; நன்னீரிலேயே வளர்பவை ஆகும். எனவே, கடல் வழியாக எவ்வகையிலும் இந்த ஒற்றுமையை விளக்க முடியாது. இலெமூரியாக் கண்டம் மூலமாக மட்டுமே இத்தகைய நிலச் சார்பான வளர்ச்சி ஒற்றுமை ஏற்பட்டிருக்க முடியும்.

மேலும், திருநெல்வேலிக் கோட்டத்தைச் சார்ந்த தூத்துக்குடியிலும், தென் திருவாங்கூர்ப் பகுதியைச் சார்ந்த (நாகர் கோவில் என்று தற்போது அழைக்கப்படும்) கோட்டாற்றிலும் இந்தியா எங்கணும் இல்லாததும், இந்தியருக்குப் பெயரே தெரியாததும் ஆன ஒரு மரம் உளது என்றும் அதனை அவ்விடத்து

[1] Uitenhage. [2] Rajmahal. [3] Jurassic. [4] Stoleiska.
[5] Mr. Griesbach.

மக்கள் சீமைப் புளி, பப்பரப் புளி, யானைப் புளி எனப் பலவாறாகப் புனைபெயரிட்டுக் குறிக்கின்றனர் என்றும் **கால்டுவெல்** கூறுகின்றார். இம் மரம் இந்தியாவுக்கு இத்தனை அருமையாயினும் ஆப்பிரிக்காவுக்கு மிகப் பொதுப்படையாய் உரிமையுடையது ஆகும்.

இன்னும் செடிகொடி மர வகைகளுள் தேக்குத் தென் இந்தியாவுக்கும ஆப்பிரிக்காவிற்கும்; புளி[1] **சாவகத்**திற்கும் இந்தியாவிற்கும்; தென்னை இந்தியா இலங்கை, **மேலனேசியா**[2] என்பவற்றிற்கும்; கரும்பு சீனம், இந்தியா, சாவகம் என்பவற்றிற்கும்; நெல் இந்தியாவிற்கும், பர்மாவிற்கும், சீனத்திற்கும், ஜப்பானிற்கும், சாவகத்திற்கும் பொது உரிமையாய் இருக்கின்றமை காணக.

ஆப்பிரிக்காக் கண்டமும் இந்தியாவும் பெரிதும் ஒத்திருப்பதிலிருந்து இலெமூரியாக் கண்டம் ஆப்பிரிக்காவையும் இந்தியாவையும் இணைத்திருக்க வேண்டுமென்பதும், கிழக்கிந்தியத் தீவுகளும் ஆஸ்திரேலியாவும் ஒத்திருப்பதிலிருந்து இலெமூரியா ஆஸ்திரேலியா வரை ஒரு காலத்தில் எட்டி யிருக்கவேண்டும் என்பதும், பஸிபிக் தீவுகள் வட அமெரிக்காவில் காலிபோர்னியப் பகுதியுடன் ஒற்றுமை யுடையவையா யிருப்பதால் இலெமூரியா அதனை ஒருவகையில் உள்ளடக்கி இருந்தது என்பதும் விளங்கும்.

இலெமூரியாக் கண்டத்தின் மூலமாக ஆப்பிரிக்கா இந்தியாவுடன் இணைக்கப்பட்டிருந்தது பெர்மியன்,[3] மயோஸின்[4] காலங்களில் என்றும், ஆஸ்தி

---

[1] Java. [2] Melanesia. [3] Permian. [4] Miocene.

ரேலியாவுடன் இணைக்கப்பட்டிருந்தது பலயோஸோயிக்[1] காலங்களில் என்றும் கருதப்படுகிறது.

இன்றைய உலகப் படத்தை எடுத்துப் பார்த்தாலுங்கூட இந்தியாவும் ஆப்பிரிக்காவும் முன் இணைக்கப்பட்டிருந்தன என்று காட்டும் அறிகுறிகளைக் காணலாம். இந்தியாவின் மேறகுக் கரையிலிருந்து ஆபிரிக்காவி னருகிலுள்ள ஸெசெல்ஸ்,[2] மடகாஸ்கர், மோரீஸ்[3] வரைக்கும், **இலக்க தீவம்,**[4] **மாலதீவம்.**[5] **சாகோஸ்தீவக்**[6] கூட்டம், ஸாயாதே முல்லா[7] அதஸ் கரை[8] இவை உட்படப், பல பவளத் தீவுகளும் மணல் மேடுகளும் காணப்படுகின்றன.

இவற்றுள் ஸெசெல்ஸைச் சுற்றி நெடுந்தொலை கடல் 30 அல்லது 40 பாக ஆழத்திற்கு மேலில்லை என்றும், அதன் அடியிலுள்ள நிலம் தட்டையான அகன்ற மணல் மேடே என்றும் **டார்வின்**[9] என்பவர் குறிப்பிடுகின்றார்.

மேற்கூறிய இத் தீவுகள் அனைத்தும் இந்தியாவையும் ஆப்பிரிக்காவையும் முன் பிணைத்திருந்த நிலப்பகுதியின் முதுகெலும் பென்ன லாகும்.

**ஆல்பிரட் வாலஸ்**[10] என்பவர் இலெமூரியாக் கண்டம் பிற்றை நாட்களில் இருபிளவாகப் பிளந்து இரு கண்டங்களாய் விட்டது என்றும், அப் பிளவு கிழக்கிந்தியத் தீவுகளினூடு சென்று அவற்றை இருவேறு நிலைபடப் பிரித்தது என்றும் கூறுகிறார்.

இதன்படி கிழக்கிந்தியத் தீவுகளில் மேல் பக்கத்திலுள்ள **ஸுமாத்ரா,**[11] **ஜாவா,**[12] **போர்னியோ**[13]

---

[1] Palaeozoic [2] Seychelles. [3] Mauritius. [4] Lacadives. [5] Maldives. [6] Sagos. [7] Sayade Mulla. [8] Adas Bank. [9] Darwin. [10] Alfred Wallace. [11] Sumatra. [12] Java. [13] Borneo.

முதலிய பெரிய தீவுகள் கிழக்குப் பாதியை அதாவது இன்றைய ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்தவை என்றும், கீழ்ப்பக்கமுள்ள **ஸெலிபீஸ்,**[1] **மொலுக்காஸ்,**[2] **நியூகினி,**[3] **ஸோலமோன்**[4] தீவுகள் முதலியவை கிழக்குப் பகுதி அதாவது இன்றைய ஆஸ்திரேலியாவுடன் சேர்ந்தவை என்றும் ஏற்படுகின்றன.

இவ்விரு பகுதிகளையும் பிரிக்கும் நீர்நிலை **பலிஜ் லாம்பக்** தீவுகளி னிடையே யுள்ள கால்வாயேயாகும் என ஆல்பிரட் வாலஸ கூறுகிறார்.

உயிரின வகைகளுள் இலெமூரிய நாட்டிற்குச் சான்றுகளாவன இலெமூரியாக் கண்ட அமைப்பைச் சுற்றி யிருக்கும் நாடுகள் அனைத்திலும் காணப்படும் அரிமா, கழுதைப்புலி, சிறுத்தை, நரி, புள்ளிப்புலி, கலைமான், மடமான்[5] முதலியவைகளும் இன்னும் இவைபோன்ற பிற[6] விலங்குகளுமே.

இவற்றுள் அரிமா இந்தியாவிலும் ஆப்பிரிக்காவிலும்; காண்டாமா மலேயாவிலும் ஆப்பிரிக்காவிலும் ; யானை பர்மா, இலங்கை, இந்தியா, ஆப்பிரிக்கா என்னும் இவறறிலும் வாழ்வது காண்க.

மேலும் தென் கண்டத்திற்கே சிறப்பாகக் காணும் **காரன்னம்**[7] தமிழ்நாட்டில் முன்னுள் இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. "ஒதிம விளக்கின்" என்ற **பெரும்பாணாற்றுப் படைத்** தொடருக்கு உரை கூறுமிடத்து **நச்சினார்க்கினியர்** "ஈண்டுக் காரன்னமென்றுணர்க" என்றும், "வெள்ளையன்னம் காண்மின்" என்ற **சீவக சிந்தாமணிப் பகுதி** உரையில்

---

[1] Celebes, [2] Moluccas, [3] New Guinea, [4] Solomon. [5] Gazelle. [6] Sandgrouse, Indian Bustard and Scaly anteater. [7] Black Swan.

"காரன்னமு முண்மையின் வெள்ளையன்னம் இனம் சுட்டிய பண்பு" என்றும் கூறியுள்ளார்.

நீர்நாயுள் நில வாழ்வுடைய தொருவகை தென் கண்டத்துள் நீரெலி என்று அழைக்கப்படுவதாகவும் அதன் மயிர் நூற்க உதவுவ தென்றும் கூறப்படுகிறது. ஐங்குறு நூற்றில்,

> "பொய்கைப் பள்ளிப் புலவுநாறு நீர்நாய்
> வாளை நாளிரை பெறூஉம் ஊர"

என்ற இடத்து நீர்நாய் என்றது மருதநிலத்து ஆற்றி னிடையுள்ள நீர்நாயாகும். இதனோடு சிலப்பதிகாரத் துள் எலிமயிரினின்றும் ஆடை நெய்யப்பட்டதாகக் கூறுவதை நோக்க, அந் நீர்நாய்க்கு நெருங்கிய உற வான நீரெலியும் தமிழ்நாட்டில் இருநததென நினைக்கவேண்டி யிருக்கிறது.

இந்துமாக் கடற் பகுதியைச்சேர்ந்த நிலப் பகுதிக ளிலேதான் பாம்புகளில பல்வேறு வகைகளும் காணப் படுகின்றன. அவற்றுள் இந்தியாவில்மட்டும் இரு நூற்றுமுப்பது வகைகள் உள்ளன என்று கூறுகின்ற னர். இவற்றுள் மிகப் பெரிய இனம் தென்அமெரிக் காவிலுள்ள அனகொண்டாவும்,[1] இந்தியாவிலும் மலேயாவிலும் உள்ள பாந்தளுமே.[2] இவை முப்பது அடி நீளமுள்ளவை.

நச்சுப் பாம்புகளுள் மிகக் கொடியதும், பெரிய தும் இந்தியாவிலுள்ள அரச நாகமேயாம். இது பதி னெட்டு அடி நீளமுள்ளது. இது பர்மா, தென்சீனம், மலேயா, பிலிப்பைன் தீவுகள்[3] என்பவற்றிலும் காணப் படும். இதற்கடுத்தபடியாகப் பெரிய நச்சுப்பாம்பு

[1]Anaconda. [2]Python. [3]Philippine Islands.

தென்கண்டத்திலுள்ள [1]புறவை நாகம் ஆகும். இது பன்னிரண்டு அடி நீளமுள்ளது.

நல்லபாம்பு, விரியன் என்பவை இந்தியாவிற்கே உரியவை. இப் பாம்புகளுள் பெரும்பாலான நீரை வெறுப்பவை. ஆதலால், இவையனைத்தும் கரை வழியாக இலெமூரியாப் போன்ற ஓர் இடத்திலிருந்து தான் வந்திருக்க முடியும் என்பது தெளிவு.

கடற் பாம்புகள்கூட இந்துமாக் கடலிலும், தென் பஸிபிக்கிலுமே காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

தென் இந்தியாவில் இலெமூரியப் பகுதிக்குரிய ஊர்வனவும், புழுப்பூச்சி வகைகளும் இன்றளவும் அழியாது நிலைபெற்று வருகின்றன. செடி வகைக ளுள் பெரும்பாலனவும் அப்படியே. ஆனல் பின் னுளில் ஏற்பட்ட கங்கை, ஸிந்து ஆற்று வெளிகள், இமாலயம், சீனம் என இவற்றின் உயிர்கள் வந்து கலந்தபின், இலெமூரியப் பகுதிக்கே சிறப்பாயுள்ள [2]பால்குடிக்கும் உயிர்களாகிய காண்டாமிருகம், [3]கம் பளி யானை முதலியன புதிய சுற்றுச்சார்பினுலும், தட்ப வெப்பநிலைகளாலும் அவற்றுடன் போட்டியிட முடியா தழிந்தன. இவ்வகைகளுள் பெரும்பாலா னவை இன்று ஆப்பிரிக்காவிலுள்ளன.

இனி [4]**நிலத்தோற்ற இயலார்** மனிதத் தோற்றத் தைப்பற்றிக் கூறுவதை எடுத்துக் கொள்வோம். உயிர் வகைகள் அனைத்திலும் அறிவாலும் உட லமைப்பின் உயர்வாலும் தலைமையானவன் மனி தனே. படைப்புக் காலந்தொட்டு எல்லா உயிர் வகைகளும் தனித்தனியாகப் படைக்கப்பட்டன என்

[1]Dragon Snake. [2]Mammals. [3]Mammoth. [4]Cosmogeny.

பது பலரது எண்ணம். மேல்நாட்டுச் சமயவாதிக ளுள் பலர் இன்னும் இதே கொள்கை உடையவரா யிருக்கின்றனர்.

ஆனால் அறிவியலார் உயிர் வகைகள் அனைத் துமே படிப்படியான வளர்ச்சி உடையவை என்றும், முதல்முதல் ஓரறிவுயிர்களாகிய செடி கொடி வகை களும், பின் படிப்படியாக ஈரறிவுயிர் முதல் ஐயறி வுயிர்களும், கடைசியில் மிக உயர்ந்த ஆறறி வுயிரா கிய மனிதப் பிறவியும் ஏற்பட்டன என்றும் அவர்கள் காட்டுகின்றனர்.

இத்தகைய 'படிமுறை வளர்ச்சியில்'[1] முது கெலும்பற்ற உயிாகளுக்குப் பின் முதுகெலும் புடை யவையும், அவற்றுள்ளும் முட்டையிடுபவற்றிற்குப் பிந்தியே குட்டியிட்டுப் பால் கொடுப்பவையும் தோன்றின என்றும்; குட்டியிட்டுப் பால் கொடுப்ப வற்றுள்ளும் உயர்ந்தவையான மனிதக்குரங்கு முத லிய இருகால் உயிர்கள் மிகப் பிறகாலத்திலும் அத னினும் ஒருபடி உயர்ந்த அறிவுடைய மனிதப் பிறவி கடைசியிலும் தோன்றின என்றும் அறிஞர்கள் உட லமைப் பாராய்ச்சியினாலும் நிலத் தோற்ற ஆராய்ச் சியினாலும் நிலைநாட்டுகின்றனர்.

ஞால இயலினபடி பார்த்தாலும் இப் "படி முறை வளர்ச்சி" பொருத்தமாகவே காண்கிறது. மிகப் பழமையான, அதாவது அடிப் பகுதியிலுள்ள நில அடுக்குகளில், புலனறிவிற் சிறுமைப்பட்ட உயிர் களின் குறிகளே காணப்படுகின்றன. படிப்படியாகப் புழுப்பூச்சிகளும், பின் முதுகெலும்புடையவை,

---

[1]Evolution.

பறவைகள், குட்டியிடுபவை, இருகாலுயிர் என்பவை களுங் காணப்படுகின்றன.

ஆனால் இவ் விருகாலுயிர்களுக்கும் மனிதனுக் கும் வேற்றுமை மிகுதியா யிருப்பதால் அவற்றிற்கு இடைப்பட்ட இனம் ஒன்று இருக்கவேண்டும் என்று அறிவியலறிஞர்கள் நினைத்தார்கள். அதன்படி தேடியதில் கிட்டத்தட்ட மனிதரது அமைப்பும், மூளை உருவும் உடைய **லெமூர்**[1] என்ற உயிர் வகை ஒன்று நடுக்கோட்டுப் பகுதியைச் சுற்றி இருப்பதைக் கூர்ந்து நோக்கி, அந்த லெமூர்களிலிருந்தே மனிதர் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று தீர்மானித்தனர்.

ஆனால் தனித்தனிச் சிதறிக் கிடக்கும் நடுக்கோட் டுப் பகுதி நாடுகளில் தனித்தனி அவை ஏற்பட் டிருக்க முடியாதென்பது கண்டு அவை அனைத்திற் கும் பொதுவான நடுவிடத்தில் அத்தகைய வளர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும் என முடிவு கட்டினர். அப்பொது நடுவிடத்திற்கு "லெமூர்" என்ற அவ் வுயிரின் பெயரையே அடிப்படையாகக் கொண்டு **இலெமூரியா** என அறிஞர் பெயர் வகுத்தனர்.

சிந்து நாட்டிலும் திருநெல்வேலிப் பகுதியிலும் மிகப் பழைய மண்டை யோடுகளும் கருவிகளும் கண்டெடுக்கப்பட்டன என்பது மேற்கூறப்பட்டது. சாவக நாட்டில் ஒராங் உட்டாங் என்றும், காட்டுமனி தன் என்றும் கூறப்படும் குரங்கினம் இருக்கும் இடத் துக்குப் பக்கத்தில் மிகப் பழையதொரு மண்டை யோடு எடுக்கப்பட்டுள்ளது.

தென்னாட்டில் காணப்படும் தாழிகளும் ஏனங் களும் மிகப் பழமையைக் காட்டுகின்றன. தென்

---

[1] Lemur.

ஞுட்டார் இந்தியாவுக்குக் கொடுத்த முதற் பெயர் 'நாவலந்தீவம்' அல்லது 'நாவலந் தண்பொழில்' என்பது ஈண்டுக் குறிக்கத்தக்கது.

நாவலந்தீவம் என்ற தொடரால் ஒரு காலத்து இது வட இந்திய ஆசியப் பகுதிகளுடன் ஒட்டாது வடக்கேயும் கடலாற் சூழப்பட்டிருந்தது என்பதும், நாவலந் தண்பொழில் என்ற சொல் வழக்கால் அந்நாள் மனிதர் தொகை குறைவா யிருந்தபடியால் ஊரும் நாடும் அருகிக் காடே நிறைந்து சோலைபோல் இருந்தது என்பதும் உய்த்துணரலாகும்.

இந்துமாக் கடற் பகுதியைச் சுற்றி யிருக்கும் இன்றைய மொழிகளனைத்தையும் ஒப்பிட்டு நோக்குபவர்க்கு எதிர்பாரா வகையில் அவற்றிடையே ஒருமைப்பாடுகள் காணப்படுவதும், அவ்வொருமைப் பாடுகளும் இலெமூரிய நடுப்பகுதிக்கு அண்மையில் வரவர மிகுதியா யிருப்பதும், ஒருமைப் பாட்டை ஒட்டிக் கோவைப்படுத்திய கோவைகள் எல்லாம் தென் இந்தியா அல்லது குமரிப்பகுதி நோக்கிக் கிடப்பதும் எல்லாம் இலெமூரியாக் கண்டமொன்றிருந்த தென்பதையே காட்டுகின்றன.

மக்களது சமயம், நாகரிகம், பழங் கதைகள் என்பவற்றிற்கூட இதே வகையான எதிர்பாரா ஒற்றுமைகளை நாம் காண்கிறேம். உலகெங்கும் பரந்து காணப்படும் இலிங்க வணக்கம், கன்னியாகிய உலக அன்னை வணக்கம், ஊழிக் கதைகள், தெய்விகச் சோலைக் கதைகள் என்பவைகளைப் பலகால் உற்று நோக்கிஞல், அவை, தாமே ஏற்பட்ட ஒருமைப்பாடுகளா யிருக்க முடியாது என்பது புலப்படும்.

தமிழ்நாட்டா ரறிவில் நெட்டிடை யிட்டு மூன்று பெரிய கடலழிவுகள் ஏற்பட்டிருந்தன என்றும், அவற்றுள் ஈரழிவுக்கு உட்பட்ட காலத்தை ஓர் ஊழி எனக்கொண்டு நான்கு ஊழிப்பாகுபாடு ஏற்பட்டது என்றும், இவற்றுள் முதலழிவு வடமொழியில் மகா பாரதத்திலும், சதபதம், மச்சம், அக்கினி, பாகவதம் முதலிய புராணங்க ளனைத்திலும் சில சில் வேறுபாடு களுடன் கூறப்பட்டுள்ளது என்றும் முன்னர்க் காட்டி உள்ளோம்.

கிட்டத்தட்ட இதே மாதிரியான வெளிக்கதை கள் யூதர், பாபிலோனியர், கிரேக்கர், மெக்ஸிகோவி லுள்ள செவ் இந்தியர், சீனர், கல்தேயர், இலங்கை யர், முதலிய பல நாட்டினரிடையேயும் வழங்கு கின்றன. இவற்றுள் பலவும் அவ்வந்நாட்டு மக்க ளால் சற்றேறக்குறைய கிறிஸ்து பிறக்குமுன் 2500 ஆண்டுகளுக்கு முன்னதாகவே நிகழ்ந்தனவாகக் கூறப் படுவது நோக்கத்தக்கது. இவை ஒரே கடல் கோளைக் குறிப்பனவே யாகும் என்று நினைக்கவேண்டி யிருக் கிறது.

இத்துடன் மலையாளக் கரையில் தமிழ்நாட்டின் மிகப் பழமையான சொற்கள், தொடர்கள், பண்கள், பழக்க வழக்கங்கள், சமயக் கொள்கைகள் பொன் போல் பொதிந்து கிடக்கின்றன என்று வரலாற் றறிஞர் காட்டுகின்றனர். அவற்றுட் சில உலக நாக ரிகத்தின் மிக அடிப்படையான நிலைமையை விளக்குபவை ஆகும்.

எடுத்துக்காட்டாக அந் நாட்டினரது ஊமைக் கூத்தை எடுத்துக் கொள்வோம். மாந்தர் பேச்சுப் பழக்கம் மிகக் குறைந்திருந்த ஒரு காலத்திலேதான்

செவிப்புலனுல் இன்றறியப்படும் கருத்துக்களைத் தையும் கட்புலனுக்கு உருவகப்படுத்தும் அரிய கலை யின் தொடக்கம் ஏற்பட்டிருக்க முடியும்.

ஆப்பிரிக்க நீக்கிரோவர் அமெரிக்கச் சிவப் பிந்தியர் முதலியவர்க ளிடையிலும் மனித நாகரிகத் தொடக்கத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய உயர்கலைகள் பல இருந்தன என்பது காணலாகும். அமெரிக்க இந்தியர் தமது கண், மூக்கு, செவி ஆகிய புலன்களை மனிதர் எவரும் வியக்கத்தக்க அளவு கூர்மைப் படுத்தி இருந்தனர் என்பதை அந் நாட்டு வரலாறுகள் விளக்கும்.

அவர்கள் மூக்கு வேட்டைநாய்களுக்கொப்பான மோப்பமுடையவை. செவியும் நாய் முதலிய விலங்கு களுக்கொப்பப் பல கல் தொலைவிலுள்ள சிறு ஒலிகளை யும் கேட்கும். கண்கள் கழுகுகளின் கண்களைப்போல நெடுந்தொலை காணக்கூடியவை. ஆப்பிரிக்க நீக்கி ரோவர் தமது பறையொலியைப் பல்லாயிரக் கணக் கான கல் தொலைவரைக் கேட்கச்செய்யும் ஒரு முறை யை உடையவர் என்று சொல்லப்படுகிறது. மனித நாகரிகத்தில் பின்தோன்றிய மொழிகள் கருவிகள் இவைகள் இல்லாமலே மனிதன் வளர்ச்சியடைந்த இடங்களில இத்தகைய மனித இயல்புக்கு மாறான புலனறிவு வளர்ச்சி ஏற்பட்டது.

மாந்தரது பழைய பழக்க வழக்கங்களுள் தாய் வழி உரிமை மிகப் பழைய குடிகள்பலவற்றுள் வழங்கி வருகிறது. இன்றும் மலையாளக் கரையில் மருமக்கள் தாயம் என்ற பெயரால் அது நடைமுறையி லுள்ளது குறிப்பிடத்தக்கது. கருநீசியத் தீவுகளிலும் இம்முறை காணப்படுகிறது.

இவ்விடத்தில், தாயம், தாயபாகம் என்பவை வடசொற்கள் அல்ல; தாய் என்ற பகுதியடியாக வந்த தாயம் என்பதற்குத் தாய்வழி உரிமை என்பதே முதற் பொருள்; பின்னர், உரிமை வகை மாறிய பின்னும் வழக்காற்றால் அப் பழைய மொழியே வடமொழிவரையிற் சென்று தந்தை வழி உரிமையைக் கூடக் குறிக்க வழங்கியதென்றறிக.

கோயில்கள், வீடுகள் இவற்றின் அமைப்பிலும் கீழ் நாடுகள் பெரும்பாலும் தமிழ்நாட்டையும், சிறப்பாக மலையாள நாட்டையும் ஒத்திருத்தல் காண்க. பட்டம் விடுதல், சேவல் போர், மஞ்சு விரட்டு (காளைப் பந்தயம்), சொக்கட்டான் விளையாட்டு முதலிய பல இந்திய விளையாட்டுக்கள் ஜப்பான் முதலிய கீழ் நாடுகள், பழமையான உரோம நாடு வரையிலும் பரவியிருந்தமையும் அவை இன்றுகாறும் நடுக் கீழை நாடுகளுக்குச் சிறப்பா யிருக்கின்றமையும் கூர்ந்துணரத்தகும்.

கடைசியாக, **ஊர்** என்னும் மொழியில ஓர் அரிய உண்மை காணப்படும். முற்காலத்தில் எரிமலையும் கடற் பாம்பும், அச்சந்தரும் விலங்கினங்களும் இருந்தன ஆதலின் மக்கள் நிலவரமாய்க் குடியிருப்பதற்கின்றி ஆண்டாண்டுக் குடியேறுவதும், பின் பிற இடங்களுக்கு ஊர்வதும் வழக்கமா யிருந்தன. அதனாலேதான் ஊர் என்ற பெயர் ஏறபட்டிருத்தல் வேண்டும்.

வடமொழியில **புரம்** என்ற சொல்லிலும் இந்தூர், சிங்கப்பூர் என்ற வட நாட்டுப் பிறநாட்டு ஊர்ப் பெயர்களிலும், சால்டியரது தலைநகராகிய ஊர் என்பதிலும் இச் சொல்லின் கிளைகள் காண்க. ஆரிய

மொழிகளினும் உர்-ஊர் என்னும் பகுதி முதன்மை பழைமை என்னும் பொருளேயே காட்டுவது காண லாகும்.

மேலும், கடலால் பிரிக்கப்பட்ட பல்வேறு நாடு களிலும், மனித முயற்சியால் ஏற்பட்ட சட்டி பானை கள், கட்டிடங்கள் முதலியவற்றின் வேலைப்பாடு மட்டுமன்றி, அவற்றைச் செய்ய உதவிய மண் முத லிய பொருள்களும் ஒன்ருக இருப்பது கூர்ந்து நோக் கத் தக்கது.

பல இடங்களிலும் பயன்படுத்தப்படும் இத் தகைய பொருள்கள், பெரும்பாலும் பயன்படுத்தப் படும் இடங்களுக்குரியவை யல்லாமல் நெடுந் தொலைவிலுள்ளவை என்பதை நோக்க, இத் தொழில்களது பயிற்சி ஒரு பொதுப்பட்ட முத லிடத்திலிருந்துதான் வந்திருக்க வேண்டுமென்பது ஐயமற விளங்கும்.

இங்ஙனமாக, இலெமூரியாக் கண்டம் இருந்தது என்பதற்கான அறிகுறிகள் இவை, அறிஞர் அதனைக் கண்டறிந்த வகைகள் இவை என்றவற்றைக் காட்டி ஞேம். அக் கண்டம் ஏன் கடலில் மூழ்கிவிட்டது என்பதற்கும் தக்க காரணங்களை அறிஞர் காட்டுகின் றனர். இம்முறையில் நில இயலார் ஆஸ்திரேலியாக் கண்டத்தைப்பற்றி ஆய்ந்தறிந்த சில உண்மைக ளுடன் வான இயலார் அதனை விளக்கிக் கூறும் விளக் கமும் அறியத்தக்கதாகும்.

பலவகையில் ஆஸ்திரேலியா ஒரு விந்தையான நாடு ஆகும். இங்குள்ள மரஞ்செடிகள் இயற்கை யாய் வேறெந்த நாட்டிலும் வளர்வதில்லை. அவ்வாறே யாழ்ப் பறவை, துறக்கப் பறவை, ஏமு முதலிய

பறவை யினங்களும், கங்காரு முதலிய விலங்கினங்களும் வேறெங்கும் காணப்பெருதவை ஆகும். இதை நோக்க, ஆஸ்திரேலியா உலகொடு சார்பு பெற்றிராத ஒரு தனித் துண்டமோ என்று நினைக்கவும் இடமுண்டு.

ஆனல், இந் நினைவு வெறும் உய்த்துணர்வுமட்டுமன்று. அறிவிய லறிஞர்கள் பலர் வான ஆராய்ச்சியால் இவ் ஆஸ்திரேலியா உண்மையில் ஒரு பொரித் துண்டமே என்கின்றனர். அதாவது, அஃது உலகின் இழுப்புவன்மைக்குட்பட்ட காரணத்தால் உலகின் மீது வந்து விழுந்த ஒரு விண்வீழ் மீனின் சிதைந்த பகுதியேயாம் என்கின்றனர்.

அம் மீன் விழுந்த தாக்கு வன்மையினலேதான் அதுவரை இருந்த இலெமூரியா கடல்வாய்ப்பட்டதும், அதன் வடக்கிலுள்ள பகுதிகள் உயர்ந்தவையுமாகும். அதோடு கூடச், செங்குத்தாய் அதுவரைச் சுற்றிக் கொண்டிருந்த உலகு, இருபத்தாறு பாகை[1] யளவு சரிந்து ஓடிப், பின் அத்தாக்கு வன்மை குறையக் குறையச் சரிவும் குறைந்து, இன்று இருபத்து மூன்றரைப் பாகை யளவு சரிவில் ஓடுவதும் அதனலேயே. இன்னும் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் சென்ற பின் இப்படி ஏற்பட்ட சரிவும் நீங்கிவிடும் என்று அறிவியலறிஞர்கள் கூறுகின்றனர்.

இதுகாறும் கூறியவாற்ருல் மக்கள் இப் பூவுலகில் தோன்றியது நடுக்கோட்டுப் பகுதியிலேயே என்பதும், இப் பகுதி மூன்ரும் ஊழி யிறுதியில் கடல் வாய்ப்படத் தலைப்பட்டபோது வடக்கிற் கடல் வற்ற, விந்திய மலைக்கு வடக்கில் இப்போதுள்ள பெரு நிலப்

---

[1] Degree.

பரப்பவ்வளவும் மேற் கிளம்பிய தென்பதும் பெறப் பட்டன.

இதன்பிற் கடற்கோளால் வடக்கு நோக்கித் தள்ளப்பெற்ற தமிழ் மக்கள் மெசபொடேமியா, வட இந்தியா, நடு ஆசியா முதலிய இடங்களுக்குச் சென்றிருக்க வேண்டும்.

அதே சமயம் இலெமூரியாவின் மேல் பகுதியி லுள்ளோர் சிலர் ஆப்பிரிக்காவிற்கும், கீழ்ப்பகுதியி லுள்ளோர் கீழ் ஆசியாக் கரைக்கும் சென்றனர். இலெ மூரியாவின் கீழ்ப் பகுதியின் ஒரு துண்டே இன்றைய காலிபோர்னியா என்ற வட அமெரிக்கப் பகுதியா கும்.

மொழி ஆராய்ச்சியாளர் ஆரிய இனத்தாரின் முத லிடத்தையே மனித வகுப்பின் முதலிடமென மயங்கி, மக்கள் முதலிடம் நடு ஆசியா, அல்லது தென் உரு சியா என்று கூறினர் என்றும், அவற்றைத் திருத்திப் பாலகங்காதர திலகர் என்ற வரலாற்றறிஞர் ஆரியர் முதலிடம் வட துருவப்பகுதியே எனக் காட்டினர் என்றும் முன்னர்க் கூறியுள்ளோம்.

இக் கொள்கை இலெமூரியாவினின்றே மக்கள் நாகரிகம் பிறந்ததென யாம் காட்டிய விளக்கத்திற்கு முரணானதன்று. அதனையும் உள்ளடக்கி மேற் சென்று விளங்கும் முழு உண்மையே யாகும். ஏனெ னில், ஆரிய இனத்தவர் வடக்கு நின்றும் தெற்குப் போந்தது கி. மு. 2000 ஆண்டுக் காலத்தில்; அதா வது இன்றைக்கு 4000 ஆண்டுகட்கு முன்னேதான். ஆனால் இலெமூரியா நாகரிக காலமோ இன்றைக்கு 20,000 ஆண்டுகளுக்கு முற்பட்டு 50,000 ஆண்டு கள் வரையில் ஆகும்.

இலெமூரிய மக்கள் வட துருவம் வரையிற் பரவிச் சென்ற காலத்தில் வட துருவமும், வட பகுதிகளும் இன்றுபோல் முற்றும் பனி நிலமா யிருக்கவில்லை. உலகின் நடுச்சூட்டினின்றும் விடுபடும் வகையில் முதலில் குளிர்ந்தது நடுக்கோட்டுப்பகுதியே என்று கூறினோம். வடபகுதி குளிரக் குளிர உயிர்கள் அங்குப் பரவ முடிந்தது. இலெமூரியர் செல்லும் காலத்திலும் அஃது இன்றையளவுக்குக் குளிராமல் போதிய சூடுடையதாகவே இருந்திருக்க வேண்டும்.

வடதுருவத்தையும் நடு ஆசியாவையும் துருவி ஆராய்ந்த அறிஞர் அவற்றுள் பழமையான நாட்களில் மிக உயர்ந்த நாகரிக மக்கள் வாழ்ந்தனர் என்பதையும், அவை இப்போதிருப்பதைப்போல் குளிர்ச்சியுடையவையா யிராமல் செழித்திருந்தன என்பதையும் காட்டப் போதிய அடையாளங்கள் உள்ளன என்று கூறுகின்றனர்.

இன்று பாலைவனங்களாயுள்ள இராஜபுதனமும், சிந்துவும், மலைநாடாகவுள்ள ஆப்கனிஸ்தானமும், பாரசீகமும், பனிப் பாங்கான சைபீரியாவும் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன் பெரிய நகரங்களுடனும் மனித வாழ்க்கைக்கான பல வசதிகளுடனும் இருந்தன என்பதற்கான சான்றுகள் உள.

அப்படியாயின் இவ் வட பகுதிகள் இன்று பனி மூடிப் பாழா யிருப்பானேன்? இதற்கு விடை எளிது. உலக நடுச்சூடு முற்றிலும் தணிந்தபின் உலக மேற் பகுதிக்கு ஞாயிற்றினிடமிருந்தே சூடு கிடைக்கவேண்டும். ஞாயிற்றின் கதிர்கள் நடுப்பகுதியிலேயே நேராக விழுகின்றன. இருதுருவங்களிலும்

சாய்ந்து விழுவதால், தொலைவு மிகுதியாவதுடன் கதிர்களும் நிலப்பரப்பில் மிகுதியாக விழுவதில்லை.

உலகின் சரிவால் ஆண்டில் ஒரு பாதிக்காலம் துருவப் பகுதிகளில் ஞாயிறு மறைவதும், உலகு சுற்றும் விரைவால் காற்று மண்டலம் துருவப் பக்கத்தில் நெருக்கமாயிருப்பதும் அதன் குளிர்ச்சியை இன்னும் மிகுதிப்படுத்துகின்றன.

இங்ஙனம் துருவம் குளிரக் குளிர வடபகுதி வரையிற் சென்று வாழ்ந்த மக்கள் மீண்டும் தெற்கு நோக்கித் திரும்புவது இயல்பே அன்றோ? அப்போது தான் ஆரிய இனம் தெற்கு நோக்கி வரநேர்ந்தது.

இதனால் தெற்கிலிருந்த இலெமூரியாவிலிருந்து வடக்கு நோக்கிச் சென்ற தமிழ்ச் சார்பான நாகரிகத்தின் ஒரு வழிக்கிளையே திரும்ப ஆரிய நாகரிகமாக இந் நாட்டிலும் வந்தது என்று ஏற்படுகிறது.

வடபகுதியில் வாழு நாட்களில் குளிரினாலும், பிற குளிர்நாட்டு மக்களுடன் கலந்ததாலும், குளிரைத் தடுக்க அணிந்த ஆடை அணிகளாலும், சுற்றுச் சார்புகளின் நிறத்தினாலும் அவர்கள் நிறம் மாறி வெள்ளை நிறத்தவர் ஆயினர்; பின்னர், சூட்டினால் கறுத்து ஆடையணிகள் குறைவாக அணிந்திருந்த மக்களைவிடத் தம்மை உயர்வாக மதித்துக்கொண்டனர்.

## ரு. ஞாலநூல் காலப் பகுதிகள்

ஞால நூலின் ஆராய்ச்சிகளால் ஏற்பட்ட முடிபுகளைப் பார்ப்பவருக்கு முதன்முதலில் அவை வியப்பாகவே தோற்றும். இன்று மலை இருக்கும் இடம் கடலாகவும் கடலிருக்குமிடம் மலையாகவும் இருந்தன என்பதோ, பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் உலகின் பரப்பு, தட்ப வெப்பநிலை, உயிர்வகை, செடிகொடி வகை முதலியவை இன்றைய நிலைமையிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருந்தன என்பதோ முதற்கண் நமது பொது அறிவுக்கு ஒத்தவையன்றெனவே படக்கூடும். ஆனால் இவை யனைத்தும் அறிஞர் காரண காரியத் தொடர்புடன் தம் ஆராய்ச்சியால் நிலைநிறுத்திய உண்மைகளே ஆகும்.

பெரும்பாலும் இம் முடிபுகள் நமக்குப் பொருத்தமற்றதாகத் தோற்றக் காரணம் அவை நமது அறிவுக்குட்பட்ட குறுகிய கால எல்லையுட் படாமைதான். வரலாறுகளுள் நமக்குக் கிடைக்கும் மிகப் பழைய சான்றுகள்கூட மேல்நாட் டாராய்ச்சியாளரது முடிபுகளின்படி இரண்டு மூன்றுயிர ஆண்டுகளுக்கு முந்திய காலம் வரையில்தான். நாம் இந் நூலிற் குறிப்பிடும் கால எல்லைகள் அதனிலும் எத்தனையோ மடங்கு பழைமையான காலத்தைக் குறிப்பன. அவற்றைப் பற்றிய அறிவு நமக்குப் பெரும்பாலும் ஞால நூலாலேயே ஏற்படுகிறது.

ஞால நூலின்படி ஒரு காலப்பகுதி என்பது நூறுயிரக் கணக்கான ஆண்டுகள் கொண்டது என்பதையும், அவ்வளவு நீண்ட காலங்களில் நிகழ்ந்த செய்திகளைப்பற்றிய நமது அறிவு அவற்றிடையே

ஏற்பட்ட நில அடுக்கின் ஆழம், ஆக்கம் முதலிய வற்றைப் பொறுத்தது என்பதையும் நாம் மனத்திற் கொள்ளவேண்டும்.

நெடுங்காலத்திற்கு முன்—கோடி கோடிக் கணக்கான மனித ஆண்டுகளுக்கு முன்—இம் மண்ணுலகம் ஞாயிறென்னும் பாரிய, கொதித்துருகிக் குமுறிநிற்கும் அழல் ஆவிப் பிழம்பின் ஒரு பகுதியாக இருந்து, அஞ் ஞாயிறு தன்னைத்தானே சுற்றும் விரைவாற்றலால் அதனினின்றும் வீசி யெறியப்பட்ட ஒரு பிழம்புத் திவலையே என்று மேலே கூறியுள்ளோம்.

ஞாயிறு இத் திவலையினும் பன் மடங்கு பாரியது ஆகலின் அஃது அதன் கவர்ச்சியினின்றும் விலக முடியாது சற்றுத் தொலைவிலேயே (அதாவது பல் நூறாயிரக் கல் தொலைவிலேயே) நின்று அஞ் ஞாயிற்றின் சுழற்சியாற்றலால் தானும் சுழன்று அதனையும் சுற்றிக்கொண் டிருக்கிறது.

நாட் செல்லச் செல்ல (அதாவது பல கோடி ஆண்டுகளில்) உலகின் மேற்பகுதி குளிர்ந்து இறுகியது. குளிர்ந்த பகுதியில் ஒருதுண்டே இதனினின்றும் எறியப்பட்டுத் திங்களாயிற்று என்பர் வான இயலார்.

வெளிப் பகுதி இறுகிக் கட்டிப் பொருளான பின்னும் உட்பகுதி உருகிக் கொதித்துக் கொழுந்து விட்டெரியும் அழலாகவே இருக்கிறது. வெளியே வர வர இவ்வழல் நீர்ப்பொரு ளுருவாயும், பின்னும் வெளி வர வரக் கட்டியாய்க் குழம்புருவாயும், பின் களிபோன் றிறுகியும், இறுதியில் பாறைபோல் கட்டியான பொருளாயுங் குளிர்கின்றது.

இத்தகைய கட்டியான பாறையே உலகின் மேல் தோட்டில் மிகப் பழைமையான பகுதியாம்.

உலகின் மிகப் பழமையான நிலப்பரப்பு இப் பாறைகளாலேயே ஆக்கப்பட்டது என்பதும், அத்தகைய நிலப் பரப்புள் தென் இந்தியாவும் ஒரு பகுதி ஆகும் என்பதும் முன்னமே கூறியுள்ளோம்.

இயற்கையின் பலவகையான விளையாடல்களால் இம் மேற்பரப்பில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. இம் மாறுதல்களின் பயனாகவே உலகில் செடி கொடி வாழ்வும், அதனை ஒட்டி உயிர் வகைகளின் வாழ்வும், மனித வாழ்வும் ஏறபட்டன.

இம் மாறுதல்களுக்குக் காரணமா யிருந்தவை இயற்கை ஆற்றல்களேயாகும். அவை மூவகையின: 1. நில உட்பகுதியின் இயல்பு. 2. நில மேறபரப்பின் இயல்பு. 3. இதற்கு வெளியிலுள்ள நீர் மண்டலம் ஆவி மண்டலம் இவற்றின் இயல்பு.

1. நில உட்பகுதியின் இயல்பால் ஏற்படும் தலையான மாறுதல் எரிமலையாம். உலகின் நடுவில் உள்ள அழற்பிழம்பு ஆங்காங்கு மேற பரப்பாகிய போர்வையில் உள்ள பிளவுகள் வழியாகவோ, மென்மையான பகுதிகளைக் கிழித்துக் கொண்டோ வெளிப்பட்டு, மேற்பரப்புக்கு வெளியே கற்குழம்பு, சாம்பல், பல வகை ஆவி ஆகியவற்றைத் தள்ளுகின்றது. உலகிற் பெரும்பாலான மலைகள் இவ் வகையில் ஏற்பட்டவையே. இவற்றில் பலவகையான கருப்பொருள்கள் இருப்பதால் இவை மிகவும் செழிப்பான செடி கொடி வளர்ச்சியுடையன ஆகின்றன.

தென் இந்தியாவின் இருபுறமும் உள்ள மலைத் தொடர்களில் மேற்குத் தொடர் இங்ஙனம் எரிமலைகளால் ஏற்பட்ட மலைகள் ஆகும். கிழக்குத் தொடர் அவற்றினும் பழமையானவை என்ப.

2. நில மேற்பரப்பியல்பால் ஏற்படும் மாறுதல்கள் நிலப் பெயர்ச்சி, நில அதிர்ச்சி, நில மடக்கு முதலியன ஆகும். நிலப்பரப்பின் உட்பகுதிகள் மென்மையாகவும் மேற்பகுதிகள் கட்டியாகவும் இருக்கின்றன என்று கூறியுள்ளோம். மேற்பகுதி ஒரே தொடர்ச்சியாயிருக்குமிடத்தில் அது கீழ்ப்பகுதியை இறுக்கிக்கொண்டிருக்கிறது. எங்கேனும் மேற்பகுதி துண்டாக நின்றால், கீழ் உள்ள மேன்மையான பகுதி மீது அது சறுக்கி வழுக்கிப்போகும். அங்ஙனம் போவதால் நிலப் பெயர்ச்சி ஏற்படுகிறது.

உட்பகுதியின் சூட்டினாலோ, நடுப்பகுதியின் பிழம்பு தாக்குவதனாலோ (எரிமலையாக வெளி வராத இடத்தில்) நில அதிர்ச்சி ஏற்படுகிறது. சில இடங்களில் மென்மையான உட்பகுதி இறுகுவதால் உள்ளிடம் ஏற்பட்டு, அதன்மீது கட்டியான மேற்பகுதி நொறுங்கி வீழ்வதால் பலவகையான நில மடக்குகள் ஏற்படுகின்றன. மலைகள் பல இப்படிப்பட்ட மடக்குகளினாலும் ஏற்படுகின்றன. பாரிய இமயமலை கூட இத்தகைய மடக்கினால் ஏற்பட்டதெனக் கொள்ளப்படுகிறது.

3. நிலப்பரப்புக்கு வெளியிலுள்ள நீர் மண்டலம் கடலேயாகும். ஆவி மண்டலம் உலகைச் சுற்றிலும் பல கல் தொலை உயரம்வரை அதனைப் போர்த்திருக்கிறது. ஞாயிற்றின் சூட்டால் கடல் நீர் ஆவியாகி மலைகளால் தடையுண்டெழுந்து உயர்ந்த பகுதியில் சென்று குளிர்வதால் மழை யுண்டாகின்றது. காற்றின் வன்மையாலும் மழையின் வன்மையாலும் நாம் மேற்கூறிய நெருப்புவண்ணப்பாறை பொடியாகின்றது. சில சமயம் காற்று நெருப்புவண்ணப்

பாறையில் இடையிடையே யுள்ள கருப்பொருள்களை எரித்துவிடக் கடுமையான பகுதிகள் பொடியாகி மணலாகின்றன. இங்ஙனம் பாலைவனங்கள் ஏற்பட்டு அவற்றின் மீதுள்ள காற்றினால் மணற் படலங்கள் உண்டாகின்றன.

காற்றுடன் வீசும் மணலாலும், ஆறுகளாலும் பாறை பொடியாகி மண் உண்டாகிறது. மண்ணுடன் நீர்கலக்க அதில் சிறு செடி கொடி உண்டாகி அவை இறந்துபட்டபோது அவற்றின் கருப்பொருள் மணலுடன் கலந்து உரமாகிப் பெருஞ்செடிகளுக் குணவாகிறது. இங்ஙனம் மண்ணும் உரமும் வரவர வளர்ந்துவர, நீரினின்றே பிற உயிரினங்கள் உண்டாகி இச்செடி கொடிகளைத் தின்று வளர்கின்றன.

உலகின் மண் உண்மையில் காலனது வயிறேயாகும். எல்லையற்ற காலத்தில் பிறந்திறந்த உயிர்கள் அனைத்தும், செடி கொடியும் விலங்கினங்களும் எல்லாம் இதில் செரித்துள்ளன. இன்று ஞால இயலார் மண்ணை ஆராய்ந்து அது இன்னவகை என்றறிவதுடன், அதன் உட்பகுதிகளை ஆழத்தோண்டி அதன் பலவகையான அடுக்குகளி லிருந்தும் அவ்வடுக்குகள் ஏற்பட்ட கால எல்லை இது, அஃது இத்தனை ஆயிர ஆண்டு நீடித்திருந்தது, அக் காலத்தின் தட்ப வெப்ப நிலை இது, உயிர்வகை செடிவகை இவை, மனிதவாழ்வு இத்தகையது என்ற எல்லாத் துறை அறிவுகளையும் நமக்குச் சேகரித்துத் தருகின்றனர்.

ஒவ்வொரு நில அடுக்கும் ஞால இயல்படி ஒரு காலப் பகுதியைக் காட்டும் ஓர் ஏடு ஆகும். அக்காலப்பகுதி மனிதகால அளவைக்கப்பாற்பட்டுப்

| எண் | காலப்பகுதிப் பெயர் | மண் தொகுதிகள் | திண்மை | செடி வகை | உயிர் வகை | மனித நாகரிக வகை |
|---|---|---|---|---|---|---|
| க. | ஆர்கிலிதிக்-அல்லது ப்ரைமார்தியல் (Archilithic or Primordial) | லாரென்டியன் (Laurentian) கேம்பரியன் (Camberian) ஸைலூரியன் (Silurian) | 70,000 அடி | மால்ஸ் செடிகள், காடுகள் (Mallus) | தலை ஓடில்லாதன | |
| உ. | பழங் கற்காலம் அல்லது முதற்காலம் (Paleolithic or Primary) | டிவோனியன் (Devonian) நிலக்கரி (Coal) பெர்மியன் (Permian) | 42,000 அடி | சூரல் காடுகள் | மீன்கள் | |
| ங. | நடுக் கற்காலம் அல்லது இரண்டாங் காலம் (Mesolithic or Secondary) | திரயாஸிக் (Triassic) ஜுராஸிக் (Jurassic) க்ரெடேஷியஸ் (Cretaceous) | 15,000 அடி | தேவதார மரக் காடுகள் | ஊர்வன | லெமூரிய நாகரிகம் |
| ச. | கடைக் கற்காலம் அல்லது மூன்றாங் காலம் (Cenolithic or Tertiary) | இயோஸீன் (Eocene) மியோஸீன் (Miocene) ப்ளியோஸீன் (Pliocene) | 5,000 அடி | இலையுதிர் மரக் காடுகள் | பாலகுடி உயிர்கள் | அத்லாந்திய நாகரிகம் |
| ரு. | சிலைநகர் காலம் அல்லது நாலாங்காலம் (Arthropothic or Quarternary) | டிலூவியல் அல்லது ப்ளீஸ்டொஸீன் (Diluvial or Pleistocene) அலூவியல் (Alluvial) | 500 அடி | பயிற்றப் பட்டகாடுகள் | பலவகைப் பாலகுடி உயிர்கள் | ஆரிய நாகரிகம் |

பல்லாயிர ஆண்டுப் பரப்புடையது. இவ் அடுக்குக ளின் கால அளவைபற்றிக் கொள்கை வேற்றுமை இருக்கக் கூடும். ஓர் அடி மண் இத்தனை ஆண்டுக ளுக்குள்ளேதான் ஏற்படும் என்று ஒரே வரையறை கிடையாது. ஆயினும் பொதுப்படத் திண்மைகூடக் கூடக் கால அளவும் கூடும் என்று கூறலாம்.

தற்கால மேற்பரப்புவரை 5 நில அடுக்குப் பகுதிகள் இருக்கின்றன என்று கூறுகின்றனர். அவற்றின் பெயரையும் திண்மையையும் அவற்றிற் காணும் செடிவகை உயிர்வகை விவரங்களையும் மனித வகையையும் சுருக்கிப் பட்டிகை உருவில் எதிர்ப்பக்கத்தில் தருகிறோம்.

ஆக 132,500 அடி ஆழமுள்ள உலக மேற் பரப் பில் வரலாற்றுக் காலம் என நாம் கொள்ளும் ஆரிய நாகரிக காலமாகிய 4000 ஆண்டுகளுக்குரிய மேல டுக்கு 500 அடியளவே யாகிறது. அதற்கு முன்னைய அத்லாந்திய நாகரிகம் அதனினும் பத்துப் பங்கு திண்மையுடையது. எனவே இவ் வரலாற்றுக் காலத்தினும் நீண்ட அளவு காலம் அத்லாந்தியர் வாழ்ந்தனர் எனத் தெரிகிறது. **டப்ள்யூ எஸ். ஸ்காட் எலியட்** என்பார் அத்லாந்தியர் நாகரிக காலம் இன் றைக்கு 50,000 ஆண்டுகளுக்கு முன்னர் 40,000 ஆண்டுகட்கு முன் வரை என்கிறார்.

இலெமூரியர் காலத்து நில அடுக்கு அத்லாந்தியர் கால அடுக்கினும் மும்மடங்காகின்றது; அதாவது 15,000 அடி. ஸ்காட் எலியட் இதன் கால எல்லை இன்றைக்கு 200,000 ஆண்டுகட்கு முன்னர் 50,000 ஆண்டுகட்கு முன் வரை என்கிறார்.

## ௬. உலக மாறுதல்களும் இலெமூரியாக் கண்டமும்

எல்லையற்ற காலப் பரப்பில் ஓர் இமைப்பொழுதென்னும்படி சிறுமையான வாழ்க்கையினை யுடைய மனிதனால் அவ் வெல்லையற்ற காலத்தை எளிதில் உணர முடியாது. அதேபோன்று எல்லையற்ற இடத்தில் ஓர் அணுவான அவனால் அவ்வெல்லையற்ற இடத்தையும் உணர முடியாது. ஆயினும் அறிவியல் அறிஞரின் அறிவுக் கண் பார்வை மனிதனது இடச் சிறுமையையும் காலச் சிறுமையையும் கிழித்துக்கொண்டு எல்லையற்ற காலத்தையும் இடத்தையும் அளந்தறிவதா யிருக்கிறது.

பொறுமையுடன் இவ் எல்லையற்ற காலத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை ஆராயும் அறிஞர் உலகின் மேற்பரப்பும் கண்டங்களும் இன்று உலகப் படத்தில் காண்பன போல் என்றும் இருக்கவில்லை யென்றும், இன்று நிலமிருக்குமிடம் கடலாகவும் கடலிருக்குமிடம் நிலமாகவும் மலையிருக்குமிடம் வெளி நிலமாகவும், வெளி நிலமிருக்குமிடம் மலையாகவும் மாறி மாறி வந்திருக்கிறதென்றும் உணர்கின்றனர்.

இத்தகைய மாற்றங்கள் சில சமயம் கடல்கோள்களால் நிகழும். சில சமயம் எரி மலைகளால் கடலுள்ளிருந்து நிலமும், நிலத்தினுள்ளிருந்து மலைகளும் மேலெழுப்பப்படும். இன்னும் சில சமயம் மேற்பரப்பும் சாய்வுற்றுப் பள்ளமான இடம் மேடாகவும் மேடான இடம் பள்ளமாகவும், கடலுள் பட்ட இடம் கடலுக்கு வெளியாகவும், வெளியில் உள்ள நிலம் கடலுள்ளாகவும் மாறுதலுண்டு. இன்னும் சில சமயம் ஒரு கண்டத்தின் மீது ஒரு கண்டம் சரிவ

தும், இரு கண்டங்கள் ஒன்ருக ஒட்டுவதும், கண்டங்கள் நீரில் மிதந்து செல்வதும் உண்டு.

இம் மாறுதல்களுள் பல இன்னும் பஸிபிக் கடல் புறத்தில் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. மனிதர் அறிவுக்கு எட்டும்படியான அளவு விரைவில் இங்குத் தீவுகள் தோற்றுவதையும் மறைவதையும் காணலாம். இம் மாறுதல்கள் அங்கங்கே ஒழுங்கு முறையின்றிநிகழ்பவை யல்ல என்று ஆராய்ச்சியாளர் நமக்குக் கூறுகின்றனர்.

24 மணி நேரத்திறகு ஒரு முறை ஞாயிற்றின் ஒளி உலகைச் சுற்றுவதுபோல உலகைப் பல்லாயிர ஆண்டுகளுக்கு ஒரு முறை கிழக்கிலிருந்து மேற்காக மின்வலி அலைகள் சுற்றுகின்றன. அவை உலகின் எந்தப் பகுதியில் வந்துள்ளனவோ அந்தப் பகுதியில், வட துருவம் முதல் தென் துருவம் வரை, இடைவிடாத கொந்தளிப்பும் மாற்றமும் ஏற்படுகின்றன. ஒவ்வோர் அலையும் 80 பாகை அல்லது 6000 கல் அகலத்திற்கு ஆட்சி செலுத்துகிறது.

இம் மாறுதல் அலைகளின் வன்மையினுலேதான் கண்டங்கள் தோன்றுவதும் மறைவதும். இவற்ருல் ஒருகால் உலகெங்கும் பரவி யிருந்த இலெமூரியாக் கண்டம் படிப்படியாகச் சிதைவுற்று இறுதியில் கடலுள் மூழ்கியது. இவற்ருலேயே இன்றைய ஆசியா ஐரோப்பாவின் பெரும் பகுதி மேலெழுந்ததும், அத்லாந்திக் கண்டம் உண்டானதும், அது பின் அமிழ்ந்ததும் ஆகிய பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

200,000 ஆண்டுகளுக்கு முன் இலெமூரியாக் கண்டத்தின் அமைப்பு ஆராய்ச்சி அறிஞர் முடிவுப்

படி எவ்வாறிருந்திருக்க வேண்டும் என்பதை உலகப் படம் 1-ல் காணலாம். ஒப்புமைக்காக வேண்டி இப் படத்தில் தற்கால உலக அமைப்பை வெறும் வரைகளினலும் இலெமூரியாவின் அமைப்பை முற்றிலும் கரு நிறப்படுத்தியும் காட்டி யிருக்கிறேம். அதன்படி இலெமூரியாக் கணடம் கிழக்கு 20 பாகை முதல் மேற்கு 80 பாகைவரையிற் பரவிக்கிடந்தது. அதாவது முழுச் சுற்றளவாகிய 360 பாகையில் 260 பாகை இலெமூரியாவின நீளமே யாகும்.

இன்றைய உலக அமைப்புடன் ஒப்பிட்டு நோக்கினல் ஆப்பிரிக்காவின் ஒரு பகுதி,இந்து மாக்கடல், தெற்கு ஆசியா, பஸிப்பிக் கடலின் தென் பகுதி, ஆஸ்திரேலியா இத்தனையையும் லெமூரியாக் கண்டம் உள்ளடக்கி இருந்தது. அந்நாளில் இன்றைய ஆசியாவின் பெரும் பகுதியும், ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா இவையும் பெரும்பாலும் சதுப்பு நிலங்களாகவே இருந்தன. சில பகுதிகள் கடலுள் ஆழ்ந்தும் இருந்திருக்கக் கூடும்.

ஆனல், இப் பழங் கண்டங்கள் அன்று இன்று கிடந்தவண்ணம் கிடக்கவே இல்லை. அமெரிக்கா அன்று ஐரோப்பா ஆப்பிரிக்கா இவற்றுடன் ஒட்டிக்கிடந்தது. இன்றுகூட அமெரிககாவின் கீழ் கரையும் ஐரோப்பா ஆப்பிரிக்கா இவற்றின் மேல் கரையும் ஒன்றுக்கு ஒன்று பொருந்தத்தக்க உருவுடையவையா யிருத்தல் காணலாம்.

அந்நாளில் நீர் மட்டத்திற்குமேல் உயர்ந்த பகுதி இலேமுரியா ஒன்றே. மற்ற இன்றைய கண்டங்களெல்லாம் நீருள் அமிழ்ந்தும் அமிழாதும் இருந்த சதுப்பு நிலங்களே ஆகும். முதற் படிக் காலத்திற்கு 50,000

ஆண்டுகளுக்குப்பின் இன்றைய கண்டங்களிற் சில பகுதிகள் நீர்மட்டத்திலிருந்து நன்கு உயர்ந்திருந் தன. "அழிந்துபோன இலெமூரியா" என்ற ஆங்கில நூலின் ஆசிரியர், 'இந்நாளில் இலெமூரியர் அக் கண் டங்களைச் சுற்றிப் பார்த்து அவற்றின் படங்கள் வரைந்துவைத்துள்ளனர்' என்றும், 'அவை இன்றும் இருக்கின்றன' என்றும் கூறுகிறார். ஆனால் அந்நாடு களுள் ஒன்றும் அன்று விளைவதில்லை; அன்றி மனித வாழ்க்கைக்கோ உயிர்வாழ்க்கைக்கோ ஏற்றதாக இருக்கவு மில்லை.

ஆகவே, மனிதவாழ்க்கைக்கும் உயிர்வாழ்க் கைக்கும் முதல் பிறப்பிடம் இந்த இலெமூரியாவே யாகும். மனித நாகரிகத்தின் தொடக்கமும் இங்கே தான் ஏற்பட்டிருக்கவேண்டும். கிட்டத்தட்ட நூறா யிரம் ஆண்டுகளாக மனிதவகுப்புத் தவழ்ந்து வளர்ந்த தொட்டில் இவ் இலெமூரியாக் கண்டமே எனலாம். "அழிந்துபோன இலெமூரியாவின்" ஆசிரியர், 'இதற்கு நெடுநாள் முன்னும் மனிதர் இருந்தனர்' என் றும், 'ஆனால் அவர்கள் மனித நிலையில் மேம்பாடடைந் தது இலெமூரிய நாட்டிலேயே' என்றும் கூறுகிறார்.

டப்ள்யூ. ஸ்காட் எலியட்டும், ருடால்ஃப் ஸ்டைனரும் 'மனித நாகரிகத்தில் ஏழு வகுப்புகள் உள' என்றும், 'முதல் இரண்டு வகுப்பைச் சார்ந்த மக்களும் இலெமூரியாவுக்கு முந்திய இரண்டு நில ஆக்கக் காலப்பகுதியிலும் வாழ்ந்தனர்' என்றும், 'இலெமூரியர் 3-ம் வகுப்பைச் சார்ந்தவர்' என்றும், 'அவர்களின் பின்வந்த அத்லாந்தியர், இன்றைய ஆரி யர் முதலியவர்கள் 4-ம் 5-ம் வகுப்பைச் சேர்ந்தவர்' என்றும், 'இன்னும் எதிர்காலத்தில் 2 வகுப்புகள்

இவற்றிலும் மேம்பாடுடையவையாய்த் திகழும்' என்றும் கூறுகிறார். ஆனால் இவ்வாசிரியர்களே, 'முதல் இருவகுப்பினரும் உடலின்றி உலவி வந்தனர்' என்ற புதுமையான செய்தியையுங் குறிப்பிடுகின்றனர்.

இப் புதுமையான செய்தியை வலிந்து அவ் வாசிரியர்கள் நம்மீது சுமத்துவதற்குக் காரணம் மனிதர் பிற உயிர்களிடமிருந்து படிப்படியாக வளர்ந்தனர் என்ற உண்மையை அவர்கள் ஏற்றுக் கொள்ள விரும்பாததேயாகும். மேல்நாட்டுச் சமய நூல்களைப் பின்பற்றி 'மனிதன் கடவுளது தனிப் படைப்பு' என்றும், 'படைப்புக் காலந்தொட்டே படைக்கப்பட்டான்' என்றும் அவர்கள் நிலைநாட்ட விரும்புகின்றனர். அறிவியல் ஆராய்ச்சியில் முதல் இரண்டுகாலப் பகுதியிலும் மனித வாழ்வுக்குரிய அறிகுறி இல்லாமற்போகவே அதினின்றும் அவர்கள், 'மனித வாழ்க்கை பின் ஏற்பட்டது' என்ற நேரான முடிவை ஏற்கவிரும்பாமல், உடலற்ற மனிதர் இருந் தனர் என்ற பொருந்தாச் செய்தியைப் புனைந்து மேற்கொள்ளலாயினர்.

"அழிந்துபோன இலெமூரியா" ஆசிரியர், 'முதன் மனிதர் இலெமூரியாவிலேயே வாழ்ந்தனர்' என்பதை ஒப்புக்கொள்கின்றனராயினும் 'அவர்கள் இலெமூர் என்ற உயிர்வகையுடன் உறவற்றவர்' என்று கூறிய தும் இதேகாரணம் கொண்டுதான் போலும். 'இலெமூர்கள் மனிதரது முன்மாதிரியாவர்' என்பதைச் சிலர் ஏற்காவிடினும், 'உயிரின வளர்ச்சியில் மனிதருக்கும் பிற உயிர்களுக்கும இடைபட்ட பகுதியையே னும் காட்டுபவை' என்பது ஒரு தலைச் சார்பற்ற அறிஞரால் மறுக்கக்கூடாத உண்மை ஆகும்.

நாம் மேற் குறிப்பிட்ட உலக மாறுதல்களில் மிகப் பழமையான மாறுதல் ஒன்று 100,000 ஆண்டுகட்குமுன் நிகழ்ந்தது. அதனால் இலெமூரியாவின் அளவு சுருங்கியதுடன், அதன் நடுவில் ஏற்பட்ட ஓர் ஆறு வரவர விரிந்து கடலாகி, அமிழ்ந்த கண்டத்தை இரு பெரும் பிரிவாகப் பிரித்தது. அவற்றுள் ஒரு பிரிவு இந்துமாக்கடற் பகுதியும் இன்னொன்று பஸிபிக்மாக் கடற்பகுதியும் ஆகும்.

இதன்பின் 82,000 ஆண்டுகளுக்கு முன்னும், 75,000 ஆண்டுகளுக்கு முன்னும் வேறும் பல பெரு மாறுதல்கள் ஏற்பட்டு அவற்றின் பயனாய் இலெமூரியாவின் பல பகுதிகள் மேன்மேலும் குறைந்தன. கடைசியில் நின்றது பஸிபிக்மாக்கடலில் கிழக்கு 100 பாகை முதல் 140 பாகை வரையில் உள்ள பகுதியேயாகும். அதுவும் 50,000 ஆண்டுகளுக்குமுன் கடலுள் ஆழ்ந்தது.

இதே காலப்பகுதியுள் ஆசியாவின் பெரும்பகுதியும் நிலமாக உயர்ந்துவிட்டது. அமெரிக்காக் கண்டம் ஆப்பிரிக்காவிலிருந்து விலகி நெடுந்தூரம் சென்றுவிட இடையில் அத்லாந்திக்மாக் கடல் ஏற்பட்டது.

மடகாஸ்கர் தீவும், தென் இந்தியாவும், பஸிப்பிக் தீவுகளிற் பலவும், இலெமூரியாவின் மீந்த பகுதிகள் ஆகும். இலெமூரியாவில் அழியாது மீந்த இன்னொரு பகுதி, கடலுள் மூழ்கிய பிற பகுதிகளிலிருந்து பிரிந்து நீரில் மிதந்து சென்று அமெரிக்காவுடன் சேர்ந்துகொண்டது. அவை இரண்டுக்கும், இடையில், அவை சேர்ந்த இடத்தில் ஒரு கடல் இருந்தது என்பதற்கு இன்னும் அறிகுறி

கள் உள்ளன. பின்னுல், இது வற்றி இன்றைய உதா ஏரியாயிற்று.

இலெமூரியா கடலுட்பட்டபின் அத்லாந்திக் கடலின் அடிப்பகுதி அப்போது ஏற்பட்ட உலக மாறுதல்கள் ஒன்றின் காரணமாக மேலெழுந்து நில மாயிற்று. இதனையே அறிஞர் அத்லாந்திஸ் கண்டம் என்பர். இலெமூரியா கடல் கொள்ளப்பட்டபோது அதன் மக்கள் சிலர் ஆப்பிரிக்கா, ஆசியா முதலிய பகுதிகளுக்குச் சென்றனர். இன்னும் சிலர் ஆப்பி ரிக்கா கடந்து அத்லாந்திஸில் குடியேறி அங்கே ஒரு பேரரசு ஏற்படுத்தினர். பதினுயிரம அல்லது இருபதி னுயிரம் ஆண்டுகளுக்குமேல் இவர்கள் ஆட்சியும் நாகரிகமும் மேலோங்கியிருந்தன.

15,000 ஆண்டுகட்குமுன் நேர்ந்த பெருமாறுதல் ஒன்ருல் அத்லாந்திஸ் கணடமும் கடலுள் மூழ்கிப் போயிற்று. அதன் மக்கள் தெற்கு அமெரிக்கா, நடு அமெரிக்காப் பகுதிகளில் குடியேறினர். இவர்களே மயநாகரிகத்தையும், பெருவிய நாகரிகத்தையும் ஏற்படுத்தியவர். இவ் அத்லாந்திஸ் கண்டத்தின் மீந்த பகுதிகளே இன்றைய அஸோரீஸ்[1] என்று கூறப்படுகிறது.

முகம்மதுநபி, இயேசுநாதர் என்பவர்களுக்கு முன்னேர்களான யூதமரபினர் இந்த அத்லாந்திஸ் கண்டத்திலிருந்து வந்தவர்களே. அவர்கள் மொழி களும் ஐரோப்பா ஆசியா முழுவதும் பரந்து கிடக்கும் பின்னிய, துருக்கிய, ஹங்கேரிய, சிதியக்குழு மொழி களும் திராவிட மொழிகளுடன் தொடர்புடையவை யாயிருக்கின்றன என அறிஞர்கள் நினைக்கின்றனர்.

---

[1] Azores.

இலெமூரியாக் கண்டத்தைப்பற்றி இதுகாறும் கூறிய விவரங்கள் முதற் பகுதியில் யாம் எடுத்துக் காட்டிய தமிழ் நூலுரைகளுடன் எத்துணைப் பொருத்தம் உடையவை என்பதை நோக்குவோம்.

இலெமூரியரின் சமய நிலை நாகரிகம் இவற்றைப் பற்றி மேல்வரும் பிரிவுகளில் கூறுவோம். அவை தமிழர் சமயம், நாகரிகம் இவற்றுடன் பொருந்து மாறும் அதன்மேற் காட்டப்படும்.

சங்கங்களின் வாழ்வுகளைப்பற்றியமட்டில் முதற் சங்கம் இடம் மாற முதலூழி இறுதியுள் ஏற்பட்ட கடல்கோளும், இடைச் சங்கம் இடம் மாற மூன்றும் ஊழியிறுதியுள் ஏற்பட்ட கடல்கோளும் காரணம் என்று கூறப்பட்டன.

இங்கே ஊழி என்று கூறிய காலஅளவை என்ன?

சங்கவரலாறு கூறும் இறையனார் அகப்பொருளுரையிலோ வேறிடத்திலோ ஊழியின் அளவை திண்ணமாக இவ்வளவு என்று கூறப்படவில்லை. ஆனால் அஃது ஆயிரக்கணக்கான ஆண்டுகள்கொண்டது என்பதில் ஐயமில்லை. ஏனெனில் முதற் சங்கம் நடைபெற்ற கால அளவை 4440 ஆண்டுகள் என்றும் 89 அரசர்கள் அக்காலத்துள் ஆண்டனர் என்றும், இடைச் சங்கம் நடைபெற்ற காலம் 3700 ஆண்டுகள் என்றும் 59 அரசர்கள் அக்காலத்துக்குள் ஆண்டனர் என்றும், கடைச் சங்கம் நடைபெற்றது 1850 ஆண்டுகள் என்றும் 49 அரசர்கள் அக்காலத்திற்குள் ஆண்டனர் என்றும் கூறப்பட்டுள்ளது சங்கங்களினிடையே ஊழியிறுதி மாறுதல்களுக்கிடமிருப்பதால் அவை தொடர்ந்து நடக்கவில்லை என்பதும் தெளிவே.

சொற்போக்கிலிருந்து இவ்வூழிகள் இந்திய வானநூலாரது காலப்பிரிவாகிய நான்கு ஊழிகள் அல்லது யுகங்களே என்று தோற்றுகிறது. தொல் காப்பியம் நச்சினார்க்கினியர் உரையில் வடமொழி மறைகள் மூன்றும் ஊழி இறுதியில் பாரதப்போர்க் காலத்தில் வாழ்ந்த வியாசரால் ஏற்பட்டவை என்று கூறுமிடத்து ஊழி என்ற சொல்லே இப்பொருளி லேயே வழங்கியிருப்பது காண்க.

மேலும், இரண்டாம் யுகம் அல்லது ஊழியில் நடைபெறறதாகக் கூறப்படும் இராமாயணக் கதையை எழுதிய வால்மீகர் அவ்வூழியில் இருந்தி ருக்க வேண்டிய இடைச் சங்க இடமாகிய கவாட புரத்தையே பாண்டியன் தலைநகரமென்று கூறியதும் இக்கொள்கையை வலியுறுத்தும்.

இந்திய வானநூலின்படி நான்கு ஊழிகளும் சேர்ந்து நூறாயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகின் றன. இலெமூரியாவின் பழமைகூட ஸ்காட் எலியட் கூறுகிறபடி 2,00,000 ஆண்டு அளவே பழமை யுடையது. இவ்விரண்டும் பொருத்தமுடையன வாமோ?

இவ் வானநூலாரின் கணக்கை அப்படியே ஏற் றுக்கொள்ளத் தடையாய்த் தோன்றுவது, ஆண்டு களின் தொகை மிகப் பெரிதாயிருப்பதும் ஒவ்வோ ரூழியின் தொகையும் முன்னைய ஊழித்தொகையுடன் பொருத்தமாகவும் வட்டத் தொகைகளாகவும் இருப் பதுமேயாம். ஆனால் பெருந்தொகைகளை மதிப்பள வாகக் கணிக்கையில் கிட்டத்தட்ட வட்டத்தொகைக ளாகவும்,ஒன்றுக்கொன்று பொருத்தமாகவும் அமைப் பது இயற்கையேயாம்.

ஞாலநூலின் பழமையைக் கணித்தறிந்த ஸ்காட் எலியட் என்ற அறிஞர் உலகில் 5 பெருங் கடற்கோள்கள் ஏற்பட்டுள்ளன என்றும், முதலாவது பத்து நூறுயிரம் ஆணடுகளுக்குமுன்னும், இரண்டாவது எட்டுநூறுயிரம் ஆண்டுகளுக்கு முன்னும், 3-வது இரண்டுநூறுயிரம் ஆண்டுகளுக்கு முன்னும், 4-வது 80,000 ஆண்டுகளுக்கு முன்னும், 5-வது 9,500 ஆண்டுகட்கு முன்னும் ஏற்பட்டன என்றும் கூறுகிருர்.

நான்கு ஊழிக் கணக்கு அளவை இதற்கு ஒத்தில்லாவிடினும் கிட்டத்தட்ட இதனுடன் பொருந்தியிருப்பது காண்க. எனவே, அவ்வூழிகளின் அளவை இந்திய வானநூலார் கணக்குப்படி அப்படியே ஏற்றுக்கொள்வது கூடாததொன்றன்று.

இந் நான்கு ஊழிக் கணக்கை வரலாற்றறிஞர் பலர் ஏற்கவில்லை. எனினும், இத்தகையோருங்கூட மூன்றும் ஊழி இறுதியைப் பற்றியமட்டில் அதன் கணக்கு நம்பத்தக்கதே என்கின்றனர். இவரது ஆராய்ச்சி முடிவை நோக்குவோம்.

இந்திய வானநூலாரின் ஊழிக்கணக்கு இந்திய வானநூல் வகுக்கப்பட்ட பின்னரே ஏறபட்டது. இந்திய வானநூல் வகுககப்பட்டது கி. பி. நான்காம் நூற்றுண்டிலிருந்த வராஹமிஹிரராலேயே என்று வரலாற்றறிஞர் சிலர் கூறுகின்றனர். இன்னும் சிலர், இவருக்கு முன்னமே வகுக்கப்பட்டது என்கின்றனர். எப்படியும் ஊழிக்கணக்கு ஊழிகளுக்குப் பின்னர்த் தான் ஏற்பட்டிருக்கவேண்டும் என்பதற்கையமில்லை.

ஆகவே நாட்டாரிடையே நான்கு ஊழிகள் உண்டு என்ற நம்பிக்கையை அடிப்படையாகக்

கொண்டு வானநூலார் தமது நூலாராய்ச்சிக் கிணங்கக் கால அளவை ஏற்படுத்திக்கொண்டனர் என்பதே பொருத்தமானது.


இதன்படி ஊழிகள் வானநூலளவிற் குறைந்தவையாயினும் மக்களிடை நெடுநாள் மரபாக வழங்கிவந்தபடியால் மிகப் பழமையுடைய பெருமாறுதல்களின் நினைவினுல் ஏற்பட்டவையே என்று பெறப்படும். அது பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் அடங்கியதாக இருக்கக்கூடும் என்றுமட்டுமே நாம் சொல்லமுடியும்.

பொதுப்பட ஊழிகளை வரையறுக்க இதனுல் கூடவில்லையாயினும் மூன்றும் ஊழியிறுதியைப் பற்றிய அளவில்மட்டும் கணிதநூலாரது காலவரையறையை அப்படியே ஏற்றுக்கொள்ள இடமுண்டு. ஏனெனில், புராணங்கள் எழுதப்பெற்றது மூன்றும் ஊழி யிறுதியில் என்று அப் புராணங்கள் தாமே கூறுகின்றன.

மூன்றும் ஊழிக்குப் பிந்திய காலங்களிலுள்ள நந்தர்கள், மௌரியர் முதலியோரது வரலாற்றை அது கூறினும் அதனை எதிர்காலத்தில் வைத்துக் கூறுவதால் அப்புராணம் எழுதத் தொடங்கிய காலம், அதில் நிகழ்காலமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சனமேசய அரசன் காலம, அதாவது நான்காமூழித் தொடக்கம் என்றேற்படுகிறது. இந்திய மரபுரைகளின் வரலாற்றுப் பகுதி என்ற நூலில் பார்கிட்டர்[1] என்ற வரலாற்றறிஞர் இதே முடிபுக்கு வந்துள்ளார்.

---

[1] Pargiter 'The Historical Element in Indian Tradition.'




இலெமூரிய ... றுகிய நிலை)

குு. 56.

எனவே, மூன்றாமூழி இறுதி என்பது இன்றைக்கு 5000 ஆண்டுகட்குமுன் அதாவது கி. மு. 3100-ல் என்று காணப்படும்.

இலெமூரியாக் கண்டம் 200,000 ஆண்டுகட்கு முன் முதல் 50,000 ஆண்டுகட்குமுன் வரை இருந்த தென்றும், 50,000 ஆண்டுகட்கு முன் பெரும்பாலும் அழிந்ததென்றும் கூறினோம்.

அதில் மீதியாகித் தமிழ்நாட்டுடன் ஒட்டிக்கிடந்த பகுதியே குமரிநாடா யிருக்கவேண்டும்.

இலெமூரியாவை விழுங்கிச் சுவை கண்ட கடல் இதனையும் சிறிது சிறிதாக விழுங்கி வந்திருக்க வேண்டும்.

முச்சங்கங்கள் (15,000 ஆண்டுகளுக்குமுன்) அத்லாந்திஸ் கண்டம் அழிந்த நாளிலிருந்து நடை பெற்றிருக்கலாம்; அல்லது இலெமூரியாக் கண்டம் அழிந்தது முதற்கொண்டு தொடங்கியிருக்கலாம். அல்லது இலெமூரியா வாழ்வுகூடத் தமிழர் சங்க கால வாழ்வாகவே இருந்திருக்கலாகும். அங்ஙனமாயின் நாம் மேலே கூறியபடி இந்திய வான நூலாரின் நாலூழிக் கணக்கு அப்படியே ஏற்றுக்கொள்ளத் தக்கதென்பதை ஈண்டுக் குறிப்பிடலாகும்.

மேல் வரும் பகுதிகளில் இலெமூரிய நாட்டைப் பற்றியும் அதன் மக்களது நாகரிகம், வாழ்க்கை, சமயம், கொள்கை இவற்றைப்பற்றியும் ஆராய்ச்சி யாளர் கூறுவதைத் தொகுத்துரைப்போம்.

## எ. இலெமூரியாவின் இயற்கை இயல்புகள்

பழங்கால ஆராய்ச்சியிலிருந்தும், பழங் கருவிகளாராய்ச்சியி லிருந்தும் இலெமூரியாவின் நில இயலையும், தட்ப வெப்ப நிலையையும் நாம் உய்த்துணரக் கூடும். இலெமூரியாக் கண்டத்தில் மலைகள் மிகுதியாக இல்லை. கிழக்குப்பாதியின் மேல்பகுதியில் சில உயர்ந்த மலைகள் இருந்தன. அவையே இன்று பஸிபிக் கடலின் தீவுகளாயிருக்கின்றன. இவை எரிமலைகளேயாகும்.

சிறு எரிமலைகளும், நில அதிர்ச்சியும அக் கணட முழுமையையும் என்றும் குலுக்கிக்கொண்டே இருந்தன. ஆனால் கண்டத்தின் நடுப்பகுதி மலையின்றிப் பெரிதும் மட்டமாகவே இருந்தது. ஆங்காங்குள்ள சிறு மலைக்கொடுமுடிகள் 2000 அல்லது 4000 அடிக்கும் குறைந்தவை.

கணடத்தின் பல பகுதிகளிலும், கொதிக்கும் நீர் நிறைந்து ஆவி கிளம்பிக்கொண்டே யிருக்கும் சதுப்பு நிலங்கள் இருந்தன. இத்தகைய நிலம் இன்னும் நேப்பிள்ஸ் நகரின் பக்கத்தில் உள்ளது. இவை பெரும்பாலும் கடல்மட்டத்திற்குக் கூடக் கீழ்ப்பட்டிருந்தன. இவற்றின் பயனாகவே இக் கண்டத்தில் எரிமலைகளின் அச்சமும், கடல்கோளின் அச்சமும் குடிகொண்டிருந்தன.

இச் சதுப்பு நிலங்களின் அடியில் உருகிய பாறைகள் கொந்தளித்துக்கொண் டிருந்தன. இவற்றாலும் இயற்கையில் அந்நாள் ஞாயிற்றின் கதிர்கள் இன்றைவிடக் கடுமையானவையா யிருந்தமையாலும், காற்று மண்டலம் நீராவி நிறைந்திருந்தமையாலும் அக்

காலத்து இலெமூரியர் தாங்க ஒண்ணாத வெப்பத்துக்கு ஆளாகியே வாழ்ந்துவந்தனர்.

இந் நிலைமையில் அங்கிருந்த குன்றுகளினின்றும் ஒழுகிய சிற்றாறுகளும் ஓடைகளும் இலெமூரிய மக்களுக்கு மிகுந்த ஆறுதலளித்திருக்கவேண்டும்.

இக் கண்டம் வெப்ப மண்டலத்தில் இருந்ததாலும், அதிலும் அந்நாளைய வெப்பமும் மழை வீழ்ச்சியும் இந் நாளிலும் மிகுதியானதாதலாலும், செடிகொடிகளின் வளர்ச்சி வெப்ப மண்டலத்தில் மழை மிகுதியுள்ள மலைகளில் காணும் காடுகள் போன்று நெருக்கமாகவும் ஓங்கியும் இருந்தது. தற்கால மலைக் காடுகள் கூட இவ்வகைகளில் அவற்றிற்கீடில்லை எனலாம்.

அக் காடுகளில் பெரும்பாலும் சூரலே நிறைந்திருந்தது. ஆனால் அச் சூரல் இன்றைய சூரலை விடப் பல மடங்கு பெரிதாய்ப் பன்னூறடிகள் உயரமாய் வளர்ந்திருந்தது. குடைபோன்று கவிந்து வளரும் வட துருவ மரங்களும் மிகுதியாய்த் தழைத்திருந்தன.

பெரிய மரங்களுள் யூக்காலிப்டஸ், பாரிய செம்மரம்[1] முதலியவை செழிப்பாக வளர்ந்தன. இலெமூரியாவை அடுத்திருந்த ஆஸ்ட்ரேலியா, நியூஸிலந்து முதலியவற்றில் இன்னும் இம் மரங்கள் மிகுதியாயுள்ளன. இவற்றுட் சில மரங்கள் 30,000 ஆண்டளவும் அழியாத வேலைப்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

வெப்ப மண்டலத்தின் செடிகொடிகளும் உயிர் வகைகளும் பொதுவில் மிகப் பெரியவையாகவே

---

[1] Eucalyptus, Giant Redwood.

இருக்கும். இலெமூரியாவிலுள்ள உயிர்கள் இன்றைய உலகில் காணப்படும் எவ்வுயிர்களையும்விடப் பெரியவை. அந்நாட்டு எறும்பினம் 2 அங்குலம் வரை நீண்டிருந்தது. மூட்டைப்பூச்சி 4 அங்குல அளவிருந்தது; அது தன் சிறகுகளால் நெடுந்தொலை பறக்கக் கூடியதாயிருந்தது. இதுபோலவே மற்றெல்லா உயிர்களும் அதன் தற்கால அளவுக்குப் பன்மடங்கு பெரியவை.

இலெமூரியா வாழ்க்கைக்காலம் நடுக் கற்கால[1]மாகும். இந் நாள் சதுப்பு நிலங்களிலும், உள்நாட்டுக் கடற்கரைகளிலும், ஏரிக்கரைகளிலும், பிளெயாஸாரஸ்[2] இனமும், இக்தியாஸாரஸ்[3] இனமும் காணப்பட்டன. ஆனால் நாளடைவில் இவ் வுள்நாட்டுக் கடல்கள் வற்ற வற்ற இவ்வுயிரினங்கள் அருகி நிலத்துக்கே உரிய பிற ஊரும் வகைகள் பல்கி வளரலாயின. இவ்வகைக்கு டினேஸாரியா[4] என்று பெயர். இவ் வகையுட் சில நிலத்தி லூர்வதோடுகூடப் பறக்கவும் தக்கதாக வௌவால்கள் போன்று தோல்களாலேயே அமைந்த இறக்கைகளை உடையனவாயிருந்தன. இவற்றிற்குப் பெத்ரோதாக்தில்[5] என்று பெயர். இவற்றுள் மிகச் சிறியவை குருவியளவும், மிகப் பெரியவை இன்றைய மிகப் பெரிய பறவைகளினும் பன்மடங்கு பெரியவையாய் 16 அடி அகலமுள்ள இறக்கைகளை உடையவையாயு மிருந்தன.

டினேஸாரியாவே இலெமூரியாவின் மிகப் பெரிய உயிராகும். அது 100 அடிக்கு மேற்பட்ட நீளமுள்ளது. செடி கொடிகளையும், உயிர் வகை

---

[1] Mesolithic. [2] Pleiasaurus. [3] Icthyosaurus. [4] Dinosauria. [5] Petrodactyls.



குமரிக்கண்டத்தில் வாழ்ந்திருந்த உயிரினங்கள்

களையும் அழிக்கும் ஆற்றலில் இதற்கு ஈடு கிடையாதெனலாகும். ஊன் வெறியால் அவை உறுமும் பொழுதும, மரஞ் செடிகளை நெரித்து அவை நடக்கும் அரவம் கேட்கும்பொழுதும் இலெமூரிய மக்கள் கவலையும முன்னெச்சரிக்கையும கொள்ளுவர். அவர்கள் வாழ்க்கையில் நிறைந்த பேரச்சம் இதுவே.

1907-ஜனவரியில் அரசுரிமை நிலயத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் பேரறிஞர் ரே லாங்கெஸ்டர்[1] என்பவர் அமெரிக்கக் கூட்டுறவு நாடுகளின் தென்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பிரோன்டோஸாரஸ்[2] என்ற உயிரினத்தின் எலும்புக்கூடு 65 அடி நீளமாயிருந்தது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மெஸோலிதிக்குக்[3] காலத்தின் பிற்பகுதியில் பால்குடி உயிர்கள் முதல் முதலாகத் தோன்றலாயின. அக்காலப் பால்குடி இனங்களும் பாரியவையே. ஆனால் இன்று அகப்பட்டுள்ள கம்பளியானை மாஸ்டொடன்[4] முதலிய விலங்குகளின் எலும்புக் கூடுகள் இக் காலத்தினும் பிந்தியவையே. அவை இயோஸின் மியோஸின்[5] காலங்களிலுள்ளவை.

இலெமூரியாவில் பறவைகள் மிகுதி. அவற்றின் வகைகளும் பலப்பலவாகும். பலவகைப் பாம்புகளும் இருந்தன என்று தெரிகிறது. கடற் பாம்புகள் என்ற பெயரைக் கேட்டவுடனே மக்கள் ஒரு தலைமுறைக்கு முன் சிரிப்பது வழக்கம். ஆனால் அத்தகைய உயிர்வகை இருந்தது கட்டுக்கதை யன்று, உண்மையே என்று இன்று ஐயமற விளங்குகிறது.

---

[1] Professor Ray Lankester. [2] Brontosaurus.
[3] Mesolithic. Mammoth. Mommoth. [4] Mastodon.
[5] Eocene, Miocene.

1931-ல் அமெரிக்காவிலுள்ள டெக்ஸாஸ்[1] நாட்டில் கண்டெடுக்கப்பட்ட பாரிய எலும்பு இதன் அளவையும் இயல்பையும் காட்டுகிறது. இதன் பெயர் **ப்ளேயோஸாரஸ்** என்பது. இது கிட்டத்தட்ட 75 அடி நீளமுள்ளது. அதன் தலையின் அகலம் ஒன்



ப்ளேயோஸாரஸ்

றரை அடி. அதன் கழுத்து மட்டிலும் 25 அடிக்கு மேல் நீளமுள்ளது. இலெமூரியர் நெருங்கப் பெரிதும் அஞ்சிய உயிர் வகைகளுள் இதுவும் ஒன்று.

இலெமூரியாவில் மிகுதியாய் உறைந்த நில உயிர் வகை "இலெமூர்" என்பதாகும். இது மனிதரது தோற்றம்கொண்ட ஒருவகைக் குரங்கினம். இதிற் பலவகைக ளிருந்தனவாயினும், சில இடங்களில் தற்கால மனிதர் உயரமாகிய ஆறடிவரை இது வளர்ந்திருந்தது. இதற்குக் குரங்கை விடக்கூட நீண்டவால் உண்டு. ஆனால், மற்ற வகைகளில் அது மனிதரை ஒத்திருந்தது.

இதன் கை விரல்கள் ஐந்தும் குரங்கின் விரல்கள் போல் ஒரே புறமாய் இராமல் மனிதர்களது விரல்களைப்போல் 4 விரல்கள் ஒருபுறமும் பெரிய விரல் எதிர்ப்புறமும் ஆக அமைந்திருந்தன. கால் விரலமைப்பும் குரங்கை ஒத்திராமல் மனிதனை ஒத்திருந்தது.

[1]Texas State.

இவற்றைக் கூர்ந்து நோக்கிய பழைய பழங்கால ஆராய்ச்சியாளர் இவ் வினமே அந் நாளைய மனித இனம் என்ற முடிவுக்கு வந்திருந்தனர். ஆனால் இலெமூரிய மக்களின் உயரிய நாகரிகமும், பிறவும் நேராக இன்று அறியப்படுகின்றமையால் இவை மக்களினமல்ல என்று சொல்லப்படுகிறது.

ஆசிரியர் டப்ள்யூ. எஸ். கார்வே என்பார், 'மக்களினம் என்றும் குரங்கினத்துடனோ வேறு கீழினத்துடனோ உறவுகொண்டிருக்க வில்லை; படைப்புக் காலத்தில் தானே மனித இனமாகப் படைக்கப்பட்டது' என்று கொள்கிறார்.

எப்படியாயினும் இலெமூரியர் காலத்தில் மனிதர் விலங்குநிலையி லில்லை; மிக உயர்ந்த மனித நிலையிலேயே இருந்தனர் என்பதுமட்டும் கண்கூடு.

## அ. இலெமூரிய மக்களது நாகரிகம்

மேலே நாம் குறிப்பிட்டபடி, இலெமூர்களே முதல் மனிதர்கள் என்ற தப்பெண்ணத்தின் பயனுகவேதான் இப் பழங் கண்டத்திற்கு அறிஞர் முதலில் இலெமூரியா என்ற பெயரைக் கொடுத்தனர். மனித வகுப்பின் முன் மாதிரி எனக் கருதப்பட்ட இலெமூர்களின் உறைவிடம் என்பது இதன் பொருள். இக் கருத்து, பிழைபாடுடையதென்றும், அந் நாளைய மக்களின் ஏடுகளில் இந் நாடு "மூ" வின் "தாய் நிலம்" என்று வழங்கி வந்ததென்றும் ஆசிரியர் கார்வே கூறுகிறுர்.

இலெமூரிய மக்கள் தற்கால மக்களைவிடப் பெரிதும் நெட்டையானவர்களே. ஆறடிக்கு மேற்பட்டு ஏழடி வரையிலும் அவர்கள் உயர்ந்திருந்தனர். அவர்கள் உடலின் எடை 160 கல் முதல் 200 கல் வரை என்று கூறப்படுகிறது.

அவர்களுடைய கைகள் இன்றைய மனிதனது கைகளை விட நீண்டவையாகவும், பெரியவையாகவும், சதைப்பற்று மிக்கவையாகவும் இருந்தன. கால்கள் இதற்கொத்து நீட்சி பெருமல் திரட்சியுடையவையாய் இருந்தன.

தலை உச்சியில் மயிர் இயற்கையாகவே கட்டையாகஇருந்தது. ஆனுல் பின்புறம் நீண்டு வளர்ந்து பலவகையாக அழகுபெற முடிக்கப்பெற் றிருந்தது. மயிர்கள் மென்மையும் பொன்மையும் வாய்ந்தவை.

கல்லில் செதுக்கப்பட்ட சிலைகளினுலும், தோலில் தீட்டப்பெற்ற ஓவியங்களினுலும் அவர்கள் மிகுதியாக அணிகலன் அணியவில்லை என்றும், தலை

முடியைப் பின்னி முடிப்பதையே பேரணியாகக் கொண்டனர் என்றும், அவ்வோர் அணியிலேதானே அவர்கள் தம் பல்வகைப்பட்ட திறங்களையும் திருந்தக் காட்டினர் என்றும் அறிகிறோம்.

அவர்கள் உருண்டு நீண்ட கழுத்துடையவர்கள். சிறு மணிகளாலாகிய மாலை ஒன்றையே அவர்கள் கழுத்தணியாகக் கொண்டார்கள். காலடிகளும், கைகளும், அங்கைகளும் மிகப் பரந்திருந்ததோடு விரல்களின் எல்லாக் கணுக்களும் தடையின்றி அசையக் கூடியவையாயிருந்தபடியால் அவர்கள் தற்கால மனிதரைவிட மிக நுண்ணிய வேலைத்திற னுடையவரா யிருந்தனர்.

பெண்கள் ஆடவரைவிட உயரத்தில் சற்றுக் குறைந்தும் பருமனில் சற்றுக் கூடியும் இருந்தனர். ஆடவரைவிட அவர்கள் உருவம் வனப்புடையதா யிருந்தது என்பது எதிர்பார்க்கத் தக்கதே.

ஆடவர் முகம் பெண்டிர் முகம் போன்றே மயிர் அற்றதாய் இருந்தது. ஆனல் பெண்கள் ஒருவகை நாரினுல் செய்த முகமூடி அணிந்திருந்தனர். இதன் மூலம் வெயிலின் சூடு அவர்கள் முகத்தை வாட்டாமலும், காற்றுமட்டும் எளிதில் புகும்படியும் இருந்ததனல் ஆடவர்களைவிட அவர்கள் முகங்கள் பொன்நிற மிக்கவையா யிருந்தன.

அவர்கள் காதுகள் இன்றைய மக்களின் காதுகளைவிடச் சிறியவையா யிருந்தன. மூக்கு மிகவும் சப்பையாகவும் பெரிதாகவும் இருந்தது. கண்கள் பெரியவை; தெளிவையும் கூர் அறிவையும் காட்டுபவை.

பொதுப்பட அவர்கள் செம்பு அல்லது பொன் நிறமுடையவர்கள். கண்கள் தவிட்டு நிறமும் மயிர்

கருமை நிறமும் உடையன. பற்கள் சிறியவையாய் முத்துப்போல் ஒரேபடியினவாய் வெண்மையாக விளங்கின.

அவர்களது உடலமைப்பில் மிகவுங் குறிப்பிடத் தகுந்த பகுதி நெற்றியேயாகும். இலெமூரியர்களுக்கு இஃது 6 அல்லது 7 அங்குலம்வரை அகன்று உயர்ந் திருந்தது.

அதில் மூக்கடியினின்றும் ஓர் அங்குலம் அல்லது ஒன்றரை அங்குல உயரத்தில் வாதுமைப் பருப்பள வில் ஒரு புடைப்பு இருந்தது. இஃது அவர்களுக்கு மிகவும் மென்மையும் நுட்ப ஆற்றலும் பொருந்திய ஒரு புலனு யமைந்தது.

இவர்களுக்கே சிறப்பான இவ் வுறுப்பின் பய னைப்பற்றிப் பலர் பலவாறு கூறியுள்ளார். இது வேண்டும்பொழுது பிற புலன்களின் தொழிலையே நேரடியாக மனத்துடன் கொள்வது என்றும், நாம் அறியும் (நீளம்; அகலம்; அல்லது உயரம், ஆழம் அல்லது திணமை) என்ற அளவைகளுக்கும் அப் பாற்பட்ட நான்காம் அளவையை உய்த்துணர்வது என்றும், முக்காலங்களையும் பிறர் எண்ணங்களையும் தொலை நிகழ்ச்சிகளையும் அறியும் அறிவுக்கண் என் றும் ஆசிரியர் கார்வே கொள்கிறுர்.

எப்படியாயினும் தொல்காப்பியத்தில் மனிதர்க் குச் சிறப்பாகச் சொல்லப்பட்ட ஆறும் அறிவையும் சிவபெருமானது நெற்றிக் கண்ணையும் இது நினைப் பூட்டுவது காண்க.

இலெமூரியர்கள் வீடுகளும் மற்றக் கட்டிடங் களும் நீண்ட சதுர உருவில் 10 அல்லது 11 அடி உயரமுள்ள சுவர்கள் எழுப்பப்பெற்று அவற்றின்

மீது கைகள் இறக்கித் தழைகளும் வேயப்பெற்றவை. அவற்றிற்கு வெளியிலும் கூரை 4 அல்லது 5 அடி தொலைவுடையதாயிருந்ததால் உட்பகுதி குளிர்ச்சியுடையதாயிருந்தது.

வீடுகள் நெருக்கிக் கட்டப்பெறவில்லை; இடைவெளியிட்டு உடல் நலத்துக்கு ஒத்த முறையில் பெரியவையாகவும் காற்றோட்டமுள்ளவையாகவும் அமைக்கப்பட்டன.

பெரிய பொதுக் கட்டிடங்களும் இந்த மாதிரியிலேதான் கட்டப்பட்டன. சுவர்கள் இன்னும் உயரமாயிருந்தன. சில சமயங்களில் பல தனிக் கட்டிடங்கள் கூரையிட்ட வழிப்பாதையில் ஒன்றாகப் பிணைக்கப்பட் டிருந்தன.

பாறைகளுக்குள்ளும் மலைகளுக்குள்ளும் குடைந்து செதுக்கிய அரிய வேலைப்பாடுடைய கட்டிடங்களும் இருந்தன. இக் கட்டிட வேலைகளில் நாம் மேற்கூறிய [1]யுக்காலிப்தஸ், செம்மரம் முதலிய மரங்களின் பகுதிகள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன.

கோயில் கட்டுகையில் வளைந்து கவிந்த விமானங்கள் அமைக்கப்பட்டன. அவற்றுள் முன் வாயிலில் இரண்டு பிறை வளைவுகள் இருந்தன. அவர்களுடைய சமய, அறிவியல் ஆராய்ச்சிகளை இவ்வளைவுகள் குறிப்பன ஆகும்.

நிலத்திலிருந்து உயர்ந்த மேடை ஒன்றமைத்து அதனைச் சுற்றிக் கொசு முதலிய சிற்றுயிர்கள் தொந்தரவு செய்யாமல் நார்வலை ஒன்றைத் தொங்கவிட்டுப் படுக்கை அமைக்கப்பட்டது. காற்றோட்டத்திற்காக மேலிடம் திறந்தே இருந்தது.

---

[1]Eucalyptus, Red Wood.

உணவு, நெருப்புமீதோ அல்லது வெயில் வன்மையால் சமைக்கும் கருவி அடுப்புகளின்மீதோ சமைக்கப்பட்டது.

காலைக் குளிப்பும், கடவுள் வழிபாடும் சமயத்தின் பகுதியாகக் கொள்ளப்பட்டு வந்த நடைமுறைகளாயிருந்தன.

வீடுகள், கோயில்கள், பயிர்ப் பண்ணைகள், தொழில் நிலையங்கள் இவை வேறுவேறு தனியிடங்களில் கட்டப்பட்டன.

தெருக்களும், தலைமைப் பாதைகளும் அமைக்க வேண்டுமிடங்களில், முதலில் செடி கொடிகளை வெட்டி நிலத்தைச் செம்மைப்படுத்தி ஈரமாக்கி அதன்மீது சீமைச் சுண்ணும்புபோல் தோன்றும் ஒரு வகை வெண்மையான கற்பொடியைத் தூவினர்: காய்ந்தபின் அது தற்காலத்து ஸிமென்டைப்போல் இறுகிவிடுமாம். அவ்விடத்தில் புல் முதலிய செடிகள் வளர்ந்து பாதை கெடுவதில்லை.

ஒட்டகம் போன்ற ஒருவகைப் பெரிய விலங்கின் மீதமர்ந்து அவர்கள் பயணம் செய்தனர். இதனை அவர்கள் வரைந்துள்ள படங்களினின்றும் நாம் அறிகிறோம். இடம்விட்டு இடம் பெயர்வது மிகுதியாக அன்று வேண்டப்படவில்லை.

அவ்வவ்விடங்களில் அவ்வவ் விடங்களுக்குவேண்டிய பொருள்கள் பெரும்பாலும் செய்யப்பட்டு வந்தமையால் வாணிபம் குறைவாகவே நடந்தது. இயற்கை வளப்ப வேறுபாட்டால் உண்டாகாத பொருள்கள் மட்டுமே மற்ற இடங்களிலிருந்து தருவிக்கப்பட்டன.

அக்காலங்களிலும் அவ் வாணிபத்துக்குப் பணம் வழங்கப் பெறவில்லை. பண்டமாற்றே நிகழ்ந்தது.

இலெமூரியர் பெரும்பாலும் ஆற்றின் கரைகளிலேயே வாழ்ந்துவந்தனர். அவர்கள் வாணிபம் பெரும்பாலும் ஆற்றில் படகு மூலமாகவே நடந்து வந்தது.

மேற்கூறிய ஒட்டக இனத்து விலங்கை யன்றி வேறு சில விலங்குகளையும் ஊர்தியாக அவர்கள் பயன்படுத்தினர். நயப்புள்ள நிலங்களில் சில சிறு விலங்குகள் வழுகும் வண்டிகளை இழுத்தன.

வாணிபத்தில் பணங் காசுகளை இலெமூரியர் வழங்கவில்லை என்று மேலே கூறினோம். ஆனால், அதனால் பொன் வெள்ளியே அவர்களுக்குத் தெரியாது என்பதில்லை. நேர்மாறாகப் பொன்னும் வெள்ளியும் இன்றைவிட அன்று மிகுதி. ஆயினும் அவை பயன்பட்டது அணிகலன்களுக்கு மட்டுமே.

இன்று மிகவும் அருமையாக மேல்நாட்டார் கையாளுவதும், பொன்னினும் விலைமிக்கதுமான பிளாட்டினம் என்னும் ஒண்பொருள் அவர்களிடை மிகுதியாக வழங்கியதாய்க் காண்கிறோம். ஆயின், இதுவும் அணிகலன் வகையில் மட்டுந்தான் பயன்பட்டது.

கட்டிட அமைப்பிலும் வேலைப்பாட்டிலும் இலெமூரியர் தற்கால மக்களைவிட மிகவும் முற்போந்தவர்கள் என்றே சொல்லவேண்டும். அவர்கள் கட்டிட அமைப்புத் திட்டங்கள் மற்ற எல்லோருடைய திட்டங்களையும்விடக் கால எல்லையைக் கடந்து என்றும் நிலவத்தக்க நிலவரத்தன்மை பெற்றவை என்றுங் கூறவேண்டும்.

நெடுநாள் நடைமுறை அறிவாலும், அறிவியல் நுட்பத்தாலும், உளஇயல் ஆராய்ச்சியின் மேம்பாட்டினாலும் தம் கண்டத்தின் இயல்பு, அதன் எதிர்கால விளைவு ஆகியவற்றை அவர்கள் அறிந்திருக்க

வேண்டும். எனவே தமது கண்டம் பல நில அதிர்ச்சிகளுக்கும் பெயர்ச்சிகளுக்கும் ஆளாகவேண்டுமென்று கண்டு, தமது திறத்தால், இயற்கையின் அழிவையும் கால வலிமையையும் வெல்லும் வகையில், கட்டிடங்கள் அமைத்தனர்.

அவற்றின் உறுதிக்கு அவற்றைக் கட்டப் பயன் படுத்திய பொருள்மட்டும் காரணம் அன்று. அதனை அடுக்கும்முறையில் நடுநிலை ஒப்புமை (Centre of gravity) மயிரிழையளவு கூடப் பிறழாமல் பார்த்துக் கொண்ட அவர்கள் நுட்பம் நாம் அழுக்காறடையக் கூடியதேயாகும்.

பெரிய நில அதிர்ச்சி முதலிய இயற்கையின் சீற்றங்களுக்கிடையே அவர்கள் கட்டிடங்களில் சில, 30,000 ஆண்டளவும் அழியாது நின்றுளது என்றால் அவற்றின் உறுதிப்பாடுதான் என்னே!

இக் கட்டிடங்களில் அவர்கள் பயன்படுத்திய கற்கள் கருங்கல்லையும் சலவைக் கல்லையும்விடக் கடுமையும் உறுதியும் உடையவை. இவற்றைப் பிணைக்கும் ஒருவகைக் குழம்பு அவர்களுக்குத் தெரிந்திருந்தது. இவ்விரண்டு பொருள்களையும் அவர்கள் சென்ற இடமெல்லாம் நாம் காண்பதால் அவர்களது ஒருமைப்பாட்டை அவை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

தென் அமெரிக்கா மேல்கரை, பஜகாலிபோர்னியா, நெவதா முதலிய இடங்களில் இக் கல் அமைந்த வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. இன்று இவ்விடங்களில் இக் கல் அகப்படாததை நோக்க, அஃது இலெமூரியாவின் உட்பகுதியிலிருந்தே வந்திருக்கவேண்டும் என்று கொள்ளவேண்டும்.

இவற்றோடு ஓவியம், மட்பாண்ட வேலை, பயிர்த் தொழிற் கருவி முதலியவற்றிலும், அமெரிக்காவின் மேல்கரை பஸிப்பிக் தீவுகளை ஒத்திருப்பது இலெமூரியாக் கண்டத்தின் உண்மைப்பாட்டை வலியுறுத்துவதாகும்.

இலெமூரியரது வாழ்வு இன்றைய ஜப்பானியர் வாழ்வைப்போன்று இடுக்கண் நிறைந்ததாகும். நாட்டின் காற்றுமண்டலமும், நிலமும் பொறுக்க வொண்ணுச் சூடு உடையவையா யிருந்தன. எரிமலைகளின் எழுச்சியும், நில அதிர்ச்சியும் ஏற்படுவது இன்ன சமயம் இன்ன இடம் என்றில்லை. காட்டு விலங்குகளும், உயிர் வகைகளும் எங்கும் நிறைந்திருந்தன.

ஆனல், இத்தனைத் தடைகளிடையேயும், இலெமூரியர், நெடுங்கால நடைமுறை அறிவால், இயற்கையைக் கீழ்ப்படுத்திப் பலவகைகளில் தற்கால உலக நாகரிகத்தினும் சிறந்ததென்று சொல்லக்கூடிய உயரிய நாகரிகத்தை உண்டுபண்ணும் திறனுடையவரா யிருந்தனர்.

கருவிகளைக் கையாளுவதிலும் சரி, நிலக்கனிப் பொருள்களில் நமக்குத் தெரியாதவற்றின் உதவியாலோ அல்லது தெரிந்த பொருள்களையே நமக்குத் தெரியாத வகையில் பயன்படுத்துவதனுலோ அவர்கள் இயற்றிய பொருள்களிலும் சரி, அவர்கள் நம்மைவிட அரிய செயல்கள் செய்யக்கூடியவரா யிருந்தனர் என்பது மட்டும் உறுதி.

அவர்களுடைய அரிய கருவிப் பொருள்களுள் சிறந்த குணமுடைய ஒருவகைக் கல்லைப்பற்றி ஓவியங்களாலும் அவர்களுடைய சில கை எழுத்துப்படி

களின் மூலமாகவும் படிக்கிறோம். இக் கல் தண்ணீரைத் தன்பக்கம்நின்று மிகுந்த வன்மையுடன் தள்ளும் ஆற்றல் உடையது.

படகின் பின்பக்கம் இது நீர்மேல் தொட்டுத் தொங்கவிடப்பட்டால் தண்ணீரைத் தள்ளிப் படகை ஓட்டுமாம்.

இதேபோன்ற ஏதோ ஒரு கருவியால் அவர்கள் வான ஊர்தியையும் இயக்கி வந்தனர். ஒரு வகை நீராவிக் கருவியும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. காற்றியக்கு கருவியும், காந்த வலியால் இயங்கும் திரிகைக் கருவிகளும் பொது வழக்கில் இருந்தன.

வெயிலின் ஆற்றலை நம்மைவிட இலெமூரியர் பெரிதும் பயன்படுத்தி அதன்மூலம் பகல் வெளிச்சத்தை இரவிலும் தொடரச் செய்ததோடு, தொழில் ஆலைகளுக்கு வேண்டும் தொழில் வலியையும் உண்டு பண்ணினர்.

ஒளியை ஆளும் வகையில் தற்காலத்தவரை நெடுந்தொலை இலெமூரியர் பின்னிடையச் செய்து விட்டனர். அவர்கள் ஒரு மலை முழுவதும், அல்லது ஒரு நாடு முழுவதும் பேரொளி பரப்பும் ஆற்றல் உடையவர்களா யிருந்தனர்.

காலிபோர்னிய நாட்டில், மலையில் இன்றும் அடிக்கடி நெடுந் தொலை வரை எட்டும் ஒளி வீசுகின்றது என்றும், இது மலையில் மறைந்து உறையும் இலெமூரியரினதே எனக் கருதப்படுகின்றதென்றும் ஆசிரியர் கார்வே கூறுகின்றார்.

அவர்கள் இவ்வகையில் தற்காலத்தாரால் கண்டுபிடிக்க முடியாதபடி உண்டுபண்ணிய ஒளிகள பெரும்பாலும் அண்மையிலேயே நாம் கண்டுபிடித்த

இரேடியம் என்ற புதிய பொருளினுலோ அல்லது அதுபோல் இன்னும் கண்டுபிடிக்கப்படாத நிலப் பொருள் ஒன்றினுலோ ஏற்பட்டிருக்கவேண்டும்.

இலெமூரியர்களிடை எழுத்துப் பயிற்சி திருந்த அமையப் பெற்றிருந்தது. அவர்கள் எழுதியவை எல்லாம் பெரும்பாலும் அவர்க ளறிந்த அறிவியல் செய்திகளே.

தம் நாடு அழியக்கூடும் என்பதை அறிந்த அவர் கள் தமது நெடுநாளைய வாழ்க்கையின் மெய்ப்பய ஞகிய அறிவியல் உண்மைகளை என்றுமழியாது பதிவு செய்ய எண்ணி, உலகப் பேரழிவு நேரினும் அசையா உறுதிகொண்ட கட்டுப்பாடுடைய தங்கள் கோயில் களின் சுவர்களில் அவற்றை எழுதி வைத்தனர்.

இவற்றிலிருந்து அவர்கள் எதிர்கால நிகழ்ச்சி களை அறிந்து, பின் வருகின்ற தலைமுறைகட்குத் தமது அறிவைப் பயன்படுத்த விரும்பினர் என்பது நன்கு விளங்குகிறது.

அவர்களைப்பற்றிய எழுத்துச் சான்றுகளில் சிறந் தது கிலமத் அருவியின் பக்கம் கிலமத் ஏரியைச் சுற்றி எழுதப்பட்டவையே. இவற்றை வாசிக்க இவற்றின் ஒலிக் குறியீடு இன்னும் புலப்படவில்லை. ஆயினும் வேறு இலெமூரியர் எழுத்து வகைகளுடன் இது ஒத்தே காணப்படுகிறது.

போரில் இலெமூரியர் வில் அம்பு இவற்றை மட்டுமே திறமையுடன் பயன்படுத்தினர் என்று தெரிய வருகிறது. அவர்கள் தற்கால மக்களைப்போல் அழிவு வேலையில் அத்தனைக் கருத்துச் செலுத்தாமல் ஆக்க வேலையில் மட்டுங் கருத்துச் செலுத்தியது குறிப்பிடத் தக்கது.

இலெமூரியர்களிடையே கொடுக்கல் வாங்கல் முறையிலும் நாணயம் வழங்கப் பெறவில்லை. உழைப்புக்கு ஊதியம் ஆவதெல்லாம் பொது உணவு, உடை இவற்றுட் பங்கேயன்றி வேறில்லை. தம்மிடம் கிடையாத பொருள்களைமட்டும் வேறு புலத்தவரின் பொருள்களுடன் அவர்கள் பண்டமாற்றுச் செய்து கொண்டனர்.

கலைப்பயிற்சி வகையில் அவரவர்க்குப் பிடித்த கலையை அவரவர் மேம்படுத்திக்கொண்டு போக எல்லா வகை உதவியும் செய்யப்பட்டது. கலைத் தொழிலாளர் பிழைப்புக்குக் கலையை எதிர்பார்த்திருக்க விட்டுக் கலையின் வன்மை, உயர்வு முதலியவற்றைத் தற்காலத்தவர்போல் அவர்கள் கீழ்ப்படுத்தவில்லை. அறிவுத் துறையிலுள்ளவர்க்கும் இதே வகையில் உணவுக்கும், உடைக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இலெமூரியர்களின் வாழ்க்கை விவரங்களைப் படித்துப் பார்க்கும் தற்காலத்தான் ஒருவன் கண்ணுக்கு அவர்களிடம் ஒழுக்கமுறையே கிடையாது என்று தோற்றும். திறந்த உடல் பற்றிய எவ்வகை வெட்க உணர்ச்சியும் அவர்களுக்குக் கிடையாது. அவர்கள் தற்கால வெறறுடற கழகங்கள் மாதிரி வேண்டுமென்று ஆடையில்லாமல் இருப்பதில்லை. ஆயினும் குளிக்கும் இடங்களில் இருபாலாரும் ஆடையின்றிக் குளிப்பதிலும் நீந்தி விளையாடுவதிலும் அருவருப்பு அற்றவரா யிருந்தனர்.

இலெமூரியர், இந்தியர் எகிப்தியர் முதலிய கீழ்நாட்டு மக்களைப் போலவே அரையைச் சுற்றித் தொங்கலான ஆடை கட்டிவந்தனர். அவர்களது

நாடும் இந்தியாவைப் போலவே வெப்பமுடையதா யிருந்ததனுல் இந்த ஆடைமுறை மிகப் பொருத்த மானதாகவே இருந்தது.

இலெமூரியரிடை இருபாலார்க்கும் பொதுவான ஒழுக்க முறைகளும், மணவினை முறைகளும் இருந் தன. அவற்றுட் சில இன்னும் பஸிபிக் கடற்புறத்தி லுள்ள தீவுகளில் காணப்படுகின்றன.

மனமொத்த காதலர் இருவர் மணவாழ்வினை ஏற்க விரும்பினுல் முதன்முதலில் அவர்களது சமயத் தலைவரை அணுகுவர். சமயத் தலைவரை இலெமூரி யர் தம் மொழியில் 'கு' என்று வழங்குவர். அவரே ஆசிரியராகவும், ஊர்த் தலைவராகவும், முதல் வகுப்புத் தலைவராகவும் இருந்தார். இவர்முன் காதலர் சென்று தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்வர்.

அதன்பின் இருதிறத்துப் பெற்ருேர், உறவினர் முதலியவர்களை அக் 'கு' அல்லது குரு அழைத்து அவர்களுடன் கலந்து அவ் விருவரது வாழ்க்கைப் பிணிப்பு விரும்பத்தக்கதுதானு என்பதை ஆராய்ந்து விரும்பத்தக்கதே என்று துணிந்தபின், அவ் விருவரது உடை, உடைமை யாவற்றையும் அகற்றிவிட்டு வெறு மையாக ஊர்க்கு வெளியேயுள்ள காட்டில் தனிமை யில் துரத்திவிடுவர். அவர்களிடம் ஒண்பொருள் (உலோகம்) எதுவும் அப்போது இருக்கப்படாது.

இந்த நிலையில், அவர்கள் காட்டினுள் 50-கல் தொலைவரைச் சென்று அங்கே இரண்டு திங்கள் பொழுதேனும் காலங் கழித்து வரவேண்டுமென்று அவர்களுக்கு ஆணை தரப்பட்டது. அவ் வெல்லையுள் அவர்கள் தங்களுக்கான ஆடைகள் செய்துகொண்டு வாழப் பயின்றனரா, காட்டு விலங்குகளிலிருந்து தன்

காதலியைக் காதலன் காத்து அச்சமகற்றி வாழ்ந்தனா, காதலி காதலனுக்கு எவ்வகையினும் ஒத்த துணைவியாய் இருந்தனளா என்பனவெல்லாம் மறைவாயும் நேரிடையாய் உசாவியும் அறியப்பட்டன.

அவர்கள் அன்பு, இத்தனைத் தேர்வுகளிலும் தேறிப் பின்பும் மாறாதிருந்தால், கோவிலில் வைத்துப் பல நுண்ணிய வினைகளுடன் அவர்களது மணவினை நிகழ்த்தப்பெறும்.

தேர்வுகளுள் இன்னொன்றும் உண்டு. காட்டுவழியினின்று வந்தவுடன் குரு காதலர் ஒவ்வொருவரிடமும் ஒண்பொருள் (உலோகத்) துண்டு ஒன்று கேட்பர். அது, அவர்களிடமில்லாவிட்டால் காட்டுக்கனுப்பும் நாள் ஒரு திங்கள் ஒத்திவைக்கப்படும்.

தேர்வுகளுள் எதிலேனும் தவறினால், அக் காதலர் இருவரும் ஒருவரை ஒருவர் மணக்க முடியாததுமட்டுமன்று, மணப் பேச்சே பின் எடுக்கவும் இயலாது.

மணவாழ்வு முறிவு என்னும் பெயர்கூட அன்று கிடையாது.

மண வினைகளுள் குறிப்பிடத்தக்கது ஒன்று உண்டு. மணமக்கள் கைகளின் சுட்டுவிரல்களிரண்டிலும் ஓரங்குலம் கத்தியால் செதுக்கிச், செதுக்கிய இடத்தில் இரண்டையும் சேர்த்து (ஒட்டுமாங்கன்றை ஒட்டிப் பிணைப்பதுபோல்) பிணைத்து இருவர் குருதியும் ஒருப்பட்டொழுகச் செய்வர். (தமிழ் நாட்டில் செதுக்குதல்மட்டும் அகற்றப்பட்டு விரல்கள் பிணித்துவைக்கப்படுதல் காண்க.)

பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்புத், தாய் தந்தையரிடமே விட்டுவிடப்படவில்லை. ஊர்ப் பொதுவில் பிள்ளை வளர்ப்புக் கழகங்கள் இருந்தன. மருத்து

வரும் மிக உயர்நிலையி லிருந்தனர். மருந்துகளைவிட இயற்கை முறைகளும், உள்ளத்தை இயக்குவதன் மூலம் உடலை இயக்கி நோய் நீக்கு முறைகளும் அந் நாள் மிகுந்திருந்தன.

சாவு என்பதைக் கண்டு இக் காலத்தவர் அஞ்சும் அச்சத்தின் நிழல்கூட அன்றில்லை. சாவுக்குப் பின்னும், பிறப்புக்கு முன்னும் உள்ள வாழ்வுகளை அறிந்தவர்கள் அவர்கள் என்று மேலே கூறப்பட்டது. எனவே, அவருக்குத் (தமிழருக்கு எப்படியோ அப் படியே)

"உறங்குவதுபோலும் சாக்காடு; உறங்கி,
விழிப்பது போலும் பிறப்பு."

மேலும் இந் நாளிலோ, அந் நாளில் வேறுபல நாடுகளிலும் இறந்த உடலைப் போற்றி உயிரிருக்கும்போதுகூடக் காட்டாத பூசனைகளை யெல்லாம் காட்டிப் பூசிக்கும் வழக்கம், உண்டு. ஆனால் இலெமூரியரோ (பழைய சித்தர்கள் போன்று)

"நார்த்தொடுத் தீர்க்கிலென்! நன்றாய்ந் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென்? பல்லோர் பழிக்கிலென்?
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டுப் போனஇக் கூட்டையே"

எனக் கொண்டு பிணத்தை எங்கெறிந்தா லென்ன என்று அமைந்த கருத்துக்கொண் டிருந்தனர்.

மேலும், பிறப்பு வாழ்க்கை யரும்பு; வாழ்வு அதன் வளர்சி; இறப்பே அதன் முதிர்வு; கீழ் வகுப்பிலிருந்து மேல் வகுப்புக்குப் போகும் மாணவனுக்கே இறக்கும் உயிர் ஒப்பாகும். தேறியவனுக்காக வருந்தும் ஆசிரியனையே இறந்தவனுக்காக

வருந்துபவர் ஒப்பர் எனக் கொண்டவர் இலெமூரியர்; ஆகலான், தமது உடம்பினைப்பெற்ற பயன் அடைந்து விட்டோம் என்றோ, உடம்பு அப் பயனைப் பெறுதற்குரிய தகுதியை இழந்துவிட்டதென்றோ கண்டவுடன் தாமே தமது உயிரை விடும் இயல்புடையவர்.

இம் முறை தற்கொலை முறையன்று. உடம்பை அழிக்காமலே உயிரை உடம்பினின்றும் பிரிக்கும் அருஞ்செயல் அவர்களிடம் மிகுதி. இவ் வகையில் இளமையில் உயிர்விட்டார் சிலர். அங்ஙனம் உயிர் நீப்பார் அதனை முன் கூட்டி உறவின் முறையார்க்கு அறிவித்தழைக்க அவர்கள் வந்திருந்து வழியனுப்புவதும், சில சமயம் இறப்பார் தமக்கான கல்லறை கட்டிவைத்து அதில் தம் கைப்பட இறக்கும் நாள், இறக்கும் தம் பெயர், தமது குறிக்கோளான மொழிகள் இவற்றைச் செதுக்கிப் பின் இறந்து அதில் அடக்கம் செய்யப்படுவதும் உண்டாம்.

இச் செய்தியுடன் தமிழரது வடக்கிருத்தல் என்னும் வழக்கினையும், முதுமக்கள் தாழிகளையும் பொருத்தி நோக்குக.

இலெமூரியரிடமுள்ள கலைச் சிறப்புகளுள் ஒன்று அவர்கள் இறந்த உடலின் எலும்பு மட்டுமன்று, தசைகூடக் கெடாது வைத்திருக்கும் ஆற்றல் படைத்திருந்தமை ஆகும். இவ் விரண்டும் நல் நிலையில் வைக்கப்பட்ட உடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நம் நாகரிகந் தோன்றி ஒன்றிரண்டாயிர ஆண்டுகளே ஆயின. ஆனல் இலெமூரியர் நாகரிகம் உயர்நிலை அடைந்திருந்த காலத்தில் அது நூறுயிரக் கணக்கான ஆண்டுகள் வளர்ச்சியடைந்து முதிர்ந்திருந்தது.

இதன் பயனாக அவர்கள் வாழ்க்கைப் பயிற்சியி லும், தொழில் நுட்பம், விடாமுயற்சி, இயற்கை அமைதிகளுடன் ஒத்துழைப்பு முதலியவற்றிலும் மிகவும் மேம்பட்டிருந்தனர். குறைபட்ட அறிவு, அக் குறை யறிவால் கறைபட்ட உள்ளம் என்பவை அவர்களிடையே கிடையா. போலி அறிவினாலும், வாழ்க்கையைப் பற்றிய தப்பெண்ணங்களாலும் அவர்கள் கருத்துக் குழப்பமுற்றதில்லை.

சமய வகையிலும் அவர்களது அறிவு களங்கமற் றிருந்தது. ஏனெனில், உலகத்தோற்றம், நடுக்கம், உயிர்களின் நிலை ஆகிய அடிப்படையான செய்தி களில் எல்லாம் அவர்கள் குரங்குப்பிடியாக ஏதே னும் ஒரு கொள்கையைப் பற்றிக்கொண்டிராமல், திறந்த மனமுடையவராய் வாழ்ந்துவந்தனர் ஆதலி னாலேயே.

உயிர்களின் உள்ளத்திற்கு அப்பாற்பட்ட உலகப் பொது உள்ளம் ஒன்று இருந்ததென்பதை அவர்கள் உறுதியாக நம்பினர். அஃது அவர்களிடை வெறும் நம்பிக்கையன்று. நடைமுறையுட்பட்ட ஒரு நிலவர மானநாள்முறை உண்மையாதலின், அஃது இந்நாளுல கில் இருப்பதுபோல் வாரத்துக் கொருநாள், அல்லது நாளில் ஓர் ஓரை, அல்லது ஓர் இடம் பற்றி நில்லாமல் பாலில் நீர் கலந்தாற்போல் அவர்கள் வாழ்க்கையில் இரண்டறக் கலந்திருந்தது.

அவர்கள் நெற்றியில் கண்போன் றமைந்திருந்த உறுப்பைப்பற்றியும், அஃது அவர்களுக்கு ஆறும் அறிவைத் தந்ததுடன் நாலாம் அளவையையும் அறி யக் கருவியா யிருந்தது என்பதுபற்றியும் மேலே கூறி யிருக்கிறோம். அதோடு இதே நெற்றிக் கண்ணின்

பயனுகவே அவர்கள் உலகமுற்றும் செல்லத்தகும் தொலைப்பார்வையாற்றலையும், முக்கால உணர்வையும் பெற்றிருந்தனர்.

இக் கண்ணின் பார்வை, முன்னுல் உள்ள அண்மை சேய்மைப் பொருள்கள் நீங்கலாகப், பின், மேல், நுண்மை ஆகிய பிற நிலைகளைத் துருவி நோக்குவதாகவும் அமைந்திருந்தது.


தமிழில் அண்மையை இ என்ற சுட்டும், சேய்மையை அ என்னும் சுட்டும் காட்ட, உ என்பது முன் அல்லாத இப் பிற இடங்களையே காட்டி நிற்றலை நோக்குக. அ இ என்ற இரு சுட்டும் கட்புலப் பொருள்களைக் குறிப்ப, உச் சுட்டு மட்டும் அகக் கண்ணுக்கன்றிப் பிற கண்களுக்கு மறைக்கப்பட்ட வெளிப் பொருள்களையும் உட்பொருள்களையும் குறிக்கின்றது காண்க.

கடவுளின் இயல்புபற்றிய இலெமூரியர் கருத்து மிகவும் உயர்வானது. அவர்கள், கடவுள் எங்கும் நிறைந்த ஒரு தத்துவம் அல்லது உண்மை என்றும், அது நன்மை தீமை, ஆண் பெண் என்னும் இருமை உணர்ச்சியின்றிப் பொதுநிலை வாய்ந்தது என்றும், அவரது படைப்புத் தொழிலே அன்புக்கு அறிகுறி என்றுங் கொண்டனர்.

மறுபிறப்பு அவர்களுக்குக் கொள்கை என்று சொன்னுல் போதாது. வீட்டில் முன் திண்ணை, பின்னறை நமக்கு எவ்வளவு எளிய உண்மைகளோ அவ்வளவுக்கு அஃது அவர்கள் தெளிவாய் அறிந்த ஒரு செய்தி ஆகும். தம் முற்பிறப்பும் பிற்பிறப்பும் அறிந்து, உணர்வுடன் இறந்து உணர்வுடன் பிறக்கும் அத்தகைய மக்களுக்கு அது கண்கூடான உலகியல்

உண்மையேயன்றிச் சமயக் கொள்கை என்று கூறுதல் பொருந்தாது.

அவர்கள் சமயக்குறி, ஸ்வஸ்திகாச் சக்கரம்போல் நடுவே சிலுவை அல்லது காற்ருடிமாதிரி ஒரு குறியும்




சுற்றிலும் ஒரு வட்டமும் ஆகும். இவற்றுட் சில வகைகளைப் படத்தில் பார்க்க. அவர்கள் சமயத்தில் அடிப்படையாக "நான்கு கவர்கொண்ட கொள்கை[1]"யைக் கொண்டனர்.



அவர்களுடைய வரலாற்றைப் பிற்காலத்தவருக்கு அறிவிப்பதற்கென எழுதப்பட்டனவாகக் கருதப்படும் எண்ணிறந்த குறிகள் ஏரியை யடுத்த மலைப் பாறைகளிற் காணப்படுகின்றன. அவற்றிற் சிலவே மேற்படத்திற் காண்பன.

[1] Fourfold Doctrine.

இத்தகைய குறிகள் காணப்படும் இடத்திற்குச் சற்றுத் தொலைவிலேதான் **ஷாஸ்தா மலை**[1] இருக்கிறது. இது **ஸிரா நிவாடா**[2] மலையின் வட முனையில் இருப்பதாகும். இம் மலையில் அடிக்கடி காணப்படும்




பேரொளிகளைப்பற்றிக் காலிபோர்னியா மக்களிடைப் பல கதைகள் வழங்குகின்றன. இம் மலை பண்டைக் காலத்தில் ஓர் எரிமலையா யிருந்திருக்க வேண்டும் போலும்!

---

1 Mt. Shasta. 2 Sierra Nevada.

இனி இம் மலையில் அவர்கள் தெய்வமொன்றைத் தொலைப்பார்வைக் கண்ணாடியில் தாம் பார்த்ததாக



ஷாஸ்தா

**திரு. லார்ஸ்கின்** கூறுகிருர். அந் நாட்டு மலைகளிற் காணப்படும் பேரொளிகளும், குன்ற மாந்தர்களின் அருஞ்செயல்களும் இன்னும் மீந்திருக்கும் இலெமூரி யரது அறிவியல் உயர்வைக் காட்டுகின்றன என்று **திரு. கார்வே** கூறுகிருர்.

## கூ. தற்கால நாகரிகமும் இலெமூரியரும்

உலகியலறிஞர், உள்ள நிலைகளில் மூவகைப் பாகுபாட்டைப் பிரித்தறிகின்றனர். முதலாவது அறிவுப் பகுதி அல்லது உணர்வு நிலை;[1] இரண்டாவது உணர்ச்சிப் பகுதி அல்லது அரை உணர்வு நிலை;[2] மூன்றாவது உணர்வின்மை நிலை.[3] இவற்றையே தமிழ்நூல் வல்லார் நனவுநிலை, கனவுநிலை, சுழுத்திநிலை எனக் கூறுவர்.

இவற்றுள் தற்கால மாந்தர் உணர்ச்சியினின்று விடுதலைபெற்று, அறிவினாலேயே உயர்வுபெற்று வருகின்றனர். இவ் வறிவை நன்கு பயன்படுத்தக் கற்குமுன் பிற விலங்கினங்களைப் போன்று மனிதனும் உணர்ச்சியினாலேயே எல்லாக் காரியங்களையும் செய்திருக்கவேண்டும்.

ஆசிரியர் **ஸ்காட் எலியட், ருடால்ப் ஸ்டைனர்** முதலியோர் தமது மனிதத் தோற்றக் கொள்கைக்கிணங்க, முதல் இரண்டு நில ஆக்க இயல்காலப் பகுதிகளிலும் இருந்த மக்கள் உடம்பே அற்று மூன்றாவது சுழுத்தி நிலையை ஒட்டிய முந்திய கற்பத்து உயிர்கள் என்றும், மூன்றாங் காலத்தைச் சார்ந்த இலெமூரிய மக்கள் உணர்ச்சியையே முழு ஆற்றலாகக் கொண்டவர் என்றும், அவ் உணர்ச்சி தற்கால மனிதரைவிட அவர்களிடம் கூடுதலாக இயற்கையாகவே அமைந்திருந்தபடியால் தற்காலத்தாரால் செய்தற்கு அரிய சில செய்கைகளையும் உணர்ச்சியின் உதவியால் செய்தனர் என்றும், அதன்

[1] Conscious level. [2] Subconscious level.
[3] Unconscious level.

பின் நான்காம் காலத்திருந்த அத்லாந்தியர் அறிவைப் பயன்படுத்தினும் அதனைத் தன்னல முறையில் ஆற்றியதால் அழிந்தனர் என்றும், ஐந்தாம் காலத்தவராகிய தற்கால ஆரியர் அறிவை நன்முறையில் பயன்படுத்த முயல்கின்றனர் என்றும் மனித வளர்ச்சி பற்றிக் கூறுகின்றனர்.

இன்னும், முதன்முதல் பால் பாகுபாடு ஏற்பட்டதுகூட இலெமூரியாவிலேயே என்றும், எழுத்தும் பேச்சும் அதற்குப் பிந்தி ஏற்பட்டதே என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால், ஆசிரியர் எஸ். கார்வே காலிபோர்னியாவிலும் பிற இடங்களிலும் கண்ட சான்றுகளால் இத்தகைய புனைவியல் தடுமாற்றங்களுக்கு இடமில்லாமல் செய்துவிட்டனர். இலெமூரியர் எழுத்து வாசனையுடையவர். பேசத் தெரிந்தவரேயாயினும், பேச்சின்றிக் கருத்து மாற்றும் ஆற்றலும் உடையவர் என்றும், முக்கால உணர்வும் உள்நோக்கும் உடையவர் என்றும், இவற்றின் உதவியால் தற்கால மனிதரை விட அறிவியற்கலை, கருவியாற்றல், நாகரிகம் ஆகிய பகுதிகளில் பல வழியில் முன்னேறியவர் என்றும் கொள்கிறார்.

முன் கூறிய ஆசிரியர்களின் தடுமாற்றங்களுக்குக் காரணம் அவர்கள் தாம் கண்கூடாகக் கண்ட அறிவியல் உண்மைகளையும் தமது சமயக் கருத்துக்கு ஒப்பத் திருத்தி அமைக்க முயல்வதனாலேயே என முன்னர்க் கூறினோம்.

அறிவியல் முறைப்படி வரலாற்றாராய்ச்சி வழியில் அவர்களைப் பின்பற்றிச் சென்று பார்த்தால் இலெமூரிய நாகரிகம் மனிதரின் மிகப் பழைமையான

நாகரிகம் என்பதும், நெடுநாள் வளர்ச்சியால் சில வகைகளில் தற்கால நாகரிகத்துக்கு ஒப்பாகவோ மிகையாகவோ காணப்படினும் பல வகைகளில் அதன் பழங் காலத்தைக் குறிக்கும் குறைபாடுக ளில்லாத தன்றென்பதும், அதற்குப் பின்னும், அத்லாந்திய நாகரிகத்திற்குப் பின்னும், மற்றும் அடிக்கடி வேறு காலங்களிலும் மனித நாகரிக வளர்ச்சியில் உயர்வு தாழ்வுகளும், மாற்றங்களும், அழிவுகளும், புது வளர்ச்சிகளும் ஏற்பட்டுள்ளன என்பதும் தெளிவா கக் காணப்படுகின்றன.

தற்கால (அஃதாவது, சிறப்பாக மேல் நாட்டு) நாகரிகத்தைவிட இலெமூரியர் சிறந்து விளங்கிய பகுதி அவர்களது வாழ்க்கை அமைதியிலேயே. அவ் உயர்வு உண்மையில் இலெமூரியாவுக்கு மட்டுமன்று; பிற்போக்கு உடையவை என்று மேல்நாட்டாராற் கருதப்படும் பழைய கீழ்நாட்டு நாகரிகங்கள் அனைத் திற்கும் பொதுவானதேயாகும். தற்கால மேல்நாட்டு நாகரிகத்தின் தன்னலமும்,போட்டியுணர்ச்சியும், அழி வாற்றலும் மேம்பாடுபோலத் தோற்றினும் அவை அந் நாகரிகத்தின் அடிப்படையையே அழிக்கும் பெருந் தீங்குகளேயாகும்.

இலெமூரியரது வாழ்க்கையமைதிக்கேற்ப, இலெ மூரியரின் சமய உணர்ச்சி நடுநிலையும், நேர்மையும் உடையது. இன்று உலகில் காணப்படும் கடவுள் மறுப் புணர்ச்சியும் அவர்களிடை யில்லை. அதற்கு மாறாகக் கீழ்நாட்டாரிடை அடிக்கடி காணப்படுகின்ற கடவுள் பேராற் காட்டப்படும் வெறியும் அங்கில்லை. போலி உணர்ச்சியோ மருந்திற்கும் இருந்ததில்லை. சமயம், அவர்கள் வாழ்க்கையோடு சேர்ந்த ஒரு வாழ்க்கை

அமைதி. தொல்காப்பியத்திலும், திருக்குறளிலும், இன்னும் சிறப்பாகச் சிலப்பதிகாரத்திலும் இத்தகைய சமய அமைதியை நாம் காணலாம்.

வாழ்க்கையிலும் இலெமூரியரிடைப் பொருளற்ற போட்டி யில்லை. அதற்கான விரைவும் இல்லை. மாலையில் உலாவப் போகிறவர்கள் அதற்காகக் கடற் கரை செல்ல 60 கல் விரைவில் ஊர்தியில் செல்கின்ற புதுமை இக் காலத்தது. ஒரு நாட்டில் மக்கள் முற்றிலும் கைத்தொழிலே செய்து அத் தொழிற் பயனுகிய பொருள்களை அடுத்த நாட்டார் வாங்கவேண்டுமென்று வற்புறுத்துவதும், நெடுந் தொலையிலுள்ள நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை அவற்றிற்கு மாற்ருக வாங்குவதும் இதே வகைப்பட்ட குழப்பத்தைச் சார்ந்ததே. இலெமூரியரது வாழ்க்கை, இதிலும் கீழ் நாட்டாரது வாழ்க்கையையே போன்றதாகும்.

அறிவியல் கலை வகைகளில் எல்லாத் துறைகளிலும் இன்றைய மேல்நாட்டறிவுக்கு இலெமூரியர் அறிவு ஒப்பாகமாட்டாது. ஆனல் அவர்கள் குறைபாடு பெரிதும் அழிவுத் துறை பற்றியதே என்பதும், உயர்வு ஆக்கத் துறை பற்றியது என்பதும் குறிப்பிடத்தக்கவை. வீடு நகரம் முதலியவற்றின் அமைப்புக்களிலும் உடை வகையிலும் உணவு வகையிலும் அவர்கள் உடல் நலத்தையும் இன்பத்தையும் போற்றினரேயன்றிப் பகட்டையும் ஆரவாரத்தையும் பாராட்டவில்லை.

இந்த அடிப்படையான உயிர்நிலை (ஆன்மிக) உண்மையை விட்டுவிட்டுத் தற்கால அறிவியல் நோக்குப்படி பார்த்தாற்கூட இலெமூரியர் சில வகைகளில் தற்கால மக்களைவிட முற்போக்கானவர் என்று தெரி

கின்றது. இதற்கு நாம் முற்கூறிய செய்தியோடுகூட அவர்களது நெடுங்கால நடைமுறை யறிவும் ஒரு காரணமாகும். நமது தற்கால மேல்நாட்டு நாகரிகம் சில நூற்றுண்டுகளே பழைமையுடையது. அதற்கு அடிப்படையாயிருந்த கிரேக்க உரோம நாகரிகங்கள் கூட இரண்டுமூன்றுயிர ஆண்டுகளுக்கு முந்தியவை யல்ல. இந்த அளவில்கூட இந் நாகரிகம் முழுத் தன்னுட்சி (சுதந்தரம்) உடையதன்று. ஏனெனில் இலெமூரிய நாகரிகத்தின் கிளைகளாகிய இந்திய நாகரிகம், செமித்திய நாகரிகம் இவற்றின் பல பகுதிகளை அது பல காலங்களில் தன்னுள் ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்கு மாருக, இலெமூரிய நாகரிகம் தன்னுட்சியுடன் ஒரு நூருயிர ஆண்டு முதல் இரண்டு நூருயிர ஆண்டுவரையிற் பயின்ற தொன்ரும்.

இந் நடைமுறை யறிவால் தற்காலத்தவருக்குத் தெரியாத பல மூலப்பொருள்களும்,[1] கருப்பொருள்[2] களும், ஒண்பொருள்களும்[3] அவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். அவற்றுள் நீரை விலக்கும் ஆற்றல் வாய்ந்த கல் ஒன்றும், பேரொளிகள் தரும் ஆற்றலுடைய ரேடியம் என்றதற்கான புதிய ஒண்பொருளோ அல்லது அதுபோன்ற பிறிதோர் ஒண்பொருளோ ஒன்றும், தற்காலப் பூச்சுமண்ணை (ஸிமென்டை)ப் போல்[4] மண்ணை உறுதி செய்யக் கூடிய வெண் கற்பொடி ஒன்றும் தலைமையானவை என்று முன்னர்க் கூறியுள்ளோம்.

இவற்றின் உதவியால் அவர்கள் பலவகை ஊர்திகளும், வான ஊர்திகளும், உறுதியான பாதைகளும்

---

[1] Elements. [2] Minerals. [3] Metals. [4] Cement.

அமைத்தனர். மூலப்பொருள்களின் அறிவாலும், பொருள்களின் ஒப்பநிலை[1] அறிவாலும், மரக்கட்டைகளைப் பாதுகாத்து வைக்கும் அறிவாலும், அவர்கள் 30,000 ஆண்டளவும் அழியாத கட்டிடங்களும் கோவில்களும் நிறுவினர். அவர்களது ஒளியறிவு மிகுதியால் தற்காலத்தாரால் வியக்கத்தக்க வண்ணம் பல நூறு கல் தொலைவரை ஒளிவீசும் விளக்கங்களை அவர்கள் உண்டுபண்ணி இரவைப் பகலாகச் செய்திருந்தனராம். கலைகளிலும் ஓவியத்திலும் மற்றும் அவர்களது திறன் தற்காலத்தவர் அழுக்காறடையத் தக்கதாகவே இருந்தது.

ஆனால் இத்தனைத் திறனும் மனித ஆக்கத் துறையில் சென்றதேயன்றி அழிவுத் துறையில் செல்லவில்லை. அத்லாந்திய நாகரிக காலத்திலும், அதன் பின் செமித்தியர் நாளிலும் மக்கள் ஒருவரோடு ஒருவர் போர்த்திறங்காட்டி அழிவு செய்தபடி அவர்கள் செய்யவுமில்லை; செய்ய முயலவுமில்லை. தம்மைச் சுற்றியுள்ள பெரிய விலங்கினங்கள் பாம்புகள் இவற்றிலிருந்துகூட அவர்கள் தப்பி ஒதுங்கி நிற்க முயன்றனரேயன்றி அவற்றை அழிவுசெய்ய முற்பட்டதாகத் தெரியவில்லை.

அழிவுத் திறன் மிகுந்த நாகரிக காலங்களிலேதான் கோட்டை கொத்தளங்களும், பெரு நகரங்களும் மிகுந்திருக்கும். அத்லாந்திய நாகரிகம் இத்தகையதே. ஆனால் இலெமூரியாவில் வீடுகளும் ஊர்களும் மனித வாழ்க்கைநல மொன்றையே நோக்கமாகக்கொண்டு, தற்கால மலையாள நாட்டு வீடுகளைப் போன்று, இடைவெளிகளும் சோலைகளும் விட்டுக்

[1] Balance.

கட்டப்பட்டவையேயாகும். ஆங்காங்குள்ள சில நக ரங்களும் வாணிபத் துறைகள் அல்லது தொழில் துறைகளாகவே அமைந்திருந்தன.

இன்று இலெமூரியர் நாகரிகத்தைப்பற்றி நாம் அறிய உதவும் கட்டிடங்கள் அவர்கள் கோயில்கள் மட்டுமே யாகும். அவர்கள் ஊர்களும் வீடுகளும் இன்றைய ஜப்பானியர் வீடுகளைப்போல் எரிமலை, நில அதிர்ச்சி முதலியவை காரணமாக அழியும் பொருள்க ளாலேயே கட்டப்பட்டன. இலெமூரியர் உலகியல் வாழ்வில் பற்றுக் குறைந்திருந்ததும் இதற்கு இன் ெ னாரு காரணம். தமிழரும் இதே கருத்துடையர் என்பதைத் தமிழ் மூதாட்டியார் " இடம்பட வீடெ டேல் " என்று கூறியிருப்பதனால் அறிக.

## ю. இலெமூரியாவும் தமிழ்நாடும்

இதுகாறும் இலெமூரியர்களைப்பற்றி வரைந்த குறிப்புக்களால் இலெமூரியாவிற்கும் தமிழ் நாட்டிற்கு முள்ள இன்றியமையாத் தொடர்புகள் எளிதில் விளங்கத்தக்கவையே யாயினும், முடிவுரையாக ஈண்டு அவற்றைத் தொகுத்துக் கூறுகிறோம்.

முதன் முதலாகத் தமிழ் நூல்களின் பழைமையும் தமிழ் நூல்களிற் குறிப்பிட்டுள்ள முச் சங்கங்களின் பழைமையும், வடமொழி நூலாகிய வால்மீகரது இராமாயணத்தாலும், புராணங்களாலும் நன்கு வலி யுறுத்தப்படுகின்றமையோடு தற்கால ஆராய்ச்சி நூல்களான ஞால நூல், நிலநூல், ஆவிமண்டல நூல் முதலியவற்றுடன் முற்றும் பொருத்தமுடையன என்றும் காட்டப்பட்டது.

உலகின் மிகப் பழைமையான நிலப்பகுதி இலெமூரியாவே என்பதும், தமிழ் நூல்களில் கூறப்பட்ட குமரிக்கண்டம் அவ் விலெமூரியாவாகவோ அல்லது அதன் பகுதியாகவோ இருக்கவேண்டும் என்பதும், அவ் விலெமூரியாவுக்கே சிறப்பாகக் கூறப்படும் பாறை வகைகளும், செடிகொடி இனங்களும், ஊர்வன, பறப்பன, நடப்பனவாகிய உயிரினங்களும் தமிழ்நாட்டில் இன்றும் உள்ளன என்பதும் அந் நூல்கள் நமக்கு எடுத்துக் கூறும் உண்மைகளாகும்.

இவையேயன்றி, இலெமூரியர் நாகரிகம், சமயம், ஒழுக்க நிலை முதலியவற்றைப்பற்றி நாம் எடுத்துக் கூறியவற்றுள்ளும் எத்தனையோ செய்திகள் இன்

றைய உலகில் தமிழ் நாட்டினர்க்கே சிறப்பாக உரியவை என்பது போதரும். அவற்றுள் குறிப்பிட்ட சிலவற்றைமட்டுமே இங்கே விதந்துரைக்க எண்ணு கிறோம்.

இலெமூரிய மக்களுக்கு நெற்றியில் கண் போன்ற ஓர் உறுப்பு உண்டு என்பது தற்காலத்தவர்க்கு எவ்வளவோ புதுமையான, நம்புதற்கரிதான செய்தியாயினும், தமிழர் தெய்வங்களின், அவற்றிலும் சிறப்பாகச் சைவசமயச் சார்பான சிவன், பிள்ளையார், முருகன், காளி ஆகிய பழந் தமிழ்த் தெய்வங்களின், உருவ அமைப்புக்களுள்ளும் இதே உண்மை வலியுறுத்திக் கூறப்படுவது உற்றுநோக்கத்தக்கது. (இத் தெய்வங்களின் முகங்கள் ஐந்து, ஆறு என மாறிய விடத்துங்கூட இம் மூன்றுவது கண் அல்லது நெற்றிக் கண் இன்றியமையாது வேண்டப்படுவது காண்க.)

இக் கண்ணின் இயல்பை நோக்க இவ் வியைபு இன்னும் நுட்பமானது என்பது காணலாம். ஐம் புலன்களிலும் சிறப்புடையது கண் ஆதலின், இவ்வுறுப்பு நெற்றிக் கண் என்று பெயர் கொண்டதாயினும், உண்மையில் இது கண்ணே, அல்லது ஐம்புலன்களுள் ஒன்றோ அன்று; அவ் வைம்புலன்களையும் உள்ளடக்கி, அவற்றிற்கும் அப்பாற்பட்ட ஓர் ஆறும் அறிவின்பாற்பட்டது. (தொல்காப்பியர் இத்தகைய ஆறும் அறிவு தெய்வப் பிறவிக்கேயன்றி மக்கட் பிறவிக்கும் இன்றியமையாப் பண்பாகக் கூறினர்.)

இவ் வறிவைப் பற்றிய கருத்துத் தமிழரிடை வெறுங் கட்டுக் கதையோ புனைந்துரையோ அன்று. அடிப்படையான இன்றியமையாத பழைய உண்மையே என்பது அதற்கெனத் தமிழில் வேறெம்

மொழியிலும் இல்லாத ஒரு தனிப்பட்ட நுண் கருத்துடைய சொல் இருப்பதனால் அறியலாம். அதுவே 'உ' என்ற மூன்றும் சுட்டு ஆகும். இஃது இம் மூன்றும் கண்ணுற் காணப்படும் பொருள்களை—அதாவது பருப்பொருள்களுள் மற்ற இரு கண்களுக்கும் மறைந்தவற்றையும் (பின் உள்ளது, மேல் உள்ளது, தொலையிடத்தும் முக்காலத்தும் உள்ளது ஆகியவற்றையும்) நுண்பொருள்களையும் குறிப்பது என்பது யாவரும் அறிந்ததே.

இரண்டாவதாக, இறந்தவரை உடலழியாமல் தாழியில் அடக்கிவைப்பது இலெமூரியர், எகிப்தியர், தமிழர் ஆகிய மூவர்க்கு மட்டுமே சிறப்பான பண்பாம். இஃதன்றி இலெமூரியரிடை வழங்கிய உடலினின்று உயிரைப் பிரிக்கும் முறையையும், உடலை நீண்ட நாள் கெடாது வைத்திருக்கும் முறையையும் நோக்குவோர், தமிழரிடை வழக்காற்றிலிருந்த 'வடக்கிருத்த'லையும் சித்தர் காயகற்ப முறையையும் எண்ணுதிருக்க முடியாது.

இலெமூரியரிடையேயும், தமிழரிடையேயும் பெண்கள் அடைந்திருந்த உயர்வு அதனைப்பற்றிப் பறைசாற்றி வரும் இந் நாளைய மேல் நாட்டினரிடையே கூட இல்லை எனல் மிகையாகாது. (தமிழ் நாட்டில் பெண்கள் ஔவையார் முதலிய தனிப் பெரும் புலவராகவும், மங்கையர்க்கரசி போன்ற அரசியல் தலைவராகவும்,திலகவதியார்,சூடிக்கொடுத்த நாச்சியார் முதலியோர் போன்ற சமயத் தலைவராகவும் இருந்தனர்.)

இவ் வகையில் இன்னொரு சுவை தரும் பொது உண்மை உளது. உலகின் மற்றெல்லா வகை

மக்களிடையேயும் உலகின் முழுமுதற் பொருள் ஆண்பாற் சார்புடையதாகவே கொள்ளப்பட்டிருக்க, மேற்கூறிய (இலெமூரியர், எகிப்தியர், தமிழர் ஆகிய) மூவரிடை மட்டும் அது பெண்பாற் பொருளாகத் தாயுருவிலும் வழிபடப்படுகிறது. சைவரிடை அம் முழுமுதற்பொருள் இன்னும் அம்மையப்பருருவில் இருபாலும் ஒருபாலாக வணங்கப்படுதல் காண்க.

இயற்கையை இலெமூரியர் இக் காலத்தவரை விடப் பன்மடங்கு மிகுதியாக அறிந்திருந்தும் அதனைத் தன்னலத்திற்காகவோ உலக அழிவிற்காகவோ பயன்படுத்தாமல் ஆக்கமுறையிற் பொது நலத்திற்காக மட்டுமே பயன்படுத்தியதை ஒருபுறமும்,கிட்டத்தட்ட அதே முறையில் அமைந்துள்ள சித்தர் முறையை மற்றொருபுறமும் ஒப்பிட்டு நோக்குபவர்க்கு அவ் விலெமூரியரில் மீந்து நின்றவரே சித்தராயினரோ என்ற ஐயம் எழாதிராது.

இன்னொரு சுவை தரும் பொதுமைப் பண்பு இலெமூரியரிடையும், இன்றுவரைப் பழந்தமிழரான மலையாளத்தாரிடையும், கிழக்கிந்தியத் தீவுகள் பலித் தீவுகள் முதலியவற்றிலுள்ள மக்களிடையும் காணப்படும் தாய்வழி உரிமையாம். இன்றும் இவ் வுரிமையைக் குறிக்கும் தாயம் என்ற பழந்தமிழ்ச்சொல் வடமொழிச் சட்ட நூல்வரைச் சென்று 'தாய பாகம்' என வழங்குதல் காண்க.

இன்னும் வாழ்க்கை அமைதி, சமயக் கொள்கை, கோயி லமைப்பு, ஒழுக்க நிலை முதலிய பலவகைகளிலுங்கூடப் பழந்தமிழர் இலெமூரியரையும், எகிப்தியரையும், அமெரிக்க மயநாகரிக மக்களையும் பல நுண்

ணிய செய்திகளில் ஒத்திருக்கின்றமை காணலாம். தமிழ்ச் சித்தர் நூல்களை நுணுகி ஆய்வோர்க்கு இன்னும் பலப்பல ஒப்புமைகள் புலப்படக்கூடும் என்றும் நாம் நம்புகிறோம்.

இலெமூரியரின் கல்வெட்டுக்களிலும், வட இந்தியாவில் ஸிந்து ஆற்றுப் பக்கமுள்ள கல்வெட்டுக்களிலும் காணப்படும் எழுத்துக்கள் மொழிகள் முதலியவை தெளிவுபெறப் பொருள்கொள்ளப்பட்டால் தமிழரைப்பற்றிய பல புதைபட்ட உண்மைகள் விளங்கலாம். தமிழர் முன்னேற்றத்திற்கு இஃது ஒரு முதற்படியாக உதவும்.

முற்றும்.

# கழக வெளியீடு

## தமிழர்தம் தொன்மையும் தனிச்சிறப்பும் பயனும் விளக்கக்கூடிய நூல்கள் மேலும் தொடர்ந்து வெளியிடப்பெறும்.

### இந்நூலில்

தென்னிந்தியாவின் தென்பகுதியில் ஒரு பெரிய நிலப்பகுதி இருந்த தென்பதும், அதுவும் இப்போதுள்ள தென்னிந்தியாவும் சேர்ந்ததே பழைய தமிழகமென்பதும், அங்கிருந்தே உலகமெங்கும் நாகரிகம் பரவிய தென்பதும், இப்போதுள்ள தென்னிந்திய நிலப்பகுதி உலகத்திலேயே என்றுங் கடல்கோட் படாத நிலையான மிகப் பழைய நிலமாகு மென்பதும், பிறவும் மிகவுந் தெளிவாக விளக்கப்பெற்றிருக்கின்றன.

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.
திருநெல்வேலி :: சென்னை